தமிழரசு

Tamilarasu

(Monthly)

மார்ச் 2023 (March 2023)
விலை ரூ.20/– (Price Rs.20/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 53
இதழ் (Issue) : 9

ஏற்றமிகு ஏழு திட்டங்கள்

புதிய திட்டங்கள் தொடக்க விழா
பணி ஆணைகள் – அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா
ரூ.1,136 கோடியில் 44 பல்வேறு மருத்துவமனை கட்டடங்களுக்கான
அடிக்கல் நாட்டு விழா

அடிக்கல் நாட்டுபவர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

நாள் : 28.2.2023,
செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி

இடம் : அண்ணா நூற்றாண்டு
நினைவு நூலக அரங்கம், சென்னை.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 15.02.2023 அன்று “களஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின்கீழ், சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டபோது, பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் அளித்த கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2054
சுபகிருது வருடம் : மாசி - பங்குனி
மார்ச் 2023

மலர் : 53 விலை ரூ.20 இதழ் : 9

ஆசிரியர் - வெளியிடுபவர்
த. மோகன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
க.அ. முகம்மது ரசூல்
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
கு. சுபாஷ்
இரா. பாலாஜி
மு. பரத்குமார்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு. குறள் : 234

இனிவரும் புதிய உலகம் கூட இன்றைய உலகில் தன்னலம் துறந்து புகழ் ஈட்டிய பெருமக்களை விடுத்து, அறிவாற்றல் உடையவரை மட்டும் போற்றிக் கொண்டிராது.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் 4

★ ரூ.1,136.32 கோடி மதிப்பீட்டில் 44 மருத்துவக் கட்டடங்கள் உட்பட "ஏற்றமிகு ஏழு திட்டங்கள்" தொடக்கம் 10

★ சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டம் 21

★ திருவாரூர் கிடங்கு வளாகத்தில் புதியதாக கட்டித் திறக்கப்பட்ட மேற்கூரையுடன் கூடிய நவீன நெல் சேமிப்பு நிலையத்தில் ஆய்வு 31

★ ரூ.105.08 கோடி மதிப்பீட்டில் 106 நவீன நெல் சேமிப்புத் தளங்கள் 33

★ திருவள்ளூர் மாவட்டத்தில் "புதுமைப்பெண்" திட்டத்தின் இரண்டாம் கட்டம் துவக்கம் 39

★ மாணவர்களின் நலனுக்காக அயராது பாடுபட்டு வரும் ஆசிரியர்களை சிறப்பிக்கும் வகையில் ரூ.225 கோடி மதிப்பீட்டில் ஆசிரியர்கள் நலன் காக்கும் புதிய திட்டங்கள் 45

★ கனமழையால் பாதிக்கப்பட்ட டெல்டா மற்றும் இதர மாவட்ட விவசாயிகளுக்கு பயிர் நிவாரண உதவி 49

★ தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் வசிக்கும் 120 மாணவர்களுக்கு ரூ.39.20 இலட்சம் கல்வி உதவித்தொகை 51

★ அதி உயர் தூய்மையான திரவ மருத்துவ ஆக்ஸிஜன் உற்பத்தி ஆலை 57

★ கலைஞரின் எழுத்துக்களில் இலக்கியம் - கட்டுரை 71

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 28.02.2023 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நினைவு நூலக அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், ஏற்றமிகு ஏழு திட்டங்களின்கீழ், 36 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள 433 பள்ளிகளில் பயிலும் 56,098 மாணவர்கள் பயன்பெறும் வகையில், விரிவுப்படுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினைத் தொடங்கிவைக்கும் விதமாக 3 மாணவர்களுக்கு காலை உணவுப் பெட்டகத்தை வழங்கினார்.

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின்
அவர்களின் பிறந்தநாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
01.03.2023 அன்று,
தமது 70ஆவது பிறந்த நாளையொட்டி,
கோபாலபுரம் இல்லத்தில்
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்
திருவுருவப்படத்திற்கும்,
வேப்பேரி, பெரியார் திடலில் அமைந்துள்ள
தந்தை பெரியார் அவர்களின்
நினைவிடத்திலும், மெரினா கடற்கரையில்
அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா
அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர்
அவர்களின் நினைவிடத்திலும்
மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துக்கள்...

மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் திருமதி **திரௌபதி முர்மு** அவர்கள் எழுதியுள்ள பிறந்தநாள் வாழ்த்துக் கடிதத்தில், தங்களுக்கு எனது மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, நல்ல ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் கிடைத்திடவும், மேலும் பல ஆண்டுகள் தொடர்ந்து நாட்டிற்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றிடவும் வாழ்த்துகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்கள் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு, தனது பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்தார். பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது நன்றியினைத் தெரிவித்துக்கொண்டார்.

மாண்புமிகு இந்திய குடியரசு துணைத் தலைவர் திரு. **ஜகதீப் தன்கர்** அவர்கள் எழுதியுள்ள பிறந்தநாள் வாழ்த்துக் கடிதத்தில், "எனது அன்பான பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு, நாட்டிற்கு சேவையாற்றிட மகிழ்ச்சியான, ஆரோக்கியமான வாழ்க்கை கிடைத்திட வாழ்த்துகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு. **அமித் ஷா** அவர்கள் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு தனது பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்களுக்கு தனது நன்றியினைத் தெரிவித்துக்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **ஆர்.என்.ரவி** அவர்கள் எழுதியுள்ள பிறந்தநாள் வாழ்த்துக் கடிதத்தில், "பிறந்தநாள் காணும் தாங்கள் நீண்ட ஆயுளுடனும், நிறைந்த ஆரோக்கியத்துடனும் வாழ பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கு மாண்புமிகு தெலுங்கானா மாநில ஆளுநர் திருமதி **தமிழிசை சௌந்தரராஜன்** அவர்கள் தனது பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கு அகில இந்திய காங்கிரஸ் பேரியக்கத்தின் முன்னாள் தலைவர் திருமதி **சோனியா காந்தி** அவர்கள் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு, தனது பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அகில இந்திய காங்கிரஸ் பேரியக்கத்தின் முன்னாள் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. **ராகுல் காந்தி** அவர்கள், இலண்டனிலிருந்து தொலைபேசி வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தொடர்புகொண்டு, "நல்ல ஆரோக்கியத்துடனும், மகிழ்ச்சியுடனும் வாழ வாழ்த்துகிறேன்" என்று பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கு, மாண்புமிகு கேரள மாநில முதலமைச்சர் திரு. **பினராயி விஜயன்** அவர்கள், சமூக வலைதளங்கள் வாயிலாக பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கு, மாண்புமிகு டெல்லி முதலமைச்சர் திரு. **அரவிந்த் கெஜ்ரிவால்** அவர்கள், வலைதளங்கள் வாயிலாக பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கு, மாண்புமிகு ஆந்திரா மாநில முதலமைச்சர் திரு. **ஒய்.எஸ்.ஜெகன்மோகன் ரெட்டி** அவர்கள் சமூக வலைதளங்கள் வாயிலாக பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு,

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர்
திரு. **சீத்தாராம் யெச்சூரி** அவர்கள்,

மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர்
திரு. **எல். முருகன்** அவர்கள்,

பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர்
திரு. **அண்ணாமலை** அவர்கள்,

முன்னாள் ஒன்றிய அமைச்சர்
திரு. **பொன். ராதாகிருஷ்ணன்** அவர்கள்,

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர்
மருத்துவர் **இராமதாசு** அவர்கள்,

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான
மருத்துவர் **அன்புமணி இராமதாசு** அவர்கள்,

பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர்
திரு. **ஜி.கே.மணி** அவர்கள்,

மக்கள் நீதி மய்யத்தின் தலைவர்
திரு. **கமலஹாசன்** அவர்கள்,



நடிகர்
திரு. **ரஜினிகாந்த்** அவர்கள்,

இசைஞானி
திரு. **இளையராஜா** அவர்கள்,

தேசிய முற்போக்கு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்
திரு. **விஜயகாந்த்** அவர்கள்,

சமத்துவ மக்கள் கட்சித் தலைவர்
திரு. **சரத்குமார்** அவர்கள்,

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர்
திரு. **சீமான்** அவர்கள்,

தவத்திரு குன்றக்குடி **பொன்னம்பல அடிகளார்** அவர்கள்,

இங்கிலாந்து துணை மேயர் டாக்டர் **மோனிகா தேவேந்திரன்** அவர்கள், மாண்புமிகு கேரளா மாநில கல்வி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. **வி.சிவன்குட்டி** அவர்கள், நடிகை **காயத்ரி ரகுராம்** அவர்கள் ஆகியோர்கள் பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி 28.02.2023 அன்று சென்னை, சிறுமலர் பார்வை மற்றும் செவித்திறன் குறைபாடுடையோர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் உரையாற்ற வேண்டும் என்று அறிமுகப்படுத்தி பேசிய சகோதரி அவர்கள், வீரஉரையாற்றப் போகிறேன் என்று சொன்னார், ஆனால் நான் வீர உரையாற்ற வரவில்லை, பாச உரையாற்ற வந்திருக்கிறேன்.

நீங்கள் என் மீது கொண்டிருக்கக்கூடிய அன்பு, என் மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கை, அதேபோல் நான் உங்கள் மீது வைத்திருக்கக்கூடிய பாசம், அன்பு, அந்த உணர்வோடு உங்களுக்கு நன்றி சொல்ல, உங்களுடைய வாழ்த்துக்களைப் பெற, நான் இங்கு வந்திருக்கிறேன்.

1984லிருந்து தொடர்ந்து ஒவ்வொரு பிறந்தநாளுக்கும் இந்த பள்ளிக்கு உங்களை காண நான் வருவதுண்டு. ஆனால் தொடக்கத்தில் பிறந்தநாள் அன்று வருவேன். இப்பொழுது எல்லாம் பிறந்தநாளுக்கு முதல் நாளே உங்களை சந்திக்கக்கூடிய வாய்ப்பை நான் தொடர்ந்து பெற்று வருகிறேன். காரணம், பிறந்தநாள் அன்று வந்தால் நீண்ட நேரம் உங்களிடத்திலே இருந்து உங்களுடைய கலை நிகழ்ச்சிகளை, உங்களுடைய அன்பை, தொடர்ந்து நீண்ட நேரம் பெற முடியாது, வேகவேகமாக நான் செல்ல வேண்டிய சூழ்நிலை.

அதனால்தான் முன்கூட்டியே முதல் நாளே வந்து, ஆற அமர உங்களிடத்திலே உட்கார்ந்து, உங்களுடன் உரையாடி, கலை நிகழ்ச்சிகளை, உங்களுடைய அன்பை, உங்கள் வாழ்த்துக்களை பொறுமையாக பெற்றுச் செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் முன்கூட்டியே வந்திருக்கின்றேன்.

ஒவ்வொரு முறையும் நான் சொல்வது உண்டு, எனக்கு நாளை 70ஆவது பிறந்தநாள். நான் பல நேரங்களில் சொல்வதுண்டு, ஆண்டிற்கு இரண்டு முறை, மூன்று முறை பிறந்தநாள் வரக்கூடாதா, வந்தால் அடிக்கடி உங்களை வந்து பார்க்கலாமே. அந்த வாய்ப்பு கிடைக்குமே என்று நான் பலமுறை ஏங்கியதுண்டு. ஆனால் அப்படி வந்தால் வயது அதிகமாகிக் கொண்டே இருக்கும்.

எது எப்படி இருந்தாலும், உங்களை சந்திக்கும் போதெல்லாம் எனக்கு பெரிய மகிழ்ச்சியான உணர்வு, இங்கே வாழ்த்துகளை மட்டும் அல்ல இங்கே வரவேற்புரை ஆற்றியபோதும் சரி, எனக்கு வாழ்த்து சொன்ன போதும் சரி, கலை நிகழ்ச்சிகள் மூலமாக பாடல்கள் ஒலித்த நேரத்திலும் சரி, நீங்கள் வாழ்த்து மட்டும் அல்ல, ஏறக்குறைய 22 மாதங்களாக நடந்துகொண்டு இருக்கக்கூடிய நம்ம ஆட்சி, நான் என்னுடைய ஆட்சி என்று சொல்ல மாட்டேன், நம்முடைய ஆட்சி, உங்கள் ஆட்சி, அந்த ஆட்சியில் செய்து கொண்டிருக்கக்கூடிய சாதனைகளை எல்லாம் பட்டியல் போட்டீர்கள், ஓ! நாம் இவ்வளவு செய்திருக்கிறோமா என்று எனக்கே வியப்பாக இருக்கிறது. அந்த அளவிற்கு நீங்கள் அதை எல்லாம் நினைவுப்படுத்தி, வரிசைப்படுத்தி, மனதில் வைத்துக் கொண்டு, நாங்கள் மறந்தாலும், நீங்கள் மறக்காமல், இங்கே சுட்டிக்காட்டியதை நான் எப்படி கருதுகிறேன் என்றால், இன்னும் நிறைய செய்ய வேண்டும், இன்னும் உங்களுடைய பாராட்டை பெற வேண்டும் என்று எண்ணுகிறேன்.

அப்படிப்பட்ட ஒரு ஆட்சியை, உங்களுடைய நம்பிக்கைக்கு ஏற்ற வகையிலே நாம் இங்கே நடத்திக்கொண்டு இருக்கிறோம். இன்னும் ஒரு செய்தியை கூட நான் அடிக்கடி சொல்வதுண்டு. நான், இந்த பள்ளிக்கு பல பொறுப்புகளிலிருந்து வந்திருக்கிறேன். 1984ஆம் ஆண்டிலிருந்து வந்து கொண்டு இருக்கிறேன் என்றால், எம்.எல்.ஏ.-வாக வந்திருக்கிறேன், சென்னை மாநகர மேயராக வந்திருக்கிறேன், உள்ளாட்சித்துறை அமைச்சராக வந்திருக்கிறேன், துணை முதலமைச்சராக இருந்தபோதும் வந்திருக்கிறேன், எதிர்கட்சித் தலைவராகவும் வந்திருக்கிறேன், இன்றைக்கு முதலமைச்சராக வந்து கொண்டிருக்கிறேன்.

ஆனால் ஒன்றை மட்டும் உறுதியாக சொல்லிக் கொள்கிறேன். எந்த பொறுப்பில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், எப்போதும் வருவேன், எல்லா ஆண்டும் வருவேன், அந்த பாசம் எனக்கு உங்களிடம் இருக்கிறது, இந்த சிறுமலர் பள்ளியை பொறுத்தவரைக்கும் நான் அந்த பாசத்தை பெற்றிருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, நான் எத்தனை பொறுப்புகளில் இருந்தாலும், எத்தனை நிகழ்ச்சிகளுக்கு சென்றாலும், அது அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, கட்சி நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, அல்லது பொதுவான நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் அதிலே கிடைக்கின்ற சிறப்பைவிட, அதிலே கிடைக்கின்ற பெருமையைவிட, அதிலே கிடைக்கின்ற மகிழ்ச்சியைவிட, இங்கே வருகிறபோதுதான் நான் அதிகமான பூரிப்பை, மகிழ்ச்சியை பெறுவதுண்டு. அந்த வகையிலே தான் நீங்கள் தெரிவித்திருக்கக்கூடிய வாழ்த்துக்களை, உற்சாகத்தை உங்களுடைய நம்பிக்கையை என்றும் மனதில் வைத்துக்கொண்டு, என்னுடைய பணியை உங்களுக்காக நிறைவேற்ற காத்திருக்கிறேன், தயாராக இருக்கிறேன் என்பதை மட்டும் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, மீண்டும் உங்களுடைய அன்பான வாழ்த்துக்களுக்கு ஈடு இணை எதுவும் கிடையாது, அதை யாரும் மறுக்க முடியாது, அப்படி ஈடு இணையற்ற உங்களுடைய வாழ்த்துக்களை பெற்ற நான், மீண்டும் உங்கள் எல்லோருக்கும் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியை தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

ரூ.1,136.32 கோடி மதிப்பீட்டில் 44 மருத்துவக் கட்டடங்கள் உட்பட "ஏற்றமிகு ஏழு திட்டங்கள்" தொடக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏழு திட்டங்கள் துவக்க விழாவில் ஆற்றிய உரை - 28.02.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 28.02.2023 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நினைவு நூலக அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், ஏற்றமிகு ஏழு திட்டங்களின்கீழ், ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு சிறப்பு ஊட்டச்சத்து வழங்கும் திட்டம், திருநங்கையர்களுக்கான மாதாந்திர உதவித் தொகையை 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக உயர்த்தி வழங்கும் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் விரிவாக்கம் செய்யும் திட்டம், சென்னை மாநகரப் பகுதியில் கழிவுநீர் அகற்றும் பணிகளை நவீனப்படுத்தி, தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களை தொழில்முனைவோர்களாக ஒருங்கிணைத்து மேற்கொள்வதற்கான சிறப்புத் திட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ஆகியவற்றைத் தொடங்கி வைத்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ரூ.1,136.32 கோடியில் 44 புதிய மருத்துவமனைக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு அரசுப் பணிகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாகத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கும், கருணை அடிப்படையிலும் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், அறிவுச்சுடர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வகுத்த சமூகநீதிப் பாதையில், ஏழை, எளிய நடுத்தர மக்கள், விவசாயிகள், மாணவர்கள் என அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், அனைவருக்குமான வளர்ச்சி, அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி, அனைத்து சமூக வளர்ச்சி என்ற திராவிட மாடல் ஆட்சியின் அடிப்படையில், விவசாயிகளின் வாழ்வு மலர்ந்திட 1.50 இலட்சம் இலவச மின் இணைப்பு வழங்கும் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மகளிருக்கு இலவச பேருந்துப் பயண சலுகை, உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டத்தின்கீழ் மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்கும் திட்டம், பள்ளி, கல்லூரி

மாணவ, மாணவியர்கள் மற்றும் இளைஞர்கள், படிப்பில் மட்டுமல்லாது, வாழ்க்கையிலும் வெற்றியாளராக்கும் வகையில் திறன் மேம்பாட்டு மற்றும் வழிகாட்டுதல் திட்டமாகிய **'நான் முதல்வன்'** திட்டம், இல்லம் தேடி கல்வி, மக்களைத் தேடி மருத்துவத் திட்டம், இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48 திட்டம், அரசுப் பள்ளிகளை மேம்படுத்திட நம்ம ஸ்கூல் ஃபவுண்டேஷன் திட்டம், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், உங்கள் தொகுதியில் முதலமைச்சர், கள ஆய்வில் முதலமைச்சர், எழுத்தாளர்களுக்கான கனவு இல்லம் திட்டம், தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒலிம்பிக் தங்கவேட்டை திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்றமிகு ஏழு திட்டங்களைத் தொடங்கி வைக்கும் விதமாக:

ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கான சிறப்பு ஊட்டச்சத்து வழங்கும் திட்டம்

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் "ஊட்டச்சத்தை உறுதிசெய்" திட்டத்தின்கீழ், 6 மாதம் முதல் 6 வயது வரையுள்ள கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய 1,11,216 குழந்தைகளின் ஊட்டச்சத்தினை மேம்படுத்தும் வகையில் 8 வாரங்களுக்கு (56 நாட்கள்) சிறப்பு உணவாக, உடனடியாக உட்கொள்ளும் சிகிச்சை உணவு (Ready to Use Therapeutic Food - RUTF) அளிக்கவும், 0 முதல் 6 மாதம் வரையுள்ள 11,917 கடுமையான ஊட்டச் சத்துக் குறைபாடுடைய குழந்தைகளின் தாய்மார்களுக்கு அவர்களின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்தி குழந்தைகளுக்குத் தேவையான தாய்ப்பால் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் 2 ஊட்டச்சத்து பெட்டகங்களும் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துப் பெட்டகங்களை வழங்கினார்.

உடனடியாக உட்கொள்ளும் சிகிச்சை உணவு (RUTF) என்பது குழந்தைகளின் ஊட்டச்சத்தை மேம்படுத்தக்கூடிய UNICEF அமைப்பினால் பரிந்துரைக்கப்பட்ட வழுவழுப்பான பசை (paste) போன்று இருக்கும் உணவுப் பொருளாகும். இதில், அரைத்த வேர்க்கடலை, பால் பவுடர், எண்ணெய், சர்க்கரை, வைட்டமின்கள் மற்றும் மினரல் ஆகிய பொருட்கள் அடங்கி இருக்கும்.

ஊட்டச்சத்து குறைபாடுள்ள தாய்மார்களுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்துப் பெட்டகத்தில், தாய்மார்களுக்கான சிறப்பு ஆரோக்கிய உணவுக் கலவை, இரும்புச் சத்து மருந்து (Iron syrup), விதை நீக்கப்பட்ட பேரீச்சம் பழம், குடற்புழு நீக்க மாத்திரை, ஆவின் நெய் மற்றும் பருத்தி துண்டு ஆகியன அடங்கியிருக்கும்.

திருநங்கையர்களுக்கான ஓய்வூதியத்தை 1,500 ரூபாயாக உயர்த்தி வழங்கும் திட்டம்

திருநங்கையர்களுக்கு கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்வதற்காகவும், சமுதாயத்தில் அவர்களுக்கான அங்கீகாரத்தை ஏற்படுத்தவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் "திருநங்கையர்" என்று அவர்களுக்குப் பெயர்

சூட்டி, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாட்டில், 2008ஆம் ஆண்டு திருநங்கைகள் நல வாரியத்தை அமைத்தார்.

திருநங்கைகள் நல வாரியத்தின் மூலம் திருநங்கையர்களுக்கு அடையாள அட்டை, குடும்ப அட்டை, சுயதொழில் தொடங்க மானியத் தொகை, சுயஉதவிக் குழு பயிற்சி, காப்பீட்டுத் திட்ட அட்டை, இலவச தையல் இயந்திரங்கள் போன்றவை வழங்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, தங்களது வாழ்வாதாரச் செலவுகளுக்கு வருமானம் ஈட்ட இயலாத 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற ஏழ்மை நிலையிலுள்ள திருநங்கைகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

திருநங்கையர்களுக்கு தற்போது வழங்கப்படும் ரூ.1,000 ஓய்வூதியத் தொகையை ரூ.1,500ஆக உயர்த்தி வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 3 திருநங்கையர்களுக்கு உயர்த்தப்பட்ட ஓய்வூதிய தொகைக்கான ஆணைகளை வழங்கினார்.

மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்

தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் ஏழை, எளிய மக்களுடைய குழந்தைகளின் கற்றல் இடைநிற்றலைத் தவிர்க்கவும், ஊட்டச்சத்து குறைபாட்டினைப் போக்கவும், வருகையை அதிகரிக்கவும், வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையைக் குறைக்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்குச் செல்லும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை 15.09.2022 அன்று தொடங்கி வைத்தார்.

தற்போது, 15 மாநகராட்சிகள் மற்றும் 23 நகராட்சிகள் உள்ளடக்கிய 38 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் அமைந்துள்ள 539 பள்ளிகளில் பயிலும் 50,306 மாணவர்களுக்கு, இத்திட்டத்திற்கென சிறப்பாக அமைக்கப்பட்ட 46 ஒருங்கிணைப்பு சமையற்கூடங்களில் தினந்தோறும் உணவு சமைக்கப்பட்டு, சமைக்கப்பட்ட உணவு சூடான வெங்கலனில் (Hot box) நிரப்பப்பட்டு, சிறப்பு வாகனங்கள் மூலமாக ஒவ்வொரு பள்ளிக்கும் உரிய நேரத்தில் கொண்டு செல்லப்பட்டு, மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்களால் வெகுவாக வரவேற்கப்பட்டு வரும் இத்திட்டத்தினை, மேலும் விரிவுபடுத்தும் வகையில், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், கடலூர், தஞ்சாவூர், கும்பகோணம், வேலூர், ஆவடி, மதுரை, சேலம், திண்டுக்கல், திருநெல்வேலி, ஈரோடு, நாகர்கோவில், கோயம்புத்தூர், தூத்துக்குடி ஆகிய மாநகராட்சிகளிலும், மேட்டுப்பாளையம், மதுக்கரை, கோவில்பட்டி, விழுப்புரம், திருவண்ணாமலை, திருவத்திபுரம், ஆற்காடு, ஆம்பூர், வாணியம்பாடி, புதுக்கோட்டை, பெரம்பலூர், ஜெயங்கொண்டம், நாகப்பட்டினம், மன்னார்குடி, சீர்காழி, நாமக்கல், திருச்செங்கோடு, பரமக்குடி, காரைக்குடி, நந்திவரம் கூடுவாஞ்சேரி, மறைமலைநகர் ஆகிய நகராட்சிகளிலும், என மொத்தம் 36 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள 433 பள்ளிகளில் பயிலும் 56,098 மாணவர்கள் பயன்பெறும் வகையில், விரிவுப்படுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கும் விதமாக 3 மாணவர்களுக்கு காலை உணவுப் பெட்டகத்தை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (CMWSSB) மற்றும் தலித் இந்திய வர்த்தக மற்றும் தொழிற்சங்கம் (DICCI) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் பாதாள சாக்கடை பராமரிப்பு மற்றும் கழிவுநீர்

அகற்றும் பணிகளில் ஈடுபடும் தூய்மைப் பணியாளர்களின் உயிரிழப்பை முற்றிலும் தவிர்ப்பதற்காக இப்பணிகளை நவீன இயந்திரங்கள் மூலம் நிறைவேற்றிட, தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களை தொழில் முனைவோர்களாக ஒருங்கிணைத்து செயல்படுத்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (CMWSSB) மற்றும் தலித் இந்திய வர்த்தக மற்றும் தொழிற்சங்கம் (DICCI) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்மூலம், இறந்த தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தினரை அடையாளம் கண்டு அவர்களுக்கு தொழில் தொடங்குவதற்குத் தேவையான அறிவுரைகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்குத் தேவையான வழிமுறைகளை வழங்கி, ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க அனைத்து பயிற்சிகளையும் அளித்து, அரசு திட்டங்களிலிருந்து மானியத்தைப் பெற்று தொழில் முனைவராக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், தூய்மைப் பணியாளர்கள் கழிவுநீர் குழாய்களில் மேற்கொள்ளும் பராமரிப்புப் பணிகளை நவீன இயந்திரங்களைக் கொண்டு கையாளுவது, நச்சுத் தொட்டிகளை பாதுகாப்பாக சுத்தப்படுத்தத் தேவையான இயந்திரங்களை கையாள்வது உள்ளிட்ட பயிற்சிகளை வழங்கி அவர்களை துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவன அமைப்பாக மாற்றுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இத்திட்டம் சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மூலமாக சென்னை பெருநகரப் பகுதியில் செயல்படுத்தப்படவுள்ளது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் ரூ.1,136.32 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 44 மருத்துவக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

அரியலூர் மாவட்டம்-ஜெயங்கொண்டம், செங்கல்பட்டு மாவட்டம்-தாம்பரம், திண்டுக்கல் மாவட்டம்-பழனி, கள்ளக்குறிச்சி மாவட்டம்-திருக்கோவிலூர், இராமநாதபுரம் மாவட்டம்-பரமக்குடி, திருவள்ளூர் மாவட்டம்-திருத்தணி, திருப்பத்தூர் மாவட்டம்-திருப்பத்தூர், திருப்பூர் மாவட்டம்-காங்கேயம், வேலூர் மாவட்டம்-குடியாத்தம், விழுப்புரம் மாவட்டம்-திண்டிவனம், விருதுநகர் மாவட்டம்-அருப்புக்கோட்டை ஆகிய அரசு மருத்துவமனைகள் ரூ.550.85 கோடி செலவில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளாக தரம் உயர்த்திடவும்;

தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உயர் சிறப்பு சிகிச்சை கட்டடம், தூத்துக்குடி மாவட்டம்-திருச்செந்தூர் அரசு

மருத்துவமனையில் தாய் சேய் நலப் பிரிவு மற்றும் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டடம், திருப்பத்தூர் மாவட்டம்-ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி அரசு மருத்துவமனைகளில் புறநோயாளிகள் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு, எக்ஸ்ரே பிரிவு கட்டடம் என ரூ.206.82 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கட்டடங்கள்;

செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மதுரை மாவட்டம்-மேலூர், கிருஷ்ணகிரி மாவட்டம்-ஊத்தங்கரை மற்றும் சென்னை மாவட்டம் -சோழிங்கநல்லூர் ஆகிய அரசு மருத்துவமனைகளில் ரூ.131 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 50 படுக்கைகள் மற்றும் 100 படுக்கைகள் கொண்ட அவசரகால கவனிப்புப் பிரிவுக் கட்டடங்கள்;

சென்னை-அரசு கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, ஆர்.எஸ்.ஆர்.எம் மருத்துவமனை, கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை,திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தருமபுரி மாவட்டம்-பென்னாகரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, சென்னை-தண்டையார்பேட்டை அரசு மருத்துவமனை, திருப்பூர் மாவட்டம்-அவினாசி அரசு மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளில் ரூ.120.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய தாய் சேய் நலப் பிரிவுக் கட்டடங்கள்;

காஞ்சிபுரம் மாவட்டம்-காரப்பேட்டை, அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக கட்டப்படவுள்ள மூன்று தளங்கள்; இராமநாதபுரம் மாவட்டம்-பரமக்குடி அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடங்கள், அரியலூர் மாவட்டம்-ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் ஒருங்கிணைந்த அவசரகால சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் என ரூ.13 கோடி மதிப்பீட்டிலானக் கட்டடங்கள்;

கடலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் மாவட்டம்-பொள்ளாச்சி, திருவண்ணாமலை மாவட்டம்-செய்யார், சென்னை-சைதாப்பேட்டை மருத்துவமனை, திருநெல்வேலி மாவட்டம்-வள்ளியூர், திண்டுக்கல் மாவட்டம்-பழனி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்-மணப்பாறை, மதுரை மாவட்டம்-மேலூர் ஆகிய மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய ஒருங்கிணைந்த ஆய்வகங்கள்;

கடலூர் மாவட்டம்-மஞ்சகொல்லை மற்றும் ஒரங்கூர், திண்டுக்கல் மாவட்டம்-ஆடலூர் பன்றிமலை, மார்க்கம்பட்டி மற்றும் சிவகங்கை மாவட்டம்- சங்கராபுரம் ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.6 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய கட்டடங்கள்;

என மொத்தம், ரூ.1,136.32 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 44 மருத்துவக் கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம்

வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் அமைத்துத் தருவதற்கு ஏதுவாக, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிடும் திட்டத்தினைத் தொடங்கி வைக்கும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 மாற்றுத்திறனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்.

பல்வேறு அரசுத் துறைகளுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கும், கருணை அடிப்படையிலும் பணி நியமன ஆணைகள்

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் குடும்ப நல இயக்குநரகத்திற்காக வட்டார சுகாதார புள்ளியியலாளர் பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட 192 நபர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கும்;

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககத்திற்காக கணக்கிடுபவர் மற்றும் தடுப்பூசி பண்டகக் காப்பாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 28 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 2 நபர்களுக்கும்;

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் உதவி இயக்குநர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 3 நபர்களுக்கும்;

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், வருவாய் உதவியாளர், அலுவலக உதவியாளர், பதிவறை எழுத்தர், பணி ஆய்வர் ஆகிய பணியிடங்களுக்கு 50 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இந்தத் திட்டத்தைப் பற்றி நம்முடைய திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

இந்த ஏற்றமிகு ஏழு திட்டங்கள் நடைபெறக்கூடிய இடத்தை நான் எண்ணிப் பார்க்கிறேன். இந்த இடத்தைப் பற்றி நான் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றுச் சொன்னால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய வரிகளில் சொல்ல வேண்டுமென்றுச் சொன்னால்,

மூன்றெழுத்திலே ஒரு சிறப்புண்டு, முத்தமிழ் மணமுண்டு! மூவேந்தர் முக்கொடி முக்கனியென மும்முரசு ஆர்த்தவர் தமிழர்.

அவர் வாழ்ந்த தமிழ் “வாழ்வு”க்கு மூன்றெழுத்து.

அந்த வாழ்வுக்கு அடிப்படையாம் “அன்பு”க்கு மூன்றெழுத்து..

அன்புக்குத் துணை நிற்கும் “அறிவு”க்கு மூன்றெழுத்து

அறிவார்ந்தோர் இடையில் எழும், “காதலு”க்கு மூன்றெழுத்து..

காதலர்கள் போற்றி நின்ற கடும் “வீரமோ” மூன்றெழுத்து..

வீரம் விளைக்கின்ற “களம்” மூன்றெழுத்து...

களம் சென்று காணுகின்ற “வெற்றி” மூன்றெழுத்து

அந்த வெற்றிக்கு நமையெலாம் ஊக்குவிக்கும்

அமைதிமிகு “அண்ணா” மூன்றெழுத்து!

பேரறிஞர் அண்ணாவைப் பற்றி முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பாடியது இது!

அத்தகைய பெருமைமிகு பேரறிஞர் அண்ணா அவர்களது பெயரால் அமைந்துள்ள இந்த நூலக அரங்கத்தில் நடைபெறும் விழாவில் கலந்துகொள்வதின் மூலமாக நான் உணர்ச்சியையும் எழுச்சியையும் பெறுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைப்பதற்கு முன்பு, திருச்சியில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தினோம். பொதுக்கூட்டம் என்று சொன்னால், அது அரசியல் காரணங்களுக்காகக் கூட்டப்பட்ட, வழக்கமான பொதுக்கூட்டம் அல்ல. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்தால், தமிழ்நாட்டில் எத்தகைய மாற்றத்தை நாங்கள் உருவாக்கித் தருவோம் என்பதற்கான மிக முழுமையான திட்டமிடுதலாக அந்தக் கூட்டத்தைக் கூட்டி இருந்தோம். அதாவது மிகப்பெரிய இலட்சியங்களை விளக்கக் கூடிய மாபெரும் மாநாடாக அது அமைந்திருந்தது. நமது ஆட்சி எத்தகையதாக அமையும் என்பதை நான் சொன்னேன். அடுத்த பத்தாண்டுக்கான செயல்திட்டத்தை ஆட்சிக்கு வருவதற்கு முன்னதாகவே திட்டமிட்டுச் சொன்னேன்.

வளரும் வாய்ப்புகள் - வளமான தமிழ்நாடு! மகசூல் பெருக்கம் - மகிழும் விவசாயி! குடிமக்கள் அனைவருக்கும் குறையாத தண்ணீர்! அனைவருக்கும் உயர்தர கல்வி மற்றும் உயர்தர மருத்துவம்! அனைவருக்கும் அனைத்துமான தமிழ்நாடு! எழில்மிகு மாநகரங்களின் மாநிலம்! உயர்தர ஊரகக் கட்டமைப்பு- உயர்ந்த வாழ்க்கைத்தரம்! இவைதான் அந்த உறுதிமொழிகள்.

'ஸ்டாலினின் ஏழு வாக்குறுதிகள்' என்று அவை திருச்சி மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

பொருளாதாரம், வேளாண்மை, குடிநீர், கல்வி, நகர்ப்புர வளர்ச்சி, சமூக பாதுகாப்பு, ஊரக வளர்ச்சி ஆகிய ஏழு இலக்குகளோடு எங்களது பயணம் அமையும் என்று நான் குறிப்பிட்டேன்.

அந்த இலக்கை நோக்கிய பயணத்தை வெற்றிகரமாகத் தொடர்ந்துகொண்டு இருக்கிறோம் என்ற மகிழ்ச்சியை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் நான் மிகுந்த பெருமைப்படுகிறேன்.

கட்டணமில்லா பேருந்துப் பயணம்

தேர்தல் அறிக்கை தயாரிக்கும்போது, முதன்முதலாக என்னென்ன திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று பல்வேறு தரப்பினருடன் நான் ஆலோசனை நடத்தினேன். அதில் மிக முக்கியமான ஆலோசனைதான் மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து வசதி வழங்குவது!

இப்படி அறிவித்தால், ஏற்கெனவே நலிவில் இருக்கக்கூடிய போக்குவரத்துத் துறையின் வருமானம் குறையும் என்று சொன்னார்கள். ஆனால் இதனை அறிவித்தால் இலட்சக்கணக்கான மகளிர் வாழ்க்கையில் மலர்ச்சி ஏற்படும் என்று நான் சொன்னேன்.

தேர்தலில் வென்றோம். பதவி பிரமாணம் எடுப்பதற்கு முன்னால், என்னென்ன திட்டம் அறிவிக்கலாம் அதிகாரிகள் என்னிடம் கேட்டார்கள். உடனே நான் சொன்னது மகளிருக்கு இலவச பேருந்து பயணம்தான்!

"முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்" என்று பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டவுடன் கோட்டைக்குச் சென்று நான் கையெழுத்து இட்ட முதல் கோப்பு மகளிருக்கு பேருந்து கட்டணம் ரத்து!

இதுநாள் வரையில், 236 கோடிப் பயணத்தை பெண்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். இதன் மூலமாக, பெண்கள் பொருளாதாரத் தன்னிறைவு அடைந்திருக்கிறார்கள். சமூகப் பங்களிப்பு அதிகமாகி வருகிறது. இன்றைய தினம் நமது ஆட்சிக்கு மிகப்பெரிய பேரும் புகழும் வாங்கித் தரும் திட்டமாக இது அமைந்திருக்கிறது.

அடுத்து கையெழுத்து ஆவின் பால் விலையை ரூ.3 குறைத்து அதையும் மகளிருக்காக ஏற்படுத்தித் தந்தோம்.

அதற்கு அடுத்த கையெழுத்து எது என்று கேட்டீர்களானால், கொரோனா காலக்கட்டத்தில் பல குடும்பங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. அதனால், ரூ.5,000 வழங்க வேண்டும் என்று அன்றைக்கு நான் கோரிக்கை வைத்தேன். ஆனால் அன்றைய ஆட்சியாளர்கள் காது கொடுத்து கேட்கவில்லை. ஆனால், நான் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் ரூ.4,000 வழங்க இரண்டாவது கையெழுத்து போட்டேன். வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகப்பெரிய பேருதவியாக அது அமைந்தது.

நான் முதல்வன் திட்டம்

இந்த வரிசையிலேதான், என்னுடைய கனவுத் திட்டமான இளைஞர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்றக்கூடிய திட்டமாக இருப்பது 'நான் முதல்வன்' திட்டம்!

கழக அரசு ஆட்சிக்கு வந்ததும் ஏராளமான தொழில் நிறுவனங்களை சார்ந்திருக்கக்கூடிய முதலீடுகள் வந்து சேர்ந்தன. அப்போது பல்வேறு தொழிலதிபர்களோடு உரையாடும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. புதிய தொழில் நிறுவனங்களைத் தொடங்கினாலும் அதில் பணியாற்ற திறமையான இளைஞர்கள் கிடைப்பது இல்லை என்று தொழிலதிபர்கள் சிலர் என்னிடத்தில் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதைக் கருத்தில் கொண்டு என் மனதில் உருவான திட்டம்தான் நான் முதல்வன் என்ற திட்டம்.

தமிழ்நாட்டு மாணவர்களை – இளைஞர்களை கல்வியில் - அறிவாற்றலில் - சிந்தனைத் திறனில் - பன்முக ஆற்றலில் முன்னேறியவர்களாக ஆக்குவதற்காக இந்தத் திட்டத்தை கடந்த ஆண்டு மார்ச் 1ஆம் தேதி தொடங்கி வைத்தேன். இந்த ஓராண்டு காலத்தில் 1,300க்கும் மேற்பட்ட பொறியியல் மற்றும் கலை அறிவியியல் கல்லூரிகளைச் சார்ந்திருக்கக்கூடிய 17 இலட்சத்திற்கும் அதிகமான திறமைசாலிகளை பயின்றும், பயிற்றுவிக்கப்பட்டும் இருக்கிறார்கள். தமிழ்நாட்டு இளைஞர்களை உலகில் முதன்மையானவர்களாக ஆக்குவதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகிறது. இது தலைமுறை தலைமுறைக்குப் பயன்படும் திட்டம்!

ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்ய இருக்கிறோம்.

இதுவரையில் ரூ.2 இலட்சம் கோடி மதிப்பிலான புதிய முதலீடுகளை ஈர்த்திருக்கிறோம்.

ரூ.2,563 கோடி மதிப்பிலான ஊரக குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மழையின் காரணமாக நீர்வளம் பெருகி உள்ளது. வரலாற்றில் இதுவரைக்கும் இல்லாத அளவில் வேளாண் பரப்பு அதிகமாகி, விளைச்சலும் அதிகமாகி இருக்கிறது. நாம் செயல்படுத்தி வரக்கூடிய திட்டங்களால் பள்ளிக் கல்வி முதல் உயர்கல்வி வரை மிகுந்த ஊக்கத்தை அடைந்து வருகின்றன.

ரூ.18,815 கோடி மதிப்பீட்டில் 446 குடிநீர்த் திட்டப்பணிகளும், ரூ.4,499 கோடி மதிப்பீட்டில் 23 பாதாள சாக்கடைத் திட்டங்களும் மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ரூ.49,385 கோடி மதிப்பீட்டில் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

பெண்களுக்கு இலவசப் பேருந்து பயணம் என்ற முதல் கையெழுத்தாகட்டும், அடுத்து அறிவிக்க இருக்கின்ற மகளிருக்கான உரிமைத் தொகையாகட்டும், அனைத்துமே சமூகப் பாதுகாப்புத் திட்டங்களாக அமைந்திருக்கிறது.

ஏழு முக்கியமான திட்டங்கள்

இதன் தொடர்ச்சியாக, ஏழு முக்கியமான திட்டங்களை இன்றைக்கு நான் தொடங்கி வைக்கிறேன்.

நாளை மார்ச் 1, என்னுடைய 70ஆவது பிறந்தநாள்!

இதில் சுமார் 55 ஆண்டுகாலம் அரசியலையே எனது வாழ்க்கையாக அமைத்துக் கொண்டிருக்கிறேன். தமிழ்நாட்டின் அனைத்துக் குடும்பங்களையும் எனது குடும்பமாக நினைத்து, மிக மிக இளமைக் காலத்திலேயே அரசியலுக்கு வந்தேன். 'அரசியலுக்கு வராமல் போயிருந்தால் என்னவாக ஆகியிருப்பீர்கள்?' என்று கேட்டபோது, 'அரசியலில்தான் நிச்சயம் நான் இருந்திருப்பேன்' என்று பதில் சொன்னவன் நான்.

அரசியல் என்பதை அதிகாரம், என்பதாக இல்லாமல், அதனைக் கடமையாகவும் தொண்டாகவும் சேவையாகவும் நினைக்க வைத்தவர்கள் தந்தை பெரியாரும் - பேரறிஞர் அண்ணாவும்- முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரும் - இனமானப் பேராசிரியர் அவர்களும்!

இவர்களது வழித்தடத்தில் வந்திருக்கக்கூடிய நான், கிடைக்கின்ற பொறுப்புகளின் மூலமாக மக்களுக்குச் சேவையாற்றும் இலக்குகளை எல்லாக் காலத்திலும் எனக்கு நானே வைத்துக் கொள்கிறேன். எனக்கு யாரும் இலக்கு வைக்கவில்லை. எனக்கு நானே இலக்கு வைத்துக் கொள்கிறேன். அந்த இலக்கை அடையவே எந்நாளும் உழைக்கிறேன்.

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்பதுதான் பொதுவான இலக்கு!

அதனால்தான் மக்கள் பயன்பெறக்கூடிய எண்ணற்ற திட்டங்களைத் தொடர்ந்து துவக்கி வைக்கிறேன். திராவிட மாடல் ஆட்சியில் 'தினந்தோறும் திட்டங்கள்' என்பதுதான் என் திட்டம்! அதாவது, தினந்தோறும் திட்டங்களைத் தீட்டுவதுதான் என்னுடைய பணி!

அந்த வகையில், இந்த விழாவில் மிகமுக்கியமான ஏழு திட்டங்களைத் தொடங்கி வைப்பதில் பெருமைப்படுகிறேன்.

* முதல் திட்டம்..

மனிதர்களே மனிதக் கழிவுகளை அகற்றும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க D.I.C.C.I அமைப்புடன் ஒப்பந்தம் இன்று கையெழுத்து ஆகியிருக்கிறது.

பல்வேறு துறைகளில் நாட்டிற்கே முன்னோடியாக நமது தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. அந்த வகையில் இதுவும் முன்னோடி திட்டமாக அமையப் போகிறது. தூய்மைப்பணியில் ஈடுபடும் பணியாளர்கள் பலர் இந்தப் பணியில் ஈடுபடும்போது சந்திக்க நேரிடும் ஆபத்துகளால் உயிரிழக்க நேரிடுகிறது. அதை நாம் இன்று பார்க்கிறோம்.

மக்களின் சுகாதாரத்தைப் பேணிட தம் வாழ்வு முழுவதும் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய இந்த பணியாளர்களின் குடும்பங்கள், தமது குடும்பத் தலைவரையோ, வாரிசையோ இழந்து, தமது வாழ்வாதாரத்தையும் எதிர்காலத்தையும் தொலைத்து நிற்கும் அவலநிலை நம் அனைவரையும் மனம் கலங்க வைக்கிறது. இந்த இன்னல்களைக் களைய பல முயற்சிகளை நமது அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் எடுத்திருக்கிறது. தூய்மைப் பணியில் ஈடுபடும் அனைத்துப் பணியாளர்களையும் கண்டறிந்து, அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு வசதிகளை உறுதிசெய்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் மேம்பாட்டுத் திட்டத்தை ஏற்கெனவே மதுரையில் நான் தொடங்கி வைத்தேன். இந்தத் திட்டப் பணிகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் அடுத்த கட்டமாக, பாதாளச் சாக்கடைத் திட்டப் பராமரிப்பு மற்றும் கழிவுநீர் அகற்றும் பணிகளை நவீன இயந்திரங்கள் மூலமாக மேற்கொண்டு, உயிரிழப்புகளை முற்றிலும் தவிர்க்கத் திட்டமிட்டுள்ளோம்.

தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களை தொழில்முனைவோர்களாக ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்கான ஒரு முன்னோடித் திட்டம் சென்னை பெருநகர பகுதியில் செயல்படுத்தப்படும்.

தூய்மைப் பணியில் ஈடுபடும்போது உயிரிழந்தோரின் வாரிசுகளுக்கும், தற்போது தூய்மைப் பணியில் ஈடுபட்டு வருபவர்களுக்கும் முன்னுரிமை அளித்து, தூய்மைப் பணியை மேற்கொள்ளும் தொழிலாளர்கள் என்ற நிலையில், அந்த நிலையில் இருந்து அவர்களை உயர்த்தி, இந்தப் பணிகளை அனைத்து நவீன இயந்திரங்களோடு மேற்கொள்ளக்கூடிய தொழில் முனைவோர்களாக அவர்களை மாற்றுவதற்காக, தலித் சேம்பர் ஆஃப் காமர்ஸ் (DICCI) அமைப்புடன் இணைந்து இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்படும் தூய்மைப் பணியாளர் குடும்பத்தினருக்கு, நவீனக்கருவிகளும், வாகனங்களும் வழங்கப்படுவதோடு, திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் அளிக்கப்படும்.

சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மூலமாக சென்னை மாநகரப் பகுதியில் செயல்படுத்தப்பட உள்ள இந்தத் திட்டம், படிப்படியாக மாநிலத்தின் மற்ற நகர்ப்புறப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

* இரண்டாவது திட்டம்...

சத்துக் குறைபாடுகளை அடைந்திருக்கக் கூடிய குழந்தைகளுக்கு சிறப்பு ஊட்டச்சத்து வழங்கக்கூடிய ஒரு அருமையான திட்டம்.

குழந்தைகள் பிறக்கும்போதே ஆரோக்கியமாக பிறக்க வேண்டும்; வளரும்போதும் ஆரோக்கியமாக வளர வேண்டும். அப்போதுதான் அவர்களது எதிர்காலம் சிறப்பானதாக அமையும்.

கடந்த ஆண்டு மே 7ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நான் பேசுகின்றபோது, ஒரு புள்ளிவிவரத்தை மிக மிக மனவேதனையோடு நான் குறிப்பிட்டு அளிப்பதாகச் சொன்னேன். அது என்னவென்றால், தமிழ்நாட்டில் ஆறு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளைப் பரிசோதித்ததில், பெரும்பாலான குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளவர்களாக இருந்தார்கள் என்பதும், வயதுக்கு ஏற்ப எடையும் உயரமும் இல்லை என்ற புள்ளிவிவரங்கள் நமக்குத் தெரிவிக்கிறது.

இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகள் அனைவருக்கும் திடமான, ஊட்டச்சத்து குறைபாடில்லாதவர்களாக மாற்றுவதற்கான திட்டம் தீட்டுவதற்கான அந்தத் திட்டத்தை அப்போதே நான் அறிவித்தேன். இதனைக் கண்டறிய, கண்காணிப்பு இயக்ககம் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் 37 இலட்சம் குழந்தைகளைப் பரிசோதனை செய்தோம். அதில் ஊட்டச்சத்து தேவைப்படுவோர் கண்டறியப்பட்டார்கள்.

ஆறு மாதம் முதல் ஆறு வயது வரையிலான குழந்தைகளுக்கு சிகிச்சை உணவு (RUTF) தரப்படும்.

6 மாதம் வரையுள்ள குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து நிலை மேம்படுத்தப்படும்.

இந்த தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துப் பெட்டகங்களும் வழங்கப்படும்.

குழந்தைகளுக்கு வாரம் ஒரு முட்டை என்பதை, 3 முட்டையாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. பிஸ்கெட்டும் வழங்கப்படுகிறது. அந்தக் குழந்தைகள் தொடர்ந்து பரிசோதிக்கப்பட்டு வருவார்கள்.

இதன் மூலமாக அனைத்துக் குழந்தைகளும் சத்துள்ள குழந்தைகளாக வளர்வார்கள்.

* மூன்றாவது திட்டம்..

மாற்றுத்திறனாளிகளுக்கு ஏராளமான திட்டங்களை நமது அரசு செயல்படுத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இருக்கிறோம்.

வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் அமைத்துத் தருவதற்கு ஏதுவாக, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.

* நான்காவது திட்டம்..

திருநங்கையர்க்கும் ஏராளமானத் திட்டங்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய வழியில் நமது அரசு செயல்படுத்தி வருகிறது. திருநங்கைகள் நலவாரியத்தை 2008ஆம் ஆண்டு உருவாக்கியதே கழக அரசுதான்.

திருநங்கைகளுக்கு மாதம்தோறும் வழங்கக்கூடிய உதவித்தொகை ஆயிரத்தில் இருந்து ரூ.1,500ஆக உயர்த்தி வழங்கப்பட இருக்கிறது.

* ஐந்தாவது திட்டம்..

பல்வேறு துறைகளில் உள்ள அரசுப் பணியிடங்களில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டு நூற்றுக்கணக்கான பணி ஆணை வழங்கப்படுகிறது.

* ஆறாவது திட்டம்..

இந்தியாவிற்கே முன்னோடித் திட்டமாக இருக்கக்கூடிய முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் செய்யப்படுகிறது.

1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கான காலை உணவுத்திட்டம் கடந்த செப்டம்பர் 15ஆம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்தநாளில் மதுரையில் வைத்துதான் நான் துவக்கி வைத்தேன். தற்போது, 15 மாநகராட்சிகள் மற்றும் 23 நகராட்சிகள் உள்ளடக்கிய 38 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் அமைந்துள்ள 539 பள்ளிகளில் பயிலும் 50 ஆயிரத்து 306 மாணவர்கள் இப்போது இந்தத் திட்டத்தின்கீழ் காலை உணவு உண்டு வருகிறார்கள். இந்தத் திட்டத்திற்காகச் சிறப்பாக அமைக்கப்பட்ட 46 ஒருங்கிணைப்பு சமையற்கூடங்களில் நாள்தோறும் உணவு சமைக்கப்பட்டு, அந்த உணவு சூடாக Hotboxஇல் நிரப்பப்பட்டு, சிறப்பு வாகனங்கள் மூலமாக ஒவ்வொரு பள்ளிக்கும் உரியநேரத்தில் கொண்டுபோய் சேர்த்து, மாணவர்களுக்கு காலை உணவு ஒவ்வொரு நாளும் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு மாணவர்கள், பெற்றோர்களிடம் பெரிய வரவேற்பு கிடைத்திருக்கிறது. எனவே இதனை விரிவுபடுத்துவதற்காகத் திட்டமிட்டு, அடுத்த கட்டமாக, தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் 36 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள 433 பள்ளிகளுக்கு நாளை முதல் விரிவாக்கம் செய்யப்பட திட்டமிட்டுள்ளோம். இதன்மூலம் 56,098 மாணவர்கள் கூடுதலாகப் பயனடைவார்கள். இதன்படி, நாளை முதல் காலை உணவு சாப்பிடக்கூடிய மாணவச் செல்வங்களின் எண்ணிக்கை 1,06,404 ஆகும். ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் திட்டமாக இது உயரப் போகிறது.

*** ஏழாவது திட்டம்..**

ரூ.1,136.32 கோடி மதிப்பீட்டில் 44 இடங்களில் புதிய மருத்துவமனைக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இப்படி ஏழு திட்டங்களைப் பார்த்தால்,

கல்வி, சுகாதாரம், விளிம்பு நிலை மக்கள், குழந்தைகள், சமூக மேம்பாடு, சமூகநீதி ஆகிய அனைத்துக் கருத்தியல்களும் உள்ளடக்கிய திட்டங்களாக தீட்டப்பட்டுள்ளன.

இந்த வரிசையில் இன்னும் பல திட்டங்கள் வர இருக்கின்றன. இந்தத் திட்டங்களை துறையினுடைய அமைச்சர்கள், துறையினுடைய செயலாளர்கள், அரசுச் செயலாளர்கள் உள்ளிட்ட கடைநிலை ஊழியர்கள் வரை இதனுடைய நோக்கம் சிதைந்துவிடாமல் நிறைவேற்றிக் காட்ட வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

கோட்டையில் இருந்து நிறைவேற்றும் திட்டமானது, கடைக்கோடி மனிதரையும் சென்றடைய வேண்டும். அவர்களது நன்மைக்காகவே இந்தத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

எனது லட்சியம் என்பது, வளமான தமிழ்நாடு! வலிமையான தமிழ்நாடு! வறுமை ஒழிந்த தமிழ்நாடு! சமத்துவத் தமிழ்நாடு! சுயமரியாதைத் தமிழ்நாடு! மாநிலம் என்பது எல்லைகளால் உருவானது அல்ல, எண்ணங்களால் கருவாகி உருவானது! எனவே தமிழ்நாடு என்றால் இப்படித்தான் இருக்கும்! எங்களை உருவாக்கிய தமிழ்நாட்டின் உயர்வுக்காகப் பணியாற்றி வருகிறோம். "ஏ ! தாழ்ந்த தமிழகமே!" – என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அவர் காலத்தில் சொன்னார்.. அந்த நிலைமையை மாற்றி ... "எனது ஏற்றமிகு தமிழ்நாடே!"

என்று ஒவ்வொருவரும் பெருமையோடு அழைக்கும் நிலையை உருவாக்க நமது திராவிட ஆட்சியில் அனைவரும் எந்நாளும் உழைப்போம்! உழைப்போம்! உழைப்போம்! என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

"முதல் தலைமுறை கற்றல் பயிற்சி மையத்தில்" ஆய்வு

படமும்/ செய்தியும்

தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் 21.02.2023 அன்று சென்னை, ஒக்கியம் துரைப்பாக்கம், கண்ணகி நகர், 8ஆவது பிரதான சாலை, மாநகராட்சி அலுவலகம் அருகில் சமூக பொறுப்பு நிதி திட்டத்தின் கீழ் (CSR Fund) புதுப்பிக்கப்பட்ட கட்டடத்தில் "முதல் தலைமுறை கற்றல் பயிற்சி மையத்தை" திறந்து வைத்து, பயிற்சி வகுப்புகளைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில்

“கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டம்

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொழில் துறை மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள், மகளிர் சுயஉதவிக் குழுவினருடன் ஆய்வு – 02.02.2023

“கள ஆய்வில் முதலமைச்சர்” என்ற புதிய திட்டத்தின்கீழ், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து 01.02.2023, 02.02.2023 ஆகிய தேதிகளில் வேலூர் மாவட்டத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக, சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின்கீழ் ஆய்வு மேற்கொள்வதற்காக 15.02.2023 அன்று சேலத்திற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பட்டா மாறுதல், முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மற்றும் சேலம் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் கட்டப்பட்டு வரும் ஈரடுக்கு பேருந்து நிலையத்திற்கான கட்டுமானப் பணிகள் ஆகியவற்றை ஆய்வு செய்தார்.

உற்பத்தியாளர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களைச் சார்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சங்கம், வெள்ளி கொலுசு உற்பத்தியாளர்கள் சங்கம், லாரி கட்டுமானத் தொழில் நிறுவனங்கள் சங்கம், ஆயத்த ஆடைகள் உற்பத்தியாளர்கள் சங்கம், ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் உற்பத்தியாளர்கள் சங்கம், மாம்பழக்கூழ் உற்பத்தி நிறுவனங்கள் சங்கம், விவசாயிகள் சங்கம், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் சங்கம், சிறுதானிய மதிப்புக்கூட்டுப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் சங்கம், கோழிப்பண்ணை விவசாயிகள் சங்கம், மலையகப் பகுதி பழங்குடி மக்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ஆகிய சங்கங்களின்

பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி அவர்களின் கோரிக்கைகள் குறித்துக் கேட்டறிந்தார்.

இந்த கலந்துரையாடலின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சங்கத்தின் சார்பில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக அரசு அளித்து வரும் அதரவு மற்றும் சலுகைகளுக்கு தங்களது நன்றிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டனர். மேலும், சேலம் சிட்கோ தொழிற்பேட்டையில் சிறு மற்றும் குறுந் தொழிற்சாலைகள் சங்கத்திற்கு தனி அலுவலகம், பயிற்சி மற்றும் கூட்ட அரங்கம் அமைத்திட ஏதுவாக இடஒதுக்கீடு மற்றும் நிதியுதவி அளிக்க வேண்டும் என்றும், தொழிற்சாலைகளுக்கான Peak Hour Charge மின் கட்டணத்தைக் குறைத்திட வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர்.

ஓசூர் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் சங்கங்கள் சார்பில் ஓசூரில் விமான நிலையம் அமைத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர்.

விவசாய சங்கங்களின் சார்பில் கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி பகுதியில் தென்னை ஆராய்ச்சி மையம் மற்றும் தேங்காய் எண்ணெய் உற்பத்தி ஆலை தொடங்கிட வேண்டும் என்றும், தருமபுரி மாவட்டத்தில் சிறுதானிய உற்பத்தியாளர், ஏற்றுமதியாளர் மற்றும் விற்பனையாளர்களுக்கான தொடர்பு ஏற்படுத்த தேசிய அளவில் வாங்குபவர் மற்றும் விற்பவர் சந்திப்புக் கூட்டம் நடத்திட உதவி செய்திட வேண்டும் என்றும், முதல்நிலை சிறுதானியம் பதப்படுத்தும் மையம் மற்றும் சேமிப்புக் கிடங்கு அமைத்துத் தர வேண்டும் என்றும், வேளாண்மை தொடர்பான

செய்திகளுக்காக "விவசாயிகள் பண்பலை" நிலையம் அமைத்திட வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர்.

மாம்பழக்கூழ் உற்பத்தி நிறுவனங்கள் சங்கத்தின் சார்பில் மாம்பழக்கூழ் உற்பத்தி செய்யும் போது கிடைக்கும் தோல், நார் போன்ற கழிவுகளைக் கொண்டு இயற்கை எரிவாயு ஆலை அமைத்துத் தர வேண்டும் என்றும், ஏற்றுமதி மையம் அமைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பையூர் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் மாம்பழ சாகுபடிக்கான தனித்துறையை உருவாக்கித் தர வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர்.

ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் சார்பில் ரொக்க கடன் வட்டி மானியம் அளித்திடவும், சேகோ மற்றும் ஸ்டார்ச்க்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிக்கவும், மதிப்புக் கூட்டு பொருட்களைத் தயாரிக்க சேகோசர்வ் மூலம் ஆராய்ச்சிக்கூடம் அமைத்திட வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர்.

அனைத்து மாவட்ட அனைத்து பாடி பில்டர்கள் சம்மேளனத்தின் சார்பில் நாமக்கல் மாவட்ட லாரி பாடி கட்டும் தொழிற்பேட்டையில் தொழில் துவங்குவதற்கு ஏதுவாக அனைத்து தொழிலகங்களுக்கும் ஒரே வடிவமைப்பில் ஷெட் அமைக்கவும், தொழில் செய்ய உபகரணங்கள் வழங்கவும் நிதியுதவி அளித்திட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர்.

பல்வேறு சங்கங்களின் கோரிக்கை

சேலம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மலையகப் பகுதி பழங்குடி மக்கள் சார்பில் தங்கள் பகுதியில் சாலை வசதிகள் மற்றும் கால்நடை மருத்துவமனை வசதிகள் செய்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குக் கோரிக்கை வைத்தனர்.

பல்வேறு சங்கங்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அவற்றைப் பரிசீலித்து உரியவற்றை நிறைவேற்றித் தருவதாக அவர்களிடம் தெரிவித்தார்.

மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி, பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருவதற்காக மகளிர் சுயஉதவிக் குழுவினர் தங்களது நன்றியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மேலும் இத்தகைய நல்ல திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

சேலம், ஓமலூர் வட்டம்

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரில் சென்று, பட்டா மாறுதல், முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவது குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், முதியோர் ஓய்வூதியம் எத்தனை நபர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது,

நிலுவையில் உள்ள முதியோர் ஓய்வூதிய விண்ணப்பங்களின் விவரங்கள், இலவச வேட்டி, சேலை வழங்கப்பட்ட விவரங்கள், பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் ஆகியவை குறித்து வட்டாட்சியர் உள்ளிட்ட அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும், ஓமலூர் வட்டாட்சியர் அலுவலக பணியாளர்களின் விவரங்களைக் கேட்டறிந்து, அலுவலக வருகைப் பதிவேட்டையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம், பொதுமக்கள் வீட்டுமனைப் பட்டா, வாரிசு சான்றிதழ், குடும்ப அட்டை, முதியோர் ஓய்வூதியம் போன்றவை வழங்கிட வேண்டி கோரிக்கை மனு அளித்தனர். மேலும், மாற்றுத்திறனாளிகள் மூன்று சக்கர பெட்ரோல் ஸ்கூட்டர், மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதியம் போன்றவை வழங்கிட வேண்டியும் கோரிக்கை மனு அளித்தனர். அவர்களது கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மனுக்களுக்கு உரிய முறையில் விரைவில் தீர்வு காணப்படும் என்று உறுதியளித்தார்.

அதனைத் தொடர்ந்து, சேலம் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ் ரூ.92.13 கோடி மதிப்பீட்டில் சேலம் பழைய பேருந்து நிலைய வளாகத்தில் கட்டப்பட்டு வரும் ஈரடுக்கு பேருந்து நிலையத்திற்கான கட்டுமானப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நான் முதல்வன் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், "நான் முதல்வன்" திட்டத்தின்கீழ் பயன்பெற்றுவரும் கல்லூரி மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான "நான் முதல்வன்" திட்டத்தின்கீழ் பயிற்சிகள் பெற்றுவரும் பொறியியல் கல்லூரி மாணவ, மாணவியர்கள், இத்திட்டத்தின் மூலம் வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களான Cloud Computing. Data Analytics, Machine Learning, BIM Modelling, High Rise Building, Steel Structures, Electric Vehicle Charging System Design, Artificial Intelligence, Robotics போன்ற திறன் பயிற்சிகள் பெற்ற அனுபவத்தையும், அவை அவர்களுடைய வேலைவாய்ப்பிற்கு எவ்வாறு பயன்பெற்றது என்பது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தனர்.

பன்னாட்டு நிறுவனங்களான IBM, Microsoft, TCS, Infosys, Google, AWS, L&T போன்றவற்றுடன் இணைந்து உலகத் தரத்திலான பயிற்சிகளை கட்டணமின்றிக் கிராமப்புற மாணவர்களும் பயன்பெறும் வகையில் அமைந்த "நான் முதல்வன்" திட்டம், கல்வி பயிலும் பருவத்திலேயே பன்னாட்டு தொழில் நிறுவனங்களில் வேலை வாய்ப்பை உறுதி செய்தது குறித்தும் விவரித்தனர்.

மேலும், படிக்கும்பொழுதே உயர்தொழில்நுட்பம் சார் தொழில் முனைவை ஊக்குவித்தும், அதன்மூலம் அவர்களுடைய பொருளாதாரம் மேம்படவும், வேகமாக மாறிவரும் தொழில்நுட்ப உலகத்திற்கு ஏற்ற திறன் பயிற்சிகளை "நான் முதல்வன்" திட்டத்தின்கீழ் வழங்குவதன் மூலம் மாணவ சமுதாயத்திற்குத் தன்னம்பிக்கை ஏற்படுகிறது என்றும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

இச்சிறப்பான திட்டத்தை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை அம்மாணவ, மாணவியர் தெரிவித்துக் கொண்டனர்.

காவல்துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம்

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ், சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களின் காவல்துறை உயர் அலுவலர்களுடன் சட்டம் ஒழுங்கு தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்டங்களில் பல்வேறு சமூக குற்றங்களைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்டுவரும் சிறப்பான நடவடிக்கைகளுக்கு காவல்துறை கண்காணிப்பாளர்களுக்கும், மாவட்ட ஆட்சியர்களுக்கும் தனது பாராட்டுக்களை தெரிவித்தார்.

அதேசமயம், காவல்துறையின் பணிகள் மக்கள் எளிதில் அணுகும் விதமாக இருக்கவேண்டும் என்றும், காவல்நிலையத்திற்கு மக்கள் எவ்வித அச்சமுமின்றி புகார் அளிக்க வரக்கூடிய சூழ்நிலையை, அமைப்பை ஏற்படுத்தவேண்டும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மக்களுக்கும், காவல்துறைக்குமான உறவு என்பது எளிமையானதாகவும், மனிதநேய அடிப்படையிலும் அமைய வேண்டும். இதில், காவல்துறை உயர் அலுவலர்கள் காட்டும் அணுகுமுறைதான் அவர்களுக்குக்கீழ் பணிபுரியும் காவல் ஆய்வாளரும் மேற்கொள்வார் என்பதை எப்போதும் மனதில் கொள்ளவேண்டும் என்று தெரிவித்தார்.

காவல்துறையின் செயல்பாடுகள் மக்களுக்குத் தெரியும்படி வெளிப்படையாக இருக்கவேண்டும். எந்தவொரு சம்பவத்தைப் பற்றியும் நடந்த பிறகு

ஆராய்வதைவிட அது நடப்பதற்கான சாத்தியக்கூறுகளை முன்பே அறியப்பெற்று அதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவது சிறப்பாக இருக்கும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். இதற்கு காவல்துறையின் க்யூ பிராஞ்ச், நுண்ணறிவுப் பிரிவு ஆகியவை தரும் செய்திகளை கவனமாக ஆய்ந்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

சட்டவிரோதச் செயல்களை, குற்றச் சம்பவங்களைத் தடுப்பதுதான் திறமையான காவல்துறைக்கு இலக்கணம் ஆகும். சமயம், மதம் அல்லது பண்பாடு சார்ந்த நிகழ்வுகளில், உதாரணத்திற்கு கோவில் திருவிழாக்கள், எருது விடும் நிகழ்வுகள் போன்றவற்றில் கவனக் குறைவாக இருந்துவிட்டால் அது மாவட்ட நிருவாகத்திற்கும் அரசுக்கும் உள்ள நற்பெயரை பாதித்துவிடும் என்று சுட்டிக்காட்டினார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், காவல்துறை கவனம் செலுத்தவேண்டிய மற்றுமொரு

முக்கிய இனம் போதைப் பொருள் ஒழிப்பு ஆகும் என்று குறிப்பிட்டு, சில மாவட்டங்களில் சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருந்தாலும், சரகம் முழுவதும் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்றும், மாநில எல்லைப்பகுதியாக இருப்பதால் உங்கள் கவனம் இன்னும் அதிகமாக இருக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

காவல் கண்காணிப்பாளர்கள், காவல் நிலையங்களை அடிக்கடி ஆய்வு மேற்கொண்டு அங்கு வரும் பொதுமக்களை சந்திப்பது, மக்களிடையே நல்ல பெயரை பெற்றுத் தருவதோடு, காவலர்களிடையே ஒரு எச்சரிக்கையான நிலையையும் உண்டாக்கும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த மாவட்டங்களில் எந்த சூழ்நிலையிலும் சாதிக்கலவரம் ஏற்படாமல் கட்டாயம் பார்த்துக் கொள்ளவேண்டும் என்றும், இதில், மாவட்ட ஆட்சியர்களின் பங்கு மிக முக்கியமானது என்று தெரிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வாராந்திர சட்டம் ஒழுங்கு கூட்டத்தில் இதனை வருவாய் மற்றும் காவல்துறையினருடன் ஒருங்கிணைந்து ஆய்வு நடத்தி, தேவையான இடங்களில் அமைதிப் பேச்சுவார்த்தைகளை நடத்தி பிரச்சினைகளை ஆரம்பக் கட்டத்திலேயே தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

வருவாய்த்துறை, காவல்துறை ஆகிய துறைகள் நீதித்துறையுடனும் ஒருங்கிணைந்து வழக்குகளை விரைந்து முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆண்டுக் கணக்கில் வழக்குகளை நடத்துவது குற்றவாளிகளுக்குத்தான் சாதகமாக முடியும். எனவே, காவல் கண்காணிப்பாளர்கள் பழைய வழக்குகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்றும், இதனை, காவல்துறை தலைவர்கள், துணைத்

தலைவர்கள் ஆகிய உயர்நிலை அலுவலர்கள் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நம்முடைய பணி, மக்களுக்கானது என்பதை உணர வேண்டும். இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் எதிர்காலத்தைச் சீரழிக்கும் போதைப் பொருளை பெருமளவு ஒழிக்கும் காவல் கண்காணிப்பாளரை எப்போதும் பெரிதும் பாராட்டுவேன் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்.

பெரும்பாலும், குற்ற நிகழ்வுகளில் பாதிக்கப்படுபவர்கள், நடுத்தர மற்றும் ஏழை எளிய மக்களாக இருப்பதால், அவர்களிடம் நீங்கள் கடுமையாக நடந்துகொள்ளாமல் அவர்களின் புகார்களில் உள்ள உண்மைத் தன்மையை ஆய்ந்தறிந்து அவர்களுக்கு நீதி கிடைக்க உறுதுணையாக இருக்கவேண்டும், அப்போது தான், "காவல் துறை உங்கள் நண்பன்" - என்ற சொற்றொடர் உண்மையாகும் என்று அறிவுறுத்தினார்.

பல்வேறு அரசுப் பணிகள் இருந்தாலும், காவல்துறைக்கென்று ஒரு தனி சிறப்பு உண்டு, அதற்கான பெருமையையும், மாண்பையும் நீங்கள் இன்னும் உயர்த்திக் காட்டும் வகையில் பணியாற்ற வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

அரசு உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம்

அதன் தொடர்ச்சியாக இரண்டாவது நாளாக 16.02.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கள ஆய்வில் முதலமைச்சர் என்ற திட்டத்தின் வாயிலாக உங்கள் அனைவரையும் சந்தித்து அரசின் திட்டங்கள் மக்களை எந்த அளவிற்கு சென்றடைந்துள்ளன; அவற்றை நிறைவேற்றுவதில் இருக்கக்கூடிய சிரமங்கள் என்ன; அந்த சிரமங்களை குறைக்கும் வழிகள் யாவை என்பதையும் குறித்து இந்த கள ஆய்வில் நாம் கலந்து பேசியிருக்கிறோம்.

ஓர் அரசு ஏன் இயங்குகிறது? அரசு அதிகாரிகளின் நோக்கம் என்னவாக இருக்க வேண்டும்? சட்டங்களும், திட்டங்களும் எதற்காக வகுக்கப்படுகின்றன? என்பதை நாம் சிந்திக்க வேண்டும். அப்படி சிந்திக்கும்போது நமக்கு கிடைக்கும் ஒரே பதில் "மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்" என்பது மட்டுமே.

நாம் இன்று காலை முதல் இங்கு அமர்ந்து, நேரத்தை செலவழித்து ஆய்வு செய்தது மக்களுக்கான நமது பொறுப்பை, கடமையை சரியாக செய்கிறோமா என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ளவும்; தொய்வு காணும் இனங்களை சரி செய்து சீர்திருத்திக் கொள்ளவும் தான்.

மக்கள் தங்கள் குறைகளை, தேவைகளை, அரசு தீர்த்திடும் என்ற நம்பிக்கையில் அவற்றையெல்லாம் மனுக்களாக நம்மிடத்தில் வழங்குகிறார்கள். அவற்றை, நாம் வெறும் காகிதங்களாக பார்க்காமல் ஒருவரின் வாழ்வாக, எதிர்காலமாக கருதிப் பார்க்கவேண்டும். எனவே தான் இதன் முக்கியத்துவத்தை முன்னிறுத்தி "முதல்வரின் முகவரி" என்ற துறை உருவாக்கப்பட்டுள்ளது. மக்களாட்சித் தத்துவத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ள இந்த அரசு, அவர்களின் குறைகளைத் தீர்ப்பதிலும் கவனம் செலுத்துகிறது என்பதை நீங்கள் அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டுமென்று இந்தத் தருணத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பட்டா மாறுதல் தாமதமின்றி, எவ்வித அலைக்கழிப்பும் இன்றி நடைபெறுவதை மாவட்ட ஆட்சியரும், மாவட்ட வருவாய் அலுவலரும் உறுதி செய்ய வேண்டும். பெரிய திட்டங்களை மக்களுக்காக அரசு நிறைவேற்றி வரும் வேளையில், மக்களுக்குத் தேவையான இதுபோன்ற அடிப்படையான அரசு சேவைகள் வழங்கப்படுவதில் ஏற்படக்கூடிய தாமதங்கள் மக்களிடையே நல்ல பெயரை பெற்றுத்தராது. ஆகவே, அதிலே கவனமாகப் பணியாற்றுங்கள். சார்நிலை அலுவலர்களை ஆய்வு செய்யுங்கள். தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதை கண்காணியுங்கள். குறிப்பாக கிராமப்புர மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை விரைந்து நிறைவேற்றித் தாருங்கள்.

இருக்க வீடு; நடக்க சாலை; குடிக்க தண்ணீர்; இரவில் தெருவிளக்கு; படிக்கப் பள்ளி; கிராம சுகாதாரம் - இதைத்தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இவற்றை தரமாக வழங்குவதில் என்ன சிரமம் இருந்தாலும் அவற்றைத் தீர்த்து முன்னேற்றம் காணுங்கள். நீங்கள்தான் அரசினுடைய முகமாக மாவட்டத்தில் பணியாற்றக்கூடியவர்கள். உங்கள் திறமையில்தான், கடின உழைப்பில்தான், உங்கள் மாவட்ட மக்களுடைய உயர்வை காணமுடியும். எனவே, இதனை மறவாது கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முக்கியமாக நான் குறிப்பிட விரும்புவது வேளாண் உற்பத்தி, மதிப்புக்கூட்டல் மற்றும் உழவர் உற்பத்திக் குழுக்கள் பற்றியதாகும். நேற்றைய தினம் நான் இந்த நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு துறை பிரதிநிதிகளை சந்தித்துப் பேசினேன். அப்போது, விவசாயிகள், சிறுதானிய உற்பத்தியாளர்கள் மற்றும் மதிப்புக்கூட்டு பொருட்கள் உற்பத்தியாளர்கள் சில முக்கியமான கருத்துக்களைத் தெரிவித்தனர். அவற்றை அரசு வேளாண்மைத் துறைச் செயலாளரும், மாவட்ட அளவில் ஆட்சியரும் கவனத்தில் கொண்டு செயல்பட கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளின் வருமானம் உயர்த்தப்பட வேண்டும் என்பது இவ்வரசின் முக்கிய இலக்குகளில் ஒன்றாகும். விவசாயிகளின் வாழ்வு வளமானால்தான், மாநிலம் வளரும், அது வளம் பெற்றதாகக் கருதப்படும். எனவே, வேளாண் திட்ட செயலாக்கங்களுக்கு முன்னுரிமை அளித்திடுங்கள்.

அடுத்தபடியாக நான் குறிப்பிட விரும்புவது நகர்ப்புறப் பகுதிகளில் அடிப்படை வசதிகள். இந்த நான்கு மாவட்டங்களைப் பொருத்தவரை சேலம், ஓசூர் ஆகிய வேகமாக வளரக்கூடிய இரண்டு மாநகராட்சிகள் உள்ளிட்ட பல நகராட்சிப் பகுதிகள் உள்ளன. இங்கெல்லாம் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்க்கைத் தரமும் உயர்ந்து வருவதால் மக்கள் தொகை உயர்வும் காணப்படுகிறது. இது நகராட்சிகள் வழங்கும் சேவைகளின் மீதான எதிர்பார்ப்பை உயர்த்துகிறது. எனவே, அடிப்படை பணிகளில் குறிப்பாக குப்பைகளை விரைந்து அகற்றுதல், கழிவு நீர் தேங்காமல் தூர் வாருதல், பழுதான சாலைகளை சீர் செய்தல் ஆகியவற்றிலும் கவனம் செலுத்துங்கள். இதனால் பல்லாயிரம் மக்கள் பயன்பெறுவார்கள்.

இதுபோல், கல்வி, சுகாதாரம் போன்ற ஒவ்வொரு துறையிலும் நிறைவேற்றப்பட்டு வரக்கூடிய திட்டங்களைக் கவனமாக ஆய்வு செய்து, உங்கள் மாவட்ட மக்கள் பயன்பெறச் செய்யுங்கள்.

அடுத்தபடியாக ஆதிதிராவிடர், பழங்குடியின மக்கள் மற்றும் விளிம்பு நிலை மக்களுக்குத்

தேவையான நலத்திட்டங்கள். என்னைப் பொறுத்தவரை உங்கள் அதிமுக்கியத்துவம் வாய்ந்த பணிகள் பட்டியலில் இவை முதலிடம் பெறவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கான வீட்டுவசதி, தொழில் முனைவோர் திட்டங்கள், கல்வி உதவித்தொகை வழங்குதல், பள்ளி கல்லூரி விடுதிகள் ஆகிய பலவற்றிலும் சார்நிலை பணியினை கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சமூக ஊடகங்கள், தொலைக்காட்சி, செய்தித்தாள் மற்றும் பத்திரிகைகளில் வரக்கூடிய அரசு திட்டங்கள் தொடர்பான விமர்சனங்களை புறந்தள்ளாமல், உண்மையான குறைபாடுகள் இருந்தால் அவற்றை களைந்திடவேண்டும். அதோடு நில்லாமல், குறைகள் களையப்பட்டதையும் பதில் செய்தியாக அதே ஊடகத்திற்கு நீங்கள் அளிக்கவேண்டும். இது மிக மிக முக்கியமாக நீங்கள் உங்கள் மனதிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

இறுதியாக ஒன்றை உங்கள் அனைவரிடமும் குறிப்பாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அது என்னவென்றால், அரசு அலுவலகங்களை பல்வேறு தேவைகளுக்காக நாடிவரும் மக்களிடம் நீங்கள் ஒவ்வொருவரும் கனிவாக, பொறுமையாக நடந்து கொண்டு அவர்களின் கோரிக்கைகளுக்குப் பொறுப்பாக பதிலளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உதாரணமாக, ஒரு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஏதேனும் ஒரு தேவைக்கு ஒருவர் வரும்போது, அங்கு அவர் எதற்காக வந்துள்ளார்? அதை யார் செய்வார்? அதற்கான மனு விபரங்களின் தேவை என்ன? ஆகியவை குறித்து பதில் கூற தற்போது யாரும் இல்லை என நினைக்கிறேன். இதனை சரி செய்ய வேண்டும். காவல்துறையில், வரவேற்பாளர் என்ற அமைப்பு காவல் நிலையத்தில் ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சியை, பொதுமக்களுடன் நேரடித் தொடர்பில் உள்ள பிற துறைகளும் மேற்கொள்ளலாம் என்ற ஆலோசனையை கூறிட விரும்புகிறேன்.

நான் முன்பே குறிப்பிட்டதைப்போல மக்கள் நலன் கருதியே அனைத்துத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றை கொண்டுசேர்க்கும் பொறுப்பு உங்களுக்கு உள்ளது. அதை காலத்தே செய்யுங்கள். செய்தும் வருகிறீர்கள். இன்னும் சிறப்பாகப் பணியாற்றுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு துறைகளில் பணியாற்றும் அனைத்து நிலை அலுவலர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆய்வுக் கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறைக்கும், மாவட்ட நிருவாகத்திற்கும் என்னுடைய வாழ்த்துகளைக் கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு – 15.02.2023

சேலம் கள ஆய்வின்போது வழியில் மார்டன் தியேட்டர்ஸ் நுழைவு வாயிலைப் பார்த்ததும் வாகனத்தை நிறுத்தச் சொன்னேன்!

T.R.சுந்தரம் அவர்கள் உருவாக்கிய நாற்றங்கால்: திராவிட இயக்கக் கலைஞர்களின் தொட்டில், முத்தமிழறிஞர் கலைஞரின் பேனா முனை தீட்டிய கூர்மிகு வசனங்களின் பிறப்பிடமான அந்த சேலம் மார்டன் தியேட்டர்ஸ்-இன் நுழைவு வாயிலைப் படம் பிடித்தேன்.

9 மொழிகளில் 118 படங்களைத் தயாரித்து அழியாக் கலைப்படங்களை உருவாக்கிய அந்நிறுவனத்தின் இந்த நுழைவு வாயில், பல நினைவுகளைச் சுமந்து நிற்கும் பெருஞ்சுவர்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

சென்னை, கிண்டி,
காந்தி மண்டப வளாகத்தில் வ.உ.சிதம்பரனார் அவர்கள் கோவை சிறையில் இழுத்த செக்கு பொலிவூட்டப்பட்டது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 14.02.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 14.02.2023 அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.18 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச்சிலை, ரூ.34 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள மருதுபாண்டியர்களின் திருவுருவச்சிலை மற்றும் ரூ.43 இலட்சம் செலவில் வ.உ.சிதம்பரனார் அவர்கள் கோவை சிறையில் இழுத்த பொலிவூட்டப்பட்ட செக்கு மற்றும் வ.உ.சி. அவர்களின் மார்பளவுச் சிலை ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

2021-2022ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக்கையில், தமிழ்நாட்டில் ஆங்கிலேயர்களின் ஆட்சியினை எதிர்த்து தீரமாய்ப் போரிட்டுத் தூக்குக் கயிற்றினை ஏற்றுக்கொண்ட விடுதலைப் போராட்ட மாவீரர் பாஞ்சாலங்குறிச்சி குறுநில மன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கும், தாய்நாட்டின் விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து விடுதலை வேள்வியில் தீர்க்கமாய்ப் போரிட்ட சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்கும், சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

மேலும், வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய 150ஆவது பிறந்தநாள் விழாவினையொட்டி 03.09.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட 14 அறிவிப்புகளில், சென்னை, காந்தி மண்டபத்தில் உள்ள வ.உ.சிதம்பரனார் அவர்கள் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டிருக்கக்கூடிய மண்டபம் பொலிவூட்டப்பட்டு, அங்கு அன்னாரது மார்பளவுச் சிலை திறந்து வைக்கப்படும் என்றும் அறிவித்தார்.

அதன்படி, சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில், ரூ.18 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச்சிலை, ரூ.34 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள மருதுபாண்டியர்களின் திருவுருவச்சிலை மற்றும் ரூ.43 இலட்சம் செலவில் வ.உ.சிதம்பரனார் அவர்கள் கோவை சிறையில் இழுத்த பொலிவூட்டப்பட்ட செக்கு மற்றும் வ.உ.சி. அவர்களின் மார்பளவுச் சிலை ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

திருவாரூர் கிடங்கு வளாகத்தில் புதியதாக கட்டி திறக்கப்பட்ட மேற்கூரையுடன் கூடிய நவீன நெல் சேமிப்பு நிலையத்தில் ஆய்வு

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
நேரில் சென்று
திடீர் ஆய்வு - 21.02.2023

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், பொது விநியோகத் திட்டத்திற்கான உணவு தானியங்களை சேமித்து வைத்திடும் கிடங்குகளின் கொள்ளளவினை உயர்த்தும் வகையிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் மூலமாக அதிக அளவில் குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் தஞ்சாவூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை, தூத்துக்குடி, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் ரூ.105.08 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 1,42,450 மெ.டன் கொள்ளளவுடன் அமைக்கப்பட்டுள்ள மேற்கூரையுடன் கூடிய 106 நவீன நெல் சேமிப்புத் தளங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.02.2023 அன்று காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

அவற்றில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட திருவாரூர் கிடங்கு வளாகத்தில் ரூ.2.35 கோடி செலவில் 4,250 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரையுடன் கூடிய நவீன நெல் சேமிப்பு நிலையத்திற்கு 21.02.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரடியாகச் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, விவசாயிகளின் கடின உழைப்பில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள நெல்மணிகளை இயற்கைப் பேரிடர் மற்றும் மழைப் பொழிவுகளிலிருந்து பாதுகாப்பாகக் கிடங்குகளில் சேமித்து வைத்திட வேண்டும் என்றும், நெல்மணிகளில் ஈரப்பதம் ஏற்படாமல் நல்ல முறையில் பாதுகாக்க வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இச்சேமிப்பு நிலையத்தில் தற்போது 1,500 மெட்ரிக் டன் நெல் சேமிக்கப்பட்டுள்ளது என்றும், ரூ.2 கோடி மதிப்பீட்டில் 3,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரையுடன் கூடிய நவீன நெல் சேமிப்புத் தளம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அலுவலர்கள் தெரிவித்தனர்.

அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய Tabletஇல் உள்ள முதலமைச்சரின் தகவல் பலகையில் (CM dashboard) திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளின் நிலை குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் கேட்டறிந்து, விரைந்து நடைபெற வேண்டிய பணிகளைச் சுட்டிக்காட்டி, அவற்றை எவ்வித தாமதமுமின்றித் துரிதமாக முடித்திட உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து 22.02.2023 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மன்னார்குடி நகராட்சியில் ரூ.26.76 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய ஒருங்கிணைந்த நவீன பேருந்து நிலையத்திற்கானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

2021-2022ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கையில், மன்னார்குடி நகராட்சி, காமராஜர் பேருந்து நிலையம் மற்றும் சந்தைப்பேட்டை பேருந்து நிலையம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து புதிய ஒருங்கிணைந்த நவீன பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, மன்னார்குடி புதிய ஒருங்கிணைந்த நவீன பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளுக்காக ரூ.26.76 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்காக பேருந்து நிலையத்தின் உட்பகுதி மற்றும் வெளிப்பகுதியில் உள்ள நகராட்சிக் கடைகள் காலி செய்யப்பட்டு, பேருந்து நிலையத்தில் உள்ள பழைய கட்டடங்களை இடிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்புதிய பேருந்து நிலையத்தில் 50 பேருந்து நிறுத்தங்கள், 117 புதிய கடைகள் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய கழிப்பிடம் ஆகியவை அமைக்கப்படும்.

இப்பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், புதிய ஒருங்கிணைந்த நவீன பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளை உரிய காலத்திற்குள் முடித்து, மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்று அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 11.02.2023

ரூ.105.08 கோடி மதிப்பீட்டில் 106 நவீன நெல் சேமிப்புத் தளங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.02.2023 அன்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் தமிழ்நாட்டின் 8 மாவட்டங்களில் ரூ.105.08 கோடி மதிப்பீட்டில் 1,42,450 மெட்ரிக் டன் கொள்ளளவில் மேற்கூரையுடன் அமைக்கப்பட்டுள்ள 106 நவீன நெல் சேமிப்புத் தளங்களைத் திறந்து வைத்தார். மேலும், ரூ.54 கோடி மதிப்பீட்டில் 28,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 12 புதிய வட்ட செயல்முறைக் கிடங்குகள் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், பொது விநியோகத் திட்டத்திற்கான உணவு தானியங்களைச் சேமித்து வைத்திடும் கிடங்குகளின் கொள்ளளவினை உயர்த்தும் வகையிலும், உணவுப் பாதுகாப்பின் அங்கங்களான சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் முக்கிய பங்காற்றி வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் மூலமாக சேமிப்புக் கிடங்குகளை அதிகரித்து உணவு தானியங்களை நவீன முறையில் சேமித்து வைக்கும் வகையில், குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் அதிக அளவில் அரசின் சார்பில் சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன.

திறந்து வைக்கப்பட்ட மேற்கூரையுடன் கூடிய 106 நவீன நெல் சேமிப்புத் தளங்கள்

விவசாயிகளின் கடின உழைப்பில் உற்பத்தியான நெல்மணிகளை அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்

மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, அவற்றினை இயற்கைப் பேரிடர் மற்றும் மழைப் பொழிவுகளிலிருந்து பாதுகாப்பாக சேமித்து வைத்திட 10 மாவட்டங்களின் 18 இடங்களில் 2,86,350 மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரையுடன் கூடிய நெல் சேமிப்புத் தளங்கள் ரூ.238.07 கோடி மதிப்பீட்டில் நிறுவ ஆணையிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவற்றில் பணி முடிக்கப்பட்ட, தஞ்சாவூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை, தூத்துக்குடி, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் ரூ.105.08 கோடி மதிப்பீட்டில் மொத்தம் 1,42,450 மெ.டன் கொள்ளளவுடன் அமைக்கப்பட்டுள்ள மேற்கூரையுடன் கூடிய 106 நவீன நெல் சேமிப்புத் தளங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

அடிக்கல் நாட்டப்பட்ட 12 புதிய வட்ட செயல்முறைக் கிடங்குகள்

பொது விநியோக திட்டப் பொருள்களைச் சேமித்து வைத்திட புதியதாக உருவாக்கப்பட்டுள்ள வட்டங்களில் வட்ட செயல்முறைக் கிடங்குகளை நிறுவ அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. 2022-2023ஆம் ஆண்டிற்கான கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையில், உணவு தானியங்களைச் சேமிப்பதற்காக 12 வட்ட செயல்முறைக் கிடங்குகள் 28,000 மெ.டன் கொள்ளளவில் ரூ.54 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டத்தில் 2,000 மெ.டன் கொள்ளளவுடன் ரூ.4.10 கோடி மதிப்பீட்டிலும், சிங்கம்புனரி வட்டத்தில் 3,000 மெ.டன் கொள்ளளவுடன் ரூ.5 கோடி மதிப்பீட்டிலும், அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டத்தில் 3,000 மெ.டன் கொள்ளளவுடன் ரூ.5 கோடி மதிப்பீட்டிலும், ஆண்டிமடம் வட்டத்தில் 2,000 மெ.டன் கொள்ளளவுடன் ரூ.4.10 கோடி மதிப்பீட்டிலும், வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டத்தில் 2,000 மெ.டன் கொள்ளளவுடன் ரூ.4.10 கோடி மதிப்பீட்டிலும், பேரணாம்பட்டு வட்டத்தில் 2,000 மெ.டன் கொள்ளளவுடன் ரூ.4.10 கோடி மதிப்பீட்டிலும், திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை வட்டத்தில் 2,000 மெ.டன் கொள்ளளவுடன் ரூ.4.10 கோடி மதிப்பீட்டிலும், திண்டுக்கல் மேற்கு வட்டத்தில் 2,000 மெ.டன் கொள்ளளவுடன் ரூ.4.10 கோடி மதிப்பீட்டிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி வட்டத்தில் 3,000 மெ.டன் கொள்ளளவுடன் ரூ.5 கோடி மதிப்பீட்டிலும், நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டத்தில் 2,000 மெ.டன் கொள்ளளவுடன் ரூ.5 கோடி மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டத்தில் 3,000 மெ.டன் கொள்ளளவுடன் ரூ.5.30 கோடி மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்தில் 2,000 மெ.டன் கொள்ளளவுடன் ரூ.4.10 கோடி மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் ரூ.54 கோடி மதிப்பீட்டில், மொத்தம் 28,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட 12 புதிய வட்டச் செயல்முறைக் கிடங்குகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இதன்மூலம் நியாயவிலைக் கடைகளுக்கு விநியோகம் செய்யப்படும் உணவுப் பொருள்களைப் பாதுகாப்பாக அந்தந்த வட்டத்திற்குள்ளேயே சேமித்து வைத்துக் காலதாமதமின்றி நகர்வு செய்திட இயலும்.

மதுரை மாவட்டம், பெருங்காமநல்லூரில் ரூ.1.47 கோடி செலவில் தியாகிகள் நினைவு மண்டபம் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் எத்தலப்பர் நாயக்கர் அவர்களுக்கு திருவுருவச்சிலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 14.02.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 14.02.2023 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ரூ.6.90 கோடி மதிப்பீட்டில் மேனாள் சட்டமன்ற உறுப்பினர் வி.கே.பழனிசாமி கவுண்டர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் சி. சுப்பிரமணியம் மற்றும் மேனாள் சட்டமன்ற உறுப்பினர் தொழிலதிபர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம், சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் ஆகியோருக்கு திருவுருவச் சிலைகளுடன் கூடிய அரங்கங்கள் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், ரூ.1.47 கோடி செலவில் பெருங்காமநல்லூரில் கட்டப்பட்டுள்ள தியாகிகள் நினைவு மண்டபத்தைத் திறந்து வைத்தார்.

தமிழகத்தின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமையினைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகளின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னம் ஆகியவை உருவாக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், 2021-2022ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக்கையில், பொள்ளாச்சியில் செயல்படும் நீர்வளத்துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்தில் மேனாள் சட்டமன்ற உறுப்பினர் வி.கே. பழனிசாமி கவுண்டர், ஒன்றிய முன்னாள் அமைச்சர்

சி. சுப்பிரமணியம், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில் அன்னார்களுக்கு அரங்கம் மற்றும் திருவுருவச் சிலைகள் அமைக்கப்படும் என்றும், வீரபாண்டிய கட்டபொம்மனை நயவஞ்சகமாகத் தூக்கிலிட்ட ஆங்கிலேயருக்குப் பாடம் புகட்டும் வகையில், தஞ்சையிலிருந்து திருப்பூர் மாவட்டம், தளிக்கு அனுப்பப்பட்ட தூதுவர்களின் தலைவன் ஆண்ட்ரூ கேதிஷ் என்ற ஆங்கிலேயரைத் தூக்கிலிட்ட சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களது நினைவைப் போற்றும் வகையிலும், இன்றைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையிலும் திருப்பூர் மாவட்டத்தில் அன்னாருக்கு திருவுருவச்சிலை மற்றும் அரங்கம் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, பொள்ளாச்சி, நீர்வளத்துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்தில் ரூ.4.30 கோடி மதிப்பீட்டில், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் வி.கே.பழனிசாமி கவுண்டர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் சி. சுப்பிரமணியம் மற்றும் மேனாள் சட்டமன்ற உறுப்பினர் தொழிலதிபர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் ஆகியோருக்கு திருவுருவச்சிலைகளுடன் கூடிய அரங்கம், சுதந்திரப்போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களது நினைவாக திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள திருவுருவச்சிலைக்கும், அன்னாரது நினைவாக உடுமலைப்பேட்டை வட்டம், மஜராதிருமூர்த்திநகர், தளி-2 கிராமத்தில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள அரங்கத்திற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மேலும், மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், பெருங்காமநல்லூரில் ஆங்கிலேயர்களின் எதேச்சதிகார சட்டத்தை எதிர்த்துப் போராடியதால் 1920ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட பிரமலைக்கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த 16 தியாகிகளை சிறப்பிக்கும் வகையிலும், அந்நிகழ்வின் 100 ஆண்டுகள் நினைவைக் குறிக்கும் வகையிலும் ரூ.1.47 கோடி செலவில் பெருங்காமநல்லூரில் கட்டப்பட்டுள்ள தியாகிகள் நினைவு மண்டபத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

வரலாற்றில் நீக்கமற நிறைந்திருக்கும் மனிதர்களது தியாகத்தை எதிர்காலத்துக்கு எடுத்துச்செல்லும் சின்னங்கள்

சிலைகள் என்பது கலை வடிவம் மட்டுமல்ல; வரலாற்றில் நீக்கமற நிறைந்திருக்கும் மனிதர்களது வாழ்வையும் தொண்டையும் தியாகத்தையும் எதிர்காலத்துக்கு எடுத்துச் செல்கின்ற சின்னங்கள்!

வீரபாண்டிய கட்டபொம்மன், மருதிருவர், செக்கிழுத்த செம்மல் வ.உ.சி ஆகியோரின் சிலைகளைத் திறந்து வைத்தேன் பெருமையோடு!

மேனாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.கே.பழனிசாமி கவுண்டர், பொள்ளாச்சி மகாலிங்கம், ஒன்றிய முன்னாள் அமைச்சர் சி.சுப்பிரமணியம், விடுதலைப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் ஆகியோருக்கு திருவுருவச் சிலைகளுடன் கூடிய அரங்கங்கள் அமைக்க அடிக்கல் நாட்டி – பெருங்காமநல்லூரில் கட்டப்பட்டுள்ள தியாகிகள் நினைவு மண்டபத்தையும் திறந்து வைத்தேன்.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளப் பதிவு - 14.02.2023

tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

மார்ச் 08: உலக மகளிர் தினம்

பெண்ணடிமைத் தனம் அகற்றுவோம் பெண்ணுரிமை காப்போம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
உலக மகளிர் நாள் வாழ்த்துச் செய்தி - 07.03.2023

"அச்சமும் நாணமும் அறியாத பெண்கள் அழகிய தமிழ்நாட்டின் கண்கள்" என்று பாலினச் சமத்துவத்துக்காக முழங்கிய பாவேந்தரின் வரிகளால் பெண்கள் அனைவருக்கும் எனது உலக மகளிர் நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது திராவிட மாடல் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதும், முதலமைச்சராக நான் இட்ட முதல் கையொப்பமே பெண்களின் பொருளாதாரச் சுதந்திரத்துக்கு வழிவகுக்கும் இலவசப் பேருந்து பயண திட்டத்துக்காகத்தான். முதல் நிதிநிலை அறிக்கையிலேயே, உலகின் முன்னேறிய நாடுகளில் கூட இல்லாத வகையில், மகளிருக்கான ஊதியத்துடன் கூடிய பேறுகால விடுப்பை 9 மாதங்களில் இருந்து 12 மாதங்களாக உயர்த்தினோம். அரசுப் பணியிடங்களில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை 40 விழுக்காட்டுக்கு உயர்த்தி எல்லா அலுவலகங்களிலும் ஆண்களுக்குச் சமமாகவும், ஆண்களை மிஞ்சியும் மகளிர் பணிபுரியும் நிலையை ஏற்படுத்தியுள்ளோம். தொடர்ந்து மூவலூர் மூதாட்டி இராமாமிருதம் அம்மையாரின் பெயரால் பெண்கள் உயர்கல்வி பெறுவதை உறுதி செய்யும் 'புதுமைப் பெண்' திட்டத்தையும் தொடங்கி,கல்லூரிக்குச் செல்லும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கி வருகிறோம். அதுமட்டுமின்றி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் வீடுகள் குடும்பத்தலைவிகளின் பெயரிலேயே வழங்கப்படும் என்ற ஆழ்ந்த அக்கறைமிகு அறிவிப்பினையும் கடந்த ஆண்டு மகளிர் நாள் அன்று அறிவித்தேன். மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன்களையும், நகைக்கடன்களையும் தள்ளுபடி செய்து சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளோம். நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், பெண்களுக்கு 50 விழுக்காடு வேலைவாய்ப்பு அளிப்பதை நடைமுறைப்படுத்தியுள்ளோம். புதிய சிப்காட் தொழிற்பேட்டைகளில் பெண்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம்.

சென்னை, கோவை, மதுரை உள்ளிட்ட பெரிய மாநகராட்சிகள் உள்ளிட்ட 11 மாநகராட்சிகளைப் (50 விழுக்காட்டுக்கும் மேலாக) பெண்களுக்கு ஒதுக்கி, அவர்கள் இன்று வணக்கத்துக்குரிய மேயர்களாகச் செயலாற்றும் நிலையை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்படுத்தி இருக்கிறது. மற்ற உள்ளாட்சி அமைப்புகளிலும், ஒதுக்கப்பட்ட 50 விழுக்காட்டுக்கும் மேல் பெண்கள் தலைவர்களாகவும், துணைத் தலைவர்களாகவும், கவுன்சிலர்களாகவும் பொறுப்பேற்றுள்ளனர் என்பது இதுவரை இல்லாத சாதனை ஆகும்.

மகளிருக்கு எதிரான வன்முறைகள் - குற்றங்களை ஒழிப்பது, அவர்களுக்கு எதிரான பாகுபாட்டை நீக்குவது, அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது மற்றும் சம உரிமையை நிலைநாட்டுவது ஆகிய உயர் இலட்சியங்களை அடைவதற்கு "தமிழ்நாடு அரசின் மகளிருக்கான புதிய கொள்கை"யும் விரைவில் இறுதி செய்யப்பட்டு வெளியிடப்பட இருக்கிறது. அதன் வழியாக, மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில், குடும்பத்தலைவர்களாக உள்ள பெண்களுக்குக் கூடுதலாக 50 நாட்கள் வேலை தருவது, முக்கியப் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளை

பெண்களுக்கு வழங்குவது எனப் பெண்களின் முன்னேற்றத்துக்கான பல சீரிய திட்டங்களை நமது அரசு செயல்படுத்த எண்ணியுள்ளது என்பதையும் இந்த மகளிர் நாள் செய்தியில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அனைத்துக்கும் முத்தாய்ப்பாக, வருகிற நிதிநிலை அறிக்கையில் பெண்களுக்கு மாதம் ரூ.1,000 உரிமைத்தொகை வழங்குவது குறித்த அறிவிப்பினையும் வெளியிட இருக்கிறோம்.

பெண்ணுரிமை என்பதை வெறும் சொற்களால் அல்ல, நித்தமும் இத்தகைய எண்ணற்ற புரட்சித் திட்டங்களால் செய்து காட்டுவதுதான் திராவிட மாடல் என்பதைக் கடந்த இரண்டு ஆண்டுகளில் நிரூபித்திருக்கிறோம். தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், பெண்ணினக் காவலர் கலைஞர் அவர்களும் பெருமை கொள்ளும் வகையில் செயல்பட்டு வருகிறோம், இனியும் பல திட்டங்களை நாட்டிற்கே முன்னோடியாக நிறைவேற்ற உள்ளோம்.

“பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு, மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற் கொம்பே!” என்பதை நன்குணர்ந்து பெண்ணடிமைத்தனம் அகற்றுவோம், பெண்ணுரிமை காப்போம், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி காண்போம்!

சென்னையில் புவியியல் தகவல் அமைப்பு கட்டுப்பாட்டு நிலையம் அமைக்க ரூ.17.80 கோடி நிதி ஒதுக்கீடு

* சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் பயன்பாட்டில் உள்ள அனைத்து வகையான குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டமைப்புகளின் விவரங்களை புவியியல் தகவல் அமைப்பு தொழில்நுட்பத்தில் தயாரிப்பதற்கு, ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டத்தின் (TNUFIP) கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் அனைத்து கட்டமைப்புகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளின் முன்னேற்றத்தை மேலாண்மை செய்வதற்காக, அம்ரூத் 2.0 திட்டத்தின் நிருவாக மற்றும் அலுவலக செலவு நிதியின் கீழ் சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள வாரியத்தின் தலைமையகத்தில், அர்ப்பணிக்கப்பட்ட புவியியல் தகவல் அமைப்பு கட்டுப்பாட்டு நிலையத்தை (Dedicated Global Information System Center) அமைக்க ரூ.17.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

* இத்திட்டச் செலவு, புவியியல் தகவல் அமைப்பு சர்வர் வன்பொருள் மற்றும் மென்பொருள், ஜியோ-ஸ்பேஷியல் சர்வர் மென்பொருள், கணக்கெடுப்புக் கருவிகளின் கொள்முதல், புவியியல் தகவல் அமைப்பு குழுவிற்கான பணியாளர் செலவு மற்றும் புவியியல் தகவல் அமைப்பு கட்டுப்பாட்டு அறையை அமைப்பதற்கான உட்கட்டமைப்பு செலவு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தின் மூலம், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் கட்டமைப்புகளின் தகவல்கள் உயர் துல்லியத்துடன் உருவாக்கப்படும் மற்றும் உருவாக்கப்பட்ட தகவல்கள் புவியியல் தகவல் அமைப்பு தொழில்நுட்பத்தில் சேமிக்கப்படும். இவ்வாறு சேமிக்கப்பட்ட தகவல்களைக் கொண்டு பணிகளை திட்டமிடல், பொது சேவை வசதிகள், அன்றாட தகவல்களை மேம்படுத்த இயலும். இத்திட்டச் செயலாக்கம், வாரியத்தின் வருவாயை மேம்படுத்தவும், செலவினங்களைக் குறைக்கவும் ஏதுவாக அமையும்.

திருவள்ளூர் மாவட்டத்தில் “புதுமைப்பெண்” திட்டத்தின்
இரண்டாம் கட்டம் துவக்கம்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
08.02.2023 அன்று திருவள்ளூர் மாவட்டம்,
பட்டாபிராம், இந்து கல்லூரியில் நடைபெற்ற
புதுமைப் பெண் திட்டத்தின் இரண்டாம்
கட்டத்தைத் தொடங்கி வைத்து
ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன்னால், மூன்று மகிழ்ச்சியான செய்திகளை, என் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கக்கூடிய செய்திகளை அதிலே குறிப்பிட்டு ஒரு மூன்று செய்திகளை உங்களிடத்தில் நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

முதலாவது, நேற்றைய தினம் கோட்டையில் நான் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய, என்னுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கக்கூடிய காவல் துறையின் சார்பில் புதிய பணி ஆணைகள் வழங்கக்கூடிய ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த நிகழ்ச்சி நடைபெற்ற நேரத்தில், அப்பொழுது எனக்கு அருகில் இருந்த டி.ஜி.பி.-யிடத்திலே ஒரு கேள்வியைக் கேட்டேன், இன்றைக்கு பணி ஆணைகள் வழங்குகிறோம், அது எவ்வளவு பேருக்கு வழங்கப்படுகிறது என்று கேட்டேன். 17 காவல் துணை கண்காணிப்பாளர்களுக்கு அந்த பணி ஆணை வழங்கப்படுகிறது என்று குறிப்பிட்டுச் சொன்னார். அதோடு நிறுத்தாமல், இன்னும் ஒரு முக்கியமான செய்தியைச் சொன்னார். வழங்கப்பட்டிருக்கக்கூடிய அந்த 17 பேரில், 13 பேர் பெண்கள் என்று மகிழ்ச்சியோடு சொன்னார். அந்த 13 பெண்கள் என்னிடத்தில் அந்த ஆணையைப் பெறுவதற்காக வந்தபோது, மிடுக்கோடு வந்து என்னிடத்தில் அந்த ஆணையைப் பெற்றுக் கொண்டு சென்றார்கள். அது ஒரு மகிழ்ச்சியான செய்தி.

அடுத்து, அதேபோல் இன்று காலையில் இந்த நிகழ்ச்சிக்காக நான் காரில் வந்து கொண்டிருந்தபோது, என்னோடு காரில் அமர்ந்திருந்த மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் பொன்முடி அவர்கள் ஒரு செய்தியைச் சொன்னார். இந்த புதுமைப் பெண் திட்டத்தால் பெண்கள் உயர்கல்வி சேர்க்கை கடந்த ஆண்டை விட 27 சதவீதம் அதிகமாகி இருக்கிறது என்று பெருமையோடு குறிப்பிட்டுச் சொன்னார். ஆகவே, இது இரண்டாவது மகிழ்ச்சி.

மூன்றாவதாக மகிழ்ச்சி, மாண்புமிகு அமைச்சர் திரு.நாசர் அவர்கள் சொன்னது. மாண்புமிகு

அமைச்சர் திரு. நாசர் அவர்கள் காரில் வருகிறபோது ஒரு செய்தியைச் சொன்னார். இந்தக் கல்லூரிக்கு ஏற்கெனவே நான் 33 ஆண்டுகளுக்கு முன்னால், அதாவது சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது வந்திருப்பதாகவும், இந்தக் கல்லூரியினுடைய ஆண்டு விழாவில் பங்கேற்றதை அவர் நினைவுப்படுத்தி எடுத்துச் சொன்னார்.

அப்படிப்பட்ட மூன்று நிகழ்ச்சிகளை மகிழ்ச்சியோடு என் உள்ளத்திலே சுமந்துகொண்டு தான் இப்போது இந்த "புதுமைப்பெண் திட்டத்தின்" இரண்டாம் கட்ட திட்டத்தினைத் தொடங்கி வைக்க நான் மகிழ்ச்சியோடு வந்திருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

கண்ணன் கலாசாலை

இந்தப் பட்டாபிராம், தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்துக் கல்லூரிக்கு நான் வந்திருப்பதை உள்ளபடியே பெருமையாகவே கருதிக் கொண்டு இருக்கிறேன்.

'எல்லா மதங்களும் உண்மை என்ற சமரச ஞானத்தை ஊட்டத் தவறாதவர்'-என்றும், 'கண்ணன் கலாசாலை போன்று எல்லாப் பாடசாலைகளிலும் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தால் தேசம் மறுபடி மேன்மை அடையும்'- என்றும் மகாகவி பாரதியாரே கலவல கண்ணன் அவர்களைப்பற்றிப் போற்றியிருக்கிறார்.

வணிகத்தின் பெரும்பகுதியை சமூக சேவைக்குப் பயன்படுத்தியதால், எல்லோரும் அவரை 'தரும மூர்த்தி' என்று சொன்னார்கள்.

கல்வியை பலருக்கும் எட்டாக்கனியாக அந்தக் காலத்தில் சிலர் மாற்றி வைத்திருந்தார்கள். அப்படிப்பட்ட காலத்திலேயே, அனைவருக்கும் எழுத்தறிவு கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, பல்வேறு இடங்களில் பள்ளிகளை நிறுவினார் அவர். சிந்தாதிரிப்பேட்டை, சவுகார்பேட்டை, பாரிமுனை, இந்த பட்டாபிராம் என்று பல இடங்களிலும் அவர் பள்ளிகளை நிறுவினார்.

1969ஆம் ஆண்டு அரசு நிதி உதவியுடன் தொடங்கப்பட்ட கல்லூரி இது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு முதன்முதலாக ஆட்சிக்கு வந்த காலத்தில், அரசு நிதி உதவியோடு தொடங்கப்பட்ட கல்லூரி இது.

முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய பேனாவால் போட்ட ஒரே ஒரு கையெழுத்துதான், இந்த ஐம்பது ஆண்டு காலத்தில் இலட்சக்கணக்கான மாணவ, மாணவிகளை உருவாக்கி இருக்கிறது என்று நினைக்கும்போது அளவில்லாப் பெருமையை நாம் அடைந்து கொண்டிருக்கிறோம்.

இவ்வளவு பெருமைகள் வாய்ந்த பெண் கல்விக்கு 150 ஆண்டுகளுக்கு முன்பே முக்கியத்துவம் தந்த தருமமூர்த்தி கண்ணன் அவர்களது பெயரால் அமைந்த இந்தக் கல்லூரியில், புதுமைப் பெண் என்கிற திட்டத்தை சிறப்பாக நடத்துகிற இந்த நிகழ்ச்சியைப் பார்க்கும்போது, மிகமிகப் பொருத்தமாக இது அமைந்திருக்கிறது.

கல்வி பெண்களுக்கு மிக முக்கியம்

ஒரு நாடு செழித்து தன்னிறைவுடன் திகழ வேண்டுமென்று சொன்னால், நாட்டில் உள்ள

மக்கள் கல்வியறிவு பெற்றவர்களாய் இருப்பது மிகவும் அவசியம். முக்கியமாக, கல்வி என்பது பெண்களுக்கு மிகமிக முக்கியம்!

கல்வியைத்தான் அழியாச் செல்வம் என்று சொன்னார் வான்புகழ் கொண்ட வள்ளுவர் பெருந்தகை அவர்கள்.

'கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம்' என்று சொன்னார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

அத்தகைய கல்விச் செல்வத்தை அனைவரும் பெறச் செய்ய வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட இயக்கம்தான் திராவிட இயக்கம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. மத ரீதியாக – வர்க்க ரீதியாக – சாதி ரீதியாக – இன ரீதியாக – பால் ரீதியாக, வேறுபாடுகளும் தீண்டாமைகளும் கற்பிக்கப்பட்டிருந்த இந்த நிலத்தில், அனைவரும் சமம் - அனைவருக்கும் சமவாய்ப்பு தரப்பட வேண்டும் என்பதற்காக உருவான இயக்கம்தான், திராவிட இயக்கம்.

திராவிட இயக்கத்தின் வரலாறு என்பது, ஏதோ தனித்த இயக்கத்தினுடைய வரலாறோ, தனிப்பட்ட மனிதர்களுடைய வரலாறோ கிடையாது. இரண்டாயிரம் ஆண்டுகளாக அடக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு இனம், சுயமரியாதை உணர்வோடு எப்படி போராடி மேலே வந்து இன்றைக்கு உயர்ந்து இருக்கக்கூடிய ஒரு போராட்ட வரலாறு! அதுதான் தமிழ்நாட்டினுடைய வரலாறு! அதுதான் நம்முடைய வரலாறு!

அதனால்தான், அடக்குமுறை எந்த வடிவில் வந்தாலும் நாம் எதிர்க்கிறோம்! சமத்துவம் பேசுகிறோம்! இந்த விழிப்புணர்வு நமக்கு அதிகமாக தேவை. அதிகமாக தேவை என்கிற காரணத்தால்தான், இந்தக் கல்வியை நாம் கற்றாக வேண்டும். அப்படித்தான் போராடி இந்த உரிமையைப் பெற்றிருக்கிறோம். அதற்குக் காரணம் கல்விதான்!

மகளிருக்காக ஏராளமான திட்டங்கள்

கல்வியை அனைவருக்கும் பொதுவானதாக ஆக்கும் கடமையை நீதிக்கட்சி காலத்தில் இருந்து செய்து கொண்டு வருகிறோம். அனைவருக்கும் சமமான கல்வி கிடைப்பதற்காகத்தான் சமூகநீதிக் கருத்தியல் உருவாக்கப்பட்டது. அதனடிப்படையில் கல்வி எல்லோரையும் சென்றடைய வேண்டும் என்றுதான், நம்முடைய திராவிட இயக்கத்தில் பல்வேறு திட்டங்கள் இதற்காக உருவாக்கப்பட்டது. அதிலும், பெண் சமூகத்தைக் கூடுதலாகக் கவனிக்க வேண்டும் என்பதற்காக ஏராளமான திட்டங்களை மகளிருக்காக உருவாக்கப்பட்டது. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால்,

- 1921ஆம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.
- 1989இல் சொத்தில் பெண்களுக்கு சம உரிமை, இந்தியாவிலேயே முதன்முதலாக கலைஞருடைய ஆட்சிக்காலத்தில்தான் பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்பட்ட அந்த புரட்சி நடந்தது.
- அரசுப் பணியிடங்களில் பெண்களுக்கு 30 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்ற சட்டம்.
- இன்றைக்கு உள்ளாட்சி அமைப்புகளை பார்க்கிறோம், இன்றைக்கு 50 சதவீதம் பெண்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். இதற்கு மூல காரணமே கலைஞருடைய ஆட்சிக்காலம்தான், முதன்முதலாக பெண்களுக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. அதுதான் இன்றைக்குப் படிப்படியாக வளர்ந்து 50 சதவீதமாக உருவாகியிருக்கிறது. மகளிர் உரிமைக்காக நாம் எவ்வளவோ செய்திருக்கிறோம், எவ்வளவோ போராடியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. மகளிர் சொந்தக் காலில் நிற்க வேண்டும், யாருடைய தயவையும் எதிர்பார்க்கக் கூடாது. அவரவர்கள் தங்களுடைய வாழ்க்கையை சுயமாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டம்தான், மகளிர் சுயஉதவிக் குழு என்கிற ஒரு அற்புதமானத் திட்டம். அது கலைஞருடைய

ஆட்சிக்காலத்தில்தான் தொடங்கப்பட்டது. 1989-1990இல் நாம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, தருமபுரியில் முதன்முதலாக அந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. அதற்குப் பிறகு, நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கில் அந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களை ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று நானே உருவாக்கினேன்.

அதேபோலத்தான் இப்போது கூட, நாம் ஆட்சிக்கு வந்த உடனே மகளிருக்குத் தான் முக்கியத்துவம் கொடுத்தோம். முதல் கையெழுத்து எந்த கையெழுத்து தெரியுமா? மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்து வசதியை ஏற்படுத்தித் தந்த திட்டத்திற்குத்தான் முதல் கையெழுத்து போட்டேன். அந்தத் திட்டத்தினை கணக்கெடுத்துப் பார்த்தால், இதுவரை 180 கோடி பயணங்களை பெண்கள் கட்டணமில்லாமல் மேற்கொண்டுள்ளார்கள்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம்

இந்த வரிசையில் தொடங்கப்பட்ட மகத்தான, ஒரு அற்புதமான திட்டம்தான், திராவிட இயக்கத்தின் பெண் சிங்கமாக இருக்கக்கூடிய மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களது பெயரால் தொடங்கப்பட்டிருக்கக்கூடிய இந்த புதுமைப் பெண் என்கிற ஒரு திட்டம்!

ஏன் இந்த புதுமைப் பெண் திட்டத்திற்கு இராமாமிர்தம் அம்மையார் அவர்களது பெயரை வைத்திருக்கிறோம் என்று கேட்டீர்களானால், அந்த அம்மையார் அவர்கள், அடக்கி ஒடுக்கப்பட்ட பெண்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தவர். படிக்கக் கூடாது என்று தடுக்கப்பட்ட பெண்களுக்காகப் போராடியவர். அந்தக் காலத்தில் மூடநம்பிக்கையெல்லாம் எப்படி இருந்தது என்று உங்களுடைய முன்னோர்கள் சொல்லியிருப்பார்கள், நீங்களும் தெரிந்திருப்பீர்கள். அந்த மூடநம்பிக்கை காரணமாக பெண்கள் முடக்கப்பட்டு வைத்திருந்தார்கள். அப்படி முடக்கப்பட்ட பெண்களுக்கு உரிமைக் கதவைத் திறந்தவர்தான் அந்த இராமாமிர்தம் அம்மையார் அவர்கள். 100 ஆண்டுகளுக்கு முன்னாலேயே, தந்தை பெரியார் அவர்களுடன் இணைந்து மகத்தானப் புரட்சியை நடத்தியவர் இராமாமிர்தம் அம்மையார் அவர்கள். 1938ஆம் ஆண்டு தமிழ்காக்கும் போராட்டத்துக்காக திருச்சியிலிருந்து சென்னை வரை நடைப்பயணம், பேரணி நடந்தது. அந்தப் பேரணியில் பங்கேற்ற பெண்மணிதான் இராமாமிர்தம் அம்மையார் அவர்கள். அதனால்தான், திராவிட இயக்கத்தின் தீரர்களுக்கு விருதுகளை வழங்கியபோது, முதல் விருதாக பேரறிஞர் அண்ணா அவர்கள் முடிவெடுத்து யாருக்கு வழங்கினார்கள் என்று கேட்டீர்களானால், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்குத்தான் அந்த முதல் விருதை வழங்கிப் பெருமைப்படுத்தினார்கள். அத்தகைய பெருமைமிகு அம்மையார் பெயரால் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது.

இன்னொரு செய்தியைக்கூட உங்களுக்கு சொல்ல வேண்டும். இராமாமிர்தம் அவர்கள் பிறந்த போது அவரது குடும்பம் மிகவும் வறுமையில் இருந்தார்கள். அந்த அம்மையாரை வளர்ப்பதற்கு அவரைப் பெற்றெடுத்திருக்கக்கூடிய தாய் மிகுந்த சிரமப்பட்டார்கள். அப்படிப்பட்ட சிரமம் அடைந்த காரணத்தினால் என்ன செய்தார்கள் என்றால், தனது பிள்ளையை அந்தக் காலத்தில் பத்து

ரூபாய்க்கு விற்றுவிட்டார்கள். பத்து ரூபாய்க்கு விற்கப்பட்டவர்தான் இராமாமிர்தம் அம்மையார் அவர்கள். அப்படி பத்து ரூபாய்க்கு விற்கப்பட்ட இராமாமிர்தம் அவர்கள் பெயரால்தான் இந்த பல்லாயிரக்கணக்கான பெண் பிள்ளைகள் மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் பெறக்கூடிய ஒரு அற்புதமான திட்டத்தை நாம் இன்றைக்கு தொடங்கி வைத்திருக்கிறோம்.

குடியரசு தின அணிவகுப்பில் மகளிர் சிலைகள்

இந்தத் திட்டம் கடந்த ஆண்டே தொடங்கப்பட்டது. அந்தத் திட்டத்தை முதன்முதலில் தொடங்கி வைத்தது யார் என்பது உங்களுக்குத் தெரியும். டெல்லியில் இருக்கக்கூடிய முதலமைச்சர் திரு. கெஜ்ரிவால் அவர்கள்தான் அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். கடந்த ஜனவரி மாதம் 26ஆம் தேதியன்று தலைநகர் டெல்லியில் குடியரசு நாள் அணிவகுப்பு நடந்தது. அந்த அணிவகுப்பில் தமிழ்நாடு அரசின் சார்பில் அலங்கார ஊர்தி ஒன்று வந்தது. அந்த அலங்கால ஊர்தியில் என்ன சிறப்பு என்று கேட்டால், தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த மகளிர்கள் ஏழு பேர். அந்த ஏழு பேர்களின் சிலைகளை அதில் வடிவமைத்து அந்தப் பேரணியில் அணிவகுத்து வந்தது. அந்த ஏழு பேரில் ஒருவர் யாரென்று கேட்டால், இராமாமிர்தம் அவர்களின் சிலையும் அதில் இடம் பெற்றிருந்தது. எனவே, அவருடைய பெயரால்தான் இந்தத் திட்டம் இன்றைக்குத் தொடங்கப்பட்டிருக்கிறது.

பல்வேறு சிரமங்களுக்கு இடையில், பள்ளிக்கல்வி பயின்றுள்ள அரசுப்பள்ளி மாணவிகள், College போகாமல் drop-out ஆகக்கூடாது என்பதற்காக இந்தத் திட்டம். இந்த மூவலூர் அம்மையார் பெயரால் உயர்கல்வி உறுதித் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இந்தத் திட்டத்தின் மூலமாக 6ஆம் வகுப்பில் படிக்கக் கூடியவர்கள், அவர்கள் தொடர்ந்து 12ஆம் வகுப்பு வரை படித்து, முடித்து, மேற்படிப்பிற்கு, கல்லூரிக்குச் செல்லுகின்ற நேரத்தில் அவர்களுக்கு வசதி இல்லாத காரணத்தினால், கல்லூரிக்குச் செல்லமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் மாதா மாதம் ரூ.1,000 அவர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாகச் செலுத்துகிற இந்தத் திட்டத்தை நாம் தொடங்கி வைத்திருக்கிறோம். இந்த மாணவிகள் ஏற்கெனவே பிற கல்வி உதவித்தொகைகளை பெற்று வந்தாலும் இந்தத் திட்டத்தில் கூடுதலாக இந்த உதவியை நீங்கள் பெறுகிறீர்கள்.

பாரதி மகளிர் கல்லூரியில் முதல் துவக்கம்

முதற்கட்டமாக, இந்தத் திட்டம் வட சென்னையில் பாரதி மகளிர் கல்லூரியில் தொடங்கப்பட்டது. அப்படி அந்தத் திட்டம் தொடங்கப்பட்டபோது, இன்றைக்கு வரைக்கும் பார்த்தீர்கள் என்றால், இதுவரைக்கும் 1 இலட்சத்து 16 ஆயிரம் மாணவிகள் பயனடைந்திருக்கிறார்கள். இதற்காக கடந்த ஐந்து மாதங்களில், ரூ.69.44 கோடி அரசின் சார்பில் வழங்கப்பட்டிருக்கிறது. குடும்பத்தின் பொருளாதாரச் சூழலால் படிப்பைப் பாதியில் நிறுத்த வேண்டிய நிலையில் இருந்த 12 ஆயிரம் மாணவிகள் இத்தொகை கிடைத்த காரணத்தினால், இன்றைக்கு அந்தப் படிப்பைத் தொடர்கிறார்கள் என்பதுதான் இந்தத் திட்டத்தின் மாபெரும் வெற்றி!

இப்போது, இது இரண்டாம் கட்டமாக இந்தத் திட்டத்தை நாம் தொடங்கி வைத்திருக்கிறோம். இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைப்பதற்காக, இந்த பட்டாபிராம் இந்து கல்லூரிக்கு நான் வந்திருக்கிறேன். பள்ளியுடன் படிப்பை நிறுத்திவிடும் பெண்ணுக்கு, மாதந்தோறும் ரூ.1,000 கிடைக்கின்ற காரணத்தினால், அவர்கள் கல்லூரிக்குள் நுழைகிறார்கள். இதன்மூலமாக தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி அதிகமாகும். படித்தவருடைய எண்ணிக்கை அதிகமாகும். அறிவுத்திறனும் கூடும். திறமைசாலிகள் அதிகமாக உருவாகுவார்கள். பாலின சமத்துவம் ஏற்படும். குழந்தைத் திருமணங்கள் குறையும். பெண்கள் அதிகாரம் பெறுவார்கள். சொந்தக் காலில் பெண்கள்நிற்பார்கள்,இப்படி சொல்லிக்கொண்டேப் போகலாம்.

அதுதான் திராவிட மாடல் ஆட்சி என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் பள்ளிப்படிப்பை முடித்து, உயர்கல்வியைத் தொடர முடியாமல் கைவிட்ட 10,146 மாணவிகள் இந்தத் திட்டத்தின் வாயிலாக தங்களது உயர்கல்வியை பயிலத் தொடங்கியிருக்கிறார்கள். இதுவே இந்தத் திட்டத்தின் வரவேற்பிற்கும், வெற்றிக்கும் சான்றாக அமைந்திருக்கிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்திருக்கக்கூடிய மொத்த மாணவிகள் 1,56,016 பேர்களில், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் சுமார் 48,660 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் சுமார் 50,550 பேர், பட்டியலின வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் சுமார் 44,880 பேர், பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் சுமார் 1,900 பேர் இதனால் பயனடைந்திருக்கிறார்கள்.

கல்வி அறிவும், கலைத்திறனும் யாராலும் அழிக்க முடியாத சொத்துகள்

மேலும் பல உதவிகளைச் செய்து கொடுக்க நாம் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, உங்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, நன்றாகப் படியுங்கள் - படியுங்கள் - படியுங்கள் என்பது மட்டும்தான். உயர்கல்வியைப் படியுங்கள். ஏதாவது ஒரு பாடத்தில் ஆராய்ச்சி செய்யுங்கள். தகுதியான வேலைகளில் சேருங்கள். பெண்ணுக்கு திருமண வாழ்க்கை என்பது எவ்வளவு முக்கியமோ அதேபோல் - பொருளாதார சுதந்திரமும் முக்கியம். தகுதியுள்ள வேலைவாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். படிக்கும் காலத்தில் திறமையோடு செயல்படக்கூடிய எண்ணத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். திருமணத்திற்குப் பிறகு பெண்கள் வீட்டுக்குள்ளே இருந்து விடுகிறார்கள்.

கல்வி அறிவும், கலைத்திறனும், தனித்திறமைகளும்தான் யாராலும் அழிக்க முடியாத சொத்துகள்! அதனைப் பயன்படுத்தி வாழ்நாள் முழுக்க நீங்கள் அனைவரும் உங்களுக்கென ஒரு தனித்த ஓர் அடையாளத்துடன் திகழ வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

படிக்கும் காலத்தில் கவனச் சிதறல்கள் வேண்டாம். கல்லூரிக் காலத்தை படிப்புக்கும், உயர்வுக்கும் நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். இதை இந்த நாட்டினுடைய முதலமைச்சராக மட்டுமல்ல, உங்களுடைய சகோதரனாக, உங்களுடைய உடன்பிறப்புகளில் ஒருவனாக, இன்னும் சொல்லவேண்டுமென்றால், உங்கள் தந்தையாக இருந்து நான் உங்களையெல்லாம் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். உங்களை வளர்த்தெடுக்கவே இந்தத் திட்டத்தை நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம்.



உறுதிமொழிகள் 85 சதவீதம் நிறைவேற்றம்

இதை இந்த அரசே உங்களின் தோழனாக கருதி, இதை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்னென்ன திட்டங்களைச் செய்வோம், என்னென்ன உறுதிமொழிகளை நிறைவேற்றுவோம் என்று தேர்தல் அறிக்கையில் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருந்தோம். அவைகள் எல்லாம் இன்றைக்கு எந்த அளவிற்கு நிறைவேற்றப்படுகிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஒன்றிரண்டு திட்டங்கள் இன்னும் நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எவ்வளவுதான் நிதி நெருக்கடி நிலை இருந்தாலும், அதையெல்லாம் சமாளித்து, அதையெல்லாம் ஓரளவிற்கு சரிசெய்து, முடிந்த வரைக்கும், நாம் அறிவித்த திட்டங்களை இதுவரைக்கும் பெருமையோடு சொல்கிறேன், 85 சதவீதத்திற்கு மேல் உறுதிமொழிகளை நிறைவேற்றி இருக்கிறோம். இன்னும் ஒரு 10, 15 சதவீதம் மிச்சம் இருக்கிறது அதை நான் மறுக்கவில்லை. அதையும் நான் உறுதியோடு சொல்கிறேன். நிச்சயமாக, உறுதியாக அதையும் வரக்கூடிய காலக்கட்டத்தில் முழுமையாக நிறைவேற்றக்கூடிய ஆட்சிதான் இந்த திராவிட மாடல் ஆட்சி. அறிவித்த திட்டங்கள் மட்டுமல்ல, அறிவிக்காத திட்டங்களும் இன்றைக்கு நிறைவேற்றப்படுகிறது. அதுதான் இந்த புதுமைப் பெண் திட்டம்.

தேர்தல் அறிக்கையில் புதுமைப் பெண் திட்டம் அறிவிக்கவில்லை. அதை இன்றைக்கு நிறைவேற்றுகிறோம். இப்படி பல்வேறு திட்டங்களை, சொன்னது மட்டுமல்ல, சொல்லாததையும் செய்யக்கூடிய ஓர் ஆட்சிதான் இந்த திராவிட மாடல் ஆட்சி என்பதை நீங்கள் புரிந்து கொண்டு, அப்படிப்பட்ட ஆட்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று நான் உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு உங்களுடைய வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள இந்தக் கல்வியை நீங்கள் நல்ல வகையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டு, இந்தத் திட்டத்தின் மூலமாக பயனடையக்கூடிய நம்முடைய மாணவியர்களை நான் உங்கள் அனைவரின் சார்பில், வாழ்த்தி, விடைபெறுகிறேன். ●

மாணவர்களின் நலனுக்காக அயராது பாடுபட்டுவரும் ஆசிரியர்களை சிறப்பிக்கும் வகையில் ரூ.225 கோடி மதிப்பீட்டில் ஆசிரியர்கள் நலன் காக்கும் புதிய திட்டங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆசிரியர்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து காணொலிக்காட்சி வாயிலாக ஆற்றிய உரை - 01.03.2023

அனைவருக்கும் வணக்கம்.

கல்வி என்பது நாம் போராடிப் பெற்ற உரிமை. உலக அறிவை வளர்க்கவும், பகுத்தறிவோடு சிந்திக்கவும் கல்வி அறிவு மிகவும் முக்கியம். ஒருவர் வாழ்க்கையில் கற்றுக்கொள்கின்ற கல்வி அவரை என்றைக்கும் கைவிடாது. அதனால்தான், கல்வி யாராலும் திருட முடியாத சொத்து என்று சொல்கிறேன்.

குழந்தைகள் பள்ளிகளை நோக்கி வரவேண்டும். கல்வியைப் பெறவேண்டும் என்பதற்காகத்தான் நீதிக்கட்சி காலத்தில் இருந்து பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அதிலேயும், தரமான கல்வியைக் கொடுக்க கடந்த இரண்டு ஆண்டுகளாக, அரசுப் பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக நம்முடைய திராவிட மாடல் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

நான் முதல்வன் திட்டம்

அதில் முதன்மையான திட்டம் என்றால் அது "நான் முதல்வன்". நான் முதல்வன் என்று என்னை சொல்லவில்லை. என்னை, தமிழ்நாட்டு மக்கள் முதலமைச்சராக ஆக்கினார்கள். என் தலைமையிலான நமது ஆட்சியில், மாணவ, மாணவியர் அனைவரும் முதன்மையானவர்களாக உருவாக்கப்பட்டதுதான் நான் முதல்வன்.

உயர்க்கல்வி கற்பதற்கும் நல்ல முறையில் வேலைவாய்ப்புகள் பெறுவதற்கும் ஒவ்வொரு பள்ளியிலும் வழிகாட்டி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. அதற்கேற்ற வழிகாட்டிநூல், பாட வேளை அந்தந்த பள்ளியிலிருந்தே ஒரு வழிகாட்டி ஆசிரியர் என அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

2021-2022 கல்வி ஆண்டில், பன்னிரெண்டாம் வகுப்பு முடித்தவர்களை அவர்கள் உயர்கல்வி சேர்ந்துவிட்டார்களா என்று உறுதி செய்வதற்கான பல்வேறு முயற்சிகளை பள்ளிக் கல்வித் துறை எடுத்தது. அதில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் சிலர் உயர்கல்விக்கு செல்லவில்லை என்பதை அறிந்து, அவர்களை பள்ளிக்கு வரவழைத்து அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்து உயர்கல்வி கற்பதற்கானத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டது. இந்த முயற்சி நடப்பு கல்வியாண்டிலும் செயல்படுத்தப்படும்.

புதுமைப்பெண் திட்டம்

மாணவர்கள் ஒருவர்கூட தவறாமல் உயர்கல்விக்குச் செல்ல வேண்டும். அதில் தி.மு.க. அரசு உறுதியாக இருக்கிறது. உயர்கல்வியை மாணவியர் அனைவரும் பெற வேண்டும் என்பதற்காக புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவிகள் உயர்கல்வி பயில செல்லும்போது அவர்களுக்கு மாதாமாதம் ரூ.1,000 வழங்கும் திட்டம்தான் புதுமைப்பெண் திட்டம். இது புரட்சிகரமான திட்டம் என்பதை பயன்பெறும் மாணவிகளும் அவர்களுடைய பெற்றோரும் பெருமையாகச் சொல்கிறார்கள்.

அதேமாதிரி, அரசுப் பள்ளிகளில் பயின்றவர்களுக்கென தொழிற் கல்லூரியில் 7.5 விழுக்காடு இடஒதுக்கீடும் வழங்கப்பட்டு வருகிறது. சிறிய வயதிலேயே கல்வியில் ஆர்வம் வந்துவிட்டால், உயர்கல்வியில் உன்னத இடத்தைப் பிடிக்க முடியும்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

படிப்பில் ஆர்வம் ஏற்பட வேண்டும் என்றால், வயிற்றில் பசி இருக்கக்கூடாது. பள்ளிக்கு வருகிறபோது பசியோடு வந்தால் பாடம் மனதில் பதியாது. அதனால்தான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை இந்தியாவிலேயே முதன்மையாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி இருக்கிறது. ஏழைக் குடும்பப் பிள்ளைகள், வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் வீட்டுப் பிள்ளைகள் உட்பட பலரும் இத்திட்டத்தால் பலன் பெறுவதால், மாணவர்கள் பள்ளிக்கு வருவது அதிகரித்திருக்கிறது. இப்போது இந்தத் திட்டம் அனைத்து தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட இருக்கிறது. மாணவர்களுடைய வருகையை உறுதி செய்ய வேண்டும். பாதியில் படிப்பை நிறுத்திவிடாதபடி கவனிக்க வேண்டும். இது அரசின் பொறுப்பும்கூட. அதனால்தான், கொரோனா கால ஊரடங்கு காரணமாக கல்வி பாதிக்கப்பட்டு கற்றல் இடைவெளி ஏற்பட்ட நிலையில், அதனை சரிசெய்வதற்காக "இல்லம் தேடி கல்வி" எனும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2 இலட்சம் தன்னார்வலர்களையும் ஏறத்தாழ 35 இலட்சம் மாணவர்களைக் கொண்டும் "இல்லம் தேடி கல்வி" திட்டம் சிறப்பாக இயங்கி வருகிறது. இதில் ஒன்றாம் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் கற்றல் இடைவெளியைக் குறைப்பதற்கு "எண்ணும் எழுத்தும்" திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு பாடங்களை மகிழ்ச்சியுடன் கற்பதற்கு வழி காணப்பட்டுள்ளது.

வானவில் மன்றம்

மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தைத் தூண்டவும், பகுத்தறிவு மனப்பான்மையை வளர்க்கவும் அவர்களுக்கு அன்றாட அறிவியலையும் கணிதத்தையும் கற்றுத்தரும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்டதுதான் "வானவில் மன்றம்". இதன் வாயிலாக மாணவர்கள் வகுப்புக்கு உள்ளேயும் வெளியேயும் உற்சாகமாக அறிவியலை கற்கின்றனர். பாடத்திட்டம் சார்ந்த அறிவையும் திறனையும் மேம்படுத்திக்

கொள்வதுடன் தங்களின் தனிப்பட்ட கலைத் திறமையையும் மாணவர்கள் வெளிப்படுத்துவதற்காக அரசுப் பள்ளிகளில் கலைத் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றன. ஊர்த் திருவிழா போல அத்தனை கோலாகலம், கொண்டாட்டம். ஏறத்தாழ, 25 இலட்சம் மாணவ, மாணவியர் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் இந்தக் கலைத் திருவிழாவில் பங்கேற்று தங்களுடைய திறமையை வெளிப்படுத்தினார்கள். வெற்றி பெற்ற மாணவர்கள், வரும் மாதங்களில் வெளிநாட்டு சுற்றுலாவிற்கு செல்லவிருக்கின்றனர். உலகளாவிய பார்வை உள்ளூரில் உள்ள மாணவர்களுக்கும் வாய்க்க வேண்டும் என்பதற்காக அரசுப் பள்ளிகளில் திரையிடல் நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. பல்வேறு மொழிகளின் திரைப்படங்களை, பல்வேறு நாடுகளின் பண்பாட்டை, நிலப்பரப்பை இந்த திரைப்படங்கள் வாயிலாகக் காண்பது அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மிகப்பெரிய அனுபவத்தை அளிக்கிறது. இந்த திரையிடலில் சிறப்பாகச் செயல்பட்ட மாணவர்களுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பும் காத்திருக்கிறது.

பள்ளிகளுக்குச் சிறப்பு விருந்தினர்களாகச் சென்றுவந்த எழுத்தாளர்கள், கல்வியாளர்கள், திரை இயக்குநர்கள் ஆகியோர் அனுபவங்களை பொதுவெளியில் எழுதியும், பேசியும் வருகின்றனர். பிரபலமானவர்களின் கருத்துக்கள் அனைத்துத் தரப்பு மக்களிடமும் சென்று சேருகிறது.

தேன் சிட்டு இதழ்

படிப்புத் திறனுடன் படைப்புத் திறனும் சிறந்திட வேண்டும் என்பதே நமது நோக்கம். தமிழ்நாட்டு பள்ளிக் கல்வி வரலாற்றில் முதன்முறையாக அரசுப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கென "தேன் சிட்டு" என்கிற இதழ் மாதம் இருமுறை வெளியாகிறது. தேன் மிட்டாய் போல "தேன் சிட்டு" இதழை மாணவர்கள் விரும்புவதுடன், இணையம் மூலம் நடக்கும் வினாடி-வினா போட்டிகளிலும் மாணவர்கள் மிக உற்சாகமாகப் பங்கேற்கிறார்கள். இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றோர், சென்ற ஆண்டு துபாய்க்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஒவ்வொரு ஆண்டிலும் இந்த வெற்றிப்பயணம் தொடரும்.

நம்ம ஸ்கூல் ஃபவுண்டேசன்

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்வித்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஏறத்தாழ ரூ.2,000 கோடி மதிப்பிலான புதிய கட்டுமானங்கள் நடைபெற்று வருகிறது. அரசுப் பள்ளிகளின் மேம்பாட்டிற்கென "நம்ம ஸ்கூல் ஃபவுண்டேசன்" தொடங்கப்பட்டு இருக்கிறது. முன்னாள் மாணவர்கள், நிறுவனங்கள், பொதுமக்கள் என அனைவரும் தாங்கள் பயின்ற அரசுப் பள்ளிகளுக்கு உதவ இதனால் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய கட்டமைப்புகளும், கல்வி சார்ந்த புதிய திட்டங்களும் அனைத்து மாணவர்களும் உயர்கல்விக்குச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தின் விளைவுகள். இடைநிற்றல் மாணவர்களைக் கண்டறிவதும், அவர்களை மீண்டும் பள்ளிக்கு அழைத்துவந்து படிக்கச் செய்வதும், பொதுத் தேர்வில் தேறிய பிறகும் உயர்கல்வி பெறமுடியாமல் போன மாணவர்களை அடையாளம் கண்டு, அவர்களை மேலும் மேலும் படிக்கச் செய்யும் நோக்கத்துடன் செயல்படுவதும் ஆசிரியப் பெருமக்களே. அரசின் எண்ணங்களுக்கு செயல்வடிவம் தருபவர்கள் ஆசிரியர்கள்தான். ஆசிரியர்களின் அளப்பறியப் பணி இல்லையெனில், இத்தகையத் திட்டங்கள் எதுவும் செயல்பாட்டிற்கு வந்திருக்க வாய்ப்பு இல்லை. ஆசிரியர்களின் முக்கியத்துவம் எந்த அளவுக்கு என்றால், அம்மா-அப்பாவுக்கு அடுத்த இடத்தில் கல்வி கற்றுத் தர ஆசிரியர்களான உங்களைத்தான் நம் சமூகம் வைத்திருக்கிறது. அப்படிப்பட்ட ஆசிரியர்களை ஊக்கப்படுத்த, வாசிப்புத் திறனை மேம்படுத்த, படைப்பாற்றலை வளர்க்க "கனவு ஆசிரியர்" என்ற மாத இதழ் வெளிவருகிறது.

ஆசிரியர் நலன் காக்கும் திட்டங்கள்

மாணவர்களின் நலனுக்காக அயராது பாடுபட்டு வரும் ஆசிரியர் சமூகத்தைச் சிறப்பிக்கும் விதமாகவும், ஆசிரியர்கள் நலனைக் காக்கவும் புதிய திட்டங்களை இந்தக் காணொளி மூலம் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மாறி வரும் கற்றல், கற்பித்தல் முறைகளுக்கேற்ப தங்களை சிறப்பாக மெருகேற்றிக் கொள்வதற்கென அனைத்து இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் கைக்கணினி (Tablet) வழங்கப்படும்.

மாணவர் வாழ்க்கை ஏற்றம் காண அயராது உழைக்கும் ஆசிரியப் பெருமக்களின் உடல்நலம் காக்க, அனைத்து ஆசிரியர்களுக்கும் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை முழு உடல் பரிசோதனை செய்யப்படும்.

உயர்கல்வி பயிலும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான கல்விச் செலவு ரூ.50,000 வரை உயர்த்தி வழங்கப்படும்.

அரசின் நலத்திட்ட உதவிகளை மாணவர்களிடம் சிறப்பாகக் கொண்டு சேர்க்கும் ஆசிரியர்கள் வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர்.

இந்தத் திட்டங்கள் சுமார் ரூ.225 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்ற செய்தியை இந்தக் காணொளி மூலம் உங்களிடம் பகிர்ந்துகொள்வது பெரும் மகிழ்ச்சி. ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் ஒத்துழைப்பும், கல்வித் துறையில் தமிழ்நாடு அரசின் இலட்சிய இலக்கை அடைவதற்குத் துணையாக இருப்பதால், மாணவர்கள் தங்கள் திறனை மேம்படுத்திக்கொண்டு நன்றாகக் கல்வி கற்று, உயர்கல்வியில் பல பல பட்டங்கள் பெற்று உயர்ந்த நிலைக்குச் சென்றிட வாழ்த்துகிறேன்.

கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற மகாகவி பாரதியின் வரிகளை மாணவர்களும், ஆசிரியர்களும் நிலைநிறுத்துவார்கள் என்ற நம்பிக்கையினை வெளிப்படுத்தி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், அதிகாரிகள் உள்ளிட்ட அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள். ◆

அன்று...

"கிராமங்களையெல்லாம் முன்னேற்ற வேண்டும்; அவர்களுடைய தேவைகளையெல்லாம் நிறைவு செய்ய வேண்டும்; சாலையா, தண்ணீரா, மருத்துவமனையா, பள்ளிக்கூடமா, கல்லூரியா என்று என்னென்ன கிராமங்களிலே வரவேண்டுமென்று கருதுகிறோமோ அவைகளையெல்லாம் கொண்டுவரும் நோக்கத்தில், **"அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்"** என்ற திட்டத்தை மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் **மு.கருணாநிதி** அவர்கள் 21.01.2007 அன்று அரக்கோணத்தில் தொடங்கிவைத்தார்."

இன்று...

"பத்தாண்டு தொலைநோக்குத் திட்டமான 11.75 இலட்சம் எக்டர் நிலங்களை கூடுதலாக சாகுபடிக்குக் கொண்டுவருதல், இருபோக சாகுபடிப் பரப்பினை 20 இலட்சம் எக்டராக உயர்த்துதல், உணவு தானியங்கள்,தேங்காய்,பருத்தி,நிலக்கடலை பயிர்கள் ஆக்கத்திறனில் தேசிய அளவில் முதல் மூன்று இடங்களைப் பிடித்தல் ஆகிய தொலைநோக்குத் திட்டங்களை அடைந்திடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 23.05.2022 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் **"கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை"** தொடங்கிவைத்தார்."

கனமழையால் பாதிக்கப்பட்ட டெல்டா மற்றும் இதர மாவட்ட விவசாயிகளுக்கு பயிர் நிவாரண உதவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
அறிவிப்பு – 06.02.2023

வங்கக் கடல் மற்றும் அதனருகில் உள்ள மத்திய இந்திய பெருங்கடல் பகுதியில் 29.01.2023 அன்று குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவானது. இது 30.01.2023 அன்று நன்கமைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாகவும், பின்னர் காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாகவும் வலுப்பெற்றது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் டெல்டா மற்றும் இதர மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்துள்ளது. இக்கனமழையால் அறுவடைக்குத் தயார் நிலையில் இருந்த நெற்பயிர் உள்ளிட்ட வேளாண் பயிர்களை மழை நீர் சூழ்ந்து, சேதம் ஏற்பட்டுள்ளது.

பருவம் தவறிய கனமழையால் ஏற்பட்ட பாதிப்பு குறித்த் தகவலறிந்ததும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு உணவு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் மற்றும் மூத்த அதிகாரிகளை பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்டங்கள் மற்றும் இதர மாவட்டங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்திடவும், விவசாயிகளிடம் நேரடியாக சந்தித்து குறைகளைக் கேட்டறியவும் உத்தரவிட்டார்.

அதோடு மட்டுமல்லாமல், கனமழையால் பாதிக்கப்பட்ட அறுவடை செய்யப்பட்ட நெல்மணிகளை நேரடிக் கொள்முதல் நிலையம் மூலம் கொள்முதல் செய்திடும்போது, விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, 22 சதவிகிதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்திட உரிய தளர்வுகளை வழங்கிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு 05.02.2023 அன்று கடிதம் மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாண்புமிகு அமைச்சர்கள், அரசு உயர் அலுவலர்கள் 05.02.2023 அன்று கனமழையால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் நேரில் ஆய்வு செய்ததோடு, விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து கனமழையால் ஏற்பட்ட

பாதிப்பு குறித்தும், அதனைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் கேட்டறிந்தனர்.

இந்த நிலையில், கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தலைமைச் செயலகத்தில் 06.02.2023 அன்று மாண்புமிகு அமைச்சர்கள் சந்தித்து விளக்கியதோடு, அதுதொடர்பான அறிக்கையினையும் வழங்கினர்.

மாண்புமிகு அமைச்சர்களின் கருத்துக்கள் மற்றும் அறிக்கையின் அடிப்படையில், பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, பின்வரும் நிவாரணத் தொகுப்பினை வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

- கனமழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பயிர் சேத கணக்கெடுப்பு வருவாய்த்துறை மற்றும் வேளாண்மைத் துறையால் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படும்.
- கனமழையால் அறுவடைக்குத் தயாராக இருந்து பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கு இழப்பீடாக, பேரிடர் மேலாண்மை விதிமுறைகளின்படி, 33 சதவிகிதம் மற்றும் அதற்குமேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள இனங்களில் எக்டேருக்கு ரூ.20,000 வழங்கப்படும்.
- நெல் அறுவடை தரிசில் விதைக்கப்பட்டு சேதமடைந்த இளம் பயறுவகைப் பயிர்களுக்கு இழப்பீடாக எக்டேருக்கு ரூ.3,000 வழங்கப்படும்.
- நெல் தரிசில் உளுந்து தெளித்து கனமழையால் பாதிக்கப்பட்ட உளுந்து விவசாயிகளுக்கு மீண்டும் உளுந்து விவசாயம் செய்ய 50 சதவிகிதம் மானியத்தில் ஒரு ஏக்கருக்கு 8 கிலோ பயறு விதைகள் வழங்கப்படும்.
- கன மழையால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் நெல் அறுவடையை உடன் மேற்கொள்ள வேளாண் பொறியியல் துறை மூலம் 50 சதவிகிதம் மானியத்தில் நெல் அறுவடை இயந்திரம் வாடகைக்கு வழங்கப்படும்.
- பருவம் தவறிய கன மழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள கிராமங்களில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பயிர் அறுவடை பரிசோதனைகள் முடிக்கப்பட்டிருப்பின், கூடுதலாக மீண்டும் தற்போது மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். ◆

சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் அவர்களின் 164ஆவது பிறந்தநாள்

படமும்/ செய்தியும்

சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் அவர்களின் 164ஆவது பிறந்த நாளையொட்டி, 18.02.2023 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரின் திருவுருவப்படத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கலாநிதி வீராசாமி, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.த.மோகன், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சு.அமிர்தஜோதி, இ.ஆ.ப., ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் வசிக்கும் 120 மாணவர்களுக்கு ரூ.39.20 இலட்சம் கல்வி உதவித்தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
வழங்கினார் - 07.02.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 07.02.2023 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் வசிக்கும் 120 மாணவர்களுக்கு எச்.டி.எப்.சி வங்கியின் சமூக பொறுப்பு நிதியிலிருந்து (HDFC Bank CSR Fund) வழங்கப்பட்ட ரூ.39.20 இலட்சம் கல்வி உதவித் தொகையினை வழங்கிடும் அடையாளமாக 12 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகைக்கான ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், ஆற்றங்கரை ஓரங்கள், சாலை ஓரங்கள் மற்றும் பிற ஆட்சேபனைக்குரியப் பகுதிகளில் வசிக்கின்ற குடும்பங்கள், பொருளாதாரத்தில் நலிவுற்ற வீடற்ற ஏழை, எளிய குடும்பங்களுக்கு வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகளில் குடியமர்த்தி வருகிறது. குடியிருப்புகள் வழங்குவது மட்டுமல்ல இந்த வாரியத்தின் நோக்கம் அவர்களுடைய வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற நோக்கில் குழந்தை நல மையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், நியாயவிலைக் கடைகள், பள்ளிகள், நூலகங்கள், ஆவின் பாலகங்கள், சமுதாயக் கூடங்கள் போன்ற சமூக உட்கட்டமைப்பு வசதிகள் வாரியத்தால் அரசின் பிற துறைகளின் ஒருங்கிணைப்புடன் வழங்கப்படுகின்றன. மேலும், வாரியக் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்காக திறன் மேம்பாட்டுப் பயிற்சி, வேலைவாய்ப்பு முகாம்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பிற சமூக மேம்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாரிய குடியிருப்புகளில் வசிக்கும் உயர்கல்வி பயிலும் மாணவ / மாணவியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் கல்வி உதவித்தொகை பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு 141 மாணவ, மாணவியர்களுக்கு எச்.டி.எப்.சி. வங்கியின் சார்பில் ரூ.42.30 இலட்சம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, இந்த வருடமும் மருத்துவம், பொறியியல், இளங்கலை மற்றும் முதுகலை போன்ற உயர்கல்விப் பயிலும் மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையில் எச்.டி.எப்.சி. வங்கியின் சமூகப் பொறுப்பு (CSR) நிதியின்கீழ் வாரிய திட்டப்பகுதிகளான கோவிந்தசாமி நகர், கண்ணகி நகர், பெரும்பாக்கம், நாவலூர், எம்.எஸ். நகர், கே.பி.பார்க், நொச்சி நகர், அகில இந்திய வானொலி திட்டப்பகுதி, வெங்கடாபுரம் திட்டப்பகுதி, நொச்சிக்குப்பம், அத்திப்பட்டு திட்டப்பகுதி, நல்ல தண்ணீர் ஓடைக்குப்பம், பருவாநகர் திட்டப்பகுதி, தாழங்குப்பம், டி.டி. பிளாக், என்.வி.என் நகர், புஷ்பா நகர், ராணி அண்ணா நகர் திட்டப்பகுதி, டோபிக்கானா, காசிமேடுக் குப்பம், சிங்கார வேலன் நகர், காந்தி நகர், பெரிய கூடல் நகர், மங்களபுரம், காமராஜபுரம், பச்சைகல் வீராசாமி தெரு, வேம்புலியம்மன் கோயில் தெரு, லாக் நகர், சேத்துப்பட்டு அப்பாசாமி தெரு, திருவல்லிக்கேணி, கோதாமேடு, டோபிக்கானா, கொத்தவால்சாவடி ஆகிய திட்டப்பகுதிகளில் மொத்தம் 120 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.39.20 இலட்சம் கல்வி உதவித்தொகை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகைக்கான ஆணைகள் வழங்கப்பட்டன.

ஏப்ரல் 17: சுதந்திரப்போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்கள் பிறந்தநாள்

மாவீரன்

"வீரம் விளைந்த நம் தமிழ் மண்ணில் பிறந்து, நாட்டின் விடுதலைக்காகத் தங்கள் உயிரையும் தியாகம் செய்த மாமனிதர்களில் ஒருவர் தீரன் சின்னமலை.

பல்வேறு போர்க் கலைகளையும் கற்றுத் தேர்ந்தவர். தைரியமும் விவேகமும் கலந்த போர் முறைகளைத் தனது படைகளுக்குக் கற்றுக் கொடுத்து, இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்து, ஆங்கிலேயர்களின் கிழக்கிந்திய கம்பெனியை அடியோடு ஒழிக்க எண்ணியவர்.

ஆங்கிலேயர்கள் பலரையும் தோல்வியடையச் செய்து அவர்களின் தலைகுனிவிற்குக் காரணமாக அமைந்த தீரன் சின்னமலையை சூழ்ச்சியால் தீர்த்துக் கட்ட எண்ணிய ஆங்கிலேயர்கள் அவரது சமையல்காரன் நல்லப்பனுக்கு ஆசை வார்த்தைகள் கூறி, அந்த மாவீரனையும் மற்றும் அவரது சகோதரர்களையும் கைது செய்தனர். அவர்களை, சங்ககிரிக் கோட்டைக்குக் கொண்டு சென்று சிறை வைத்தனர். ஆங்கிலேயர்களின் ஆட்சியை ஏற்க வற்புறுத்தப்பட்டபோது அவர்கள் அதற்கு இணங்க மறுத்தனர்.

ஜூலை 31, 1805 அன்று சங்ககிரிக் கோட்டையின் உச்சியில் தீரன் சின்னமலையும் அவரது சகோதரர்களும் தூக்கிலிடப்பட்டனர். தம்பிகளுடன், தீரன் சின்னமலையும் வீரமரணமடைந்தார்."

"அரசுத் திட்டங்களை தாமதமின்றி முழுமையாகவும், விரைந்தும் முடித்திட வேண்டும்"

முத்திரை பதிக்கும் முத்தானத் திட்டங்கள் குறித்த ஆய்வின்போது துறைச் செயலாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவுரை - 09.02.2023

தமிழ்நாட்டில் முத்திரை பதிக்கும் முத்தானத் திட்டங்கள் (Iconic Projects) தொடர்பாக 09.02.02023 அன்று, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10ஆவது தளத்திலுள்ள கூட்ட அரங்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தி வரும், மிக முக்கியத்துவம் வாய்ந்த, பெரிய திட்டப் பணிகள் துறை வாரியாகத் தொகுக்கப்பட்டு 'முத்திரை பதிக்கும் முத்தானத் திட்டங்கள்' (Iconic Projects) என ஆய்வு செய்யப்படுகின்றன. முதலாவது ஆய்வுக் கூட்டத்தில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாடு, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல், சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை, பள்ளிக்கல்வி, சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, கால்நடை, பால் உற்பத்தி மற்றும் மீன்வளம், பொதுத் துறை மற்றும் மறுவாழ்வு, உயர்க் கல்வி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, வருவாய் ஆகிய பன்னிரண்டு துறைகளைச் சார்ந்த நடைமுறையில் உள்ள 51 திட்டங்கள் குறித்தும், 19 எதிர்கால திட்டங்கள் குறித்தும், அவற்றின் தற்போதைய நிலை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது துறைச் செயலாளர்கள் தங்களது துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் குறித்து, விளக்கப் படங்கள் வாயிலாக எடுத்துரைத்தனர்.

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அறிவிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு செய்து, அவற்றில் சுணக்கம் ஏற்படாத வண்ணம் கண்காணித்து, அவற்றை முழுமையாகவும், விரைந்தும் முடிக்க துறைச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தினார். அதோடு, புதிய திட்டங்களை அறிவிப்பதில் உள்ள ஆர்வம், அவற்றை விரைந்து நிறைவேற்றுவதிலும்

இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மேலும், திட்டத்தினைச் செயல்படுத்தும்போது காலதாமதம் ஏற்படின், அது திட்டச் செலவினத்தை அதிகப்படுத்துவதோடு, பொதுமக்களுக்கும் மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டுமென்றும், திட்டங்களுக்கான வடிவமைப்பு மற்றும் ஒப்பந்தப் பணிகளை விரைவாக இறுதி செய்து, இன்னும் துவங்காத பணிகளைத் துவக்கி, அவற்றைத் துரிதமாகவும், தரமாகவும் முடித்திடவும் அனைத்துத் துறை அரசுச் செயலாளர்களையும், துறைத் தலைவர்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

அரசுத் திட்டங்களைச் செம்மையாக நிறைவேற்றிட துறைகளுக்கிடையான ஒருங்கிணைப்பு அவசியம் என்று குறிப்பிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அனைத்துத் திட்டங்களுமே அரசின் திட்டங்கள்தான் என்பதை மனதில் நிறுத்தி அரசு அலுவலர்கள் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

ஆய்வு செய்யப்படும் பணிகளின் முன்னேற்றம் குறித்து, இரண்டு மாதத்திற்கு ஒருமுறைதான் ஆய்வு செய்யவுள்ளதாகத் தெரிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர் அவர்களும் மாதந்தோறும் இந்தத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.

அன்புள்ள மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்களே, அரசு முதன்மைச் செயலாளர்களே, துறையினுடைய செயலாளர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த இருபது மாத காலத்தில் எத்தனையோ நல்ல பல திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறோம். இந்தத் திட்டத்தை வடிவமைப்பதில் தொடங்கி, இதனைச் செயல்படுத்துவது வரை- தினந்தோறும் கண்காணித்து அவற்றை ஆர்வத்தோடு செயல்படுத்தி வரக்கூடிய அனைத்து உயரதிகாரிகளுக்கும் என்னுடைய நன்றியை முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு என்பது முதலமைச்சர் மட்டுமல்ல, அமைச்சர்கள், அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோர் இணைந்ததே. இம்மூன்று பகுதிகளும் ஒன்றாக இணைந்து ஒருமுகப்பட்டுச் செயல்படுவதே நல்லாட்சியாக அமைந்திட முடியும். அத்தகைய நல்லாட்சியை நாம் நடத்தி வருகிறோம் என்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. எனக்கு இந்தக் காலகட்டமானது மனநிறைவை அளித்துள்ளது என்பதை வெளிப்படையாகவே உங்களிடம் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இதனை மேலும் வலுப்படுத்த வேண்டும். அதை நோக்கமாகக் கொண்டே இந்தக் கூட்டத்தை இன்றைக்கு நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, பத்தாண்டு காலம் பெருமளவில் ஒரு தொய்வு இருந்தது. அதனை நீங்கள் நன்றாக அறிவீர்கள். அந்தத் தொய்வை நீக்குவது மட்டுமல்ல, உயர்வை உருவாக்குவதுமான இரண்டு இலக்குகள் நமக்கு இருந்தது. அந்த இலக்கில் முன்னோக்கியே நாம் சென்று கொண்டு இருக்கிறோம். கடந்த இருபது மாத காலத்தில் அறிவிக்கப்பட்ட புதிய புதிய திட்டங்களை மொத்தமாகப் பார்த்தாலே நீங்கள் தெளிவாக அறியலாம்.

இவை அனைத்தையும் அறிவித்தது சாதனை அல்ல, அந்த அறிவிப்புகள் எப்படிச் செயல்படுத்தப்படுகின்றன என்பதைக் கண்காணிப்பதில்தான் இதன் மொத்த வெற்றியும் அடங்கி இருக்கிறது.

மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து என்ற ஒரே ஒரு திட்டத்தின் மூலமாக தினந்தோறும் இலட்சக்கணக்கான மகளிரது பாராட்டுகளை இந்த அரசு பெற்று வருகிறது. தினந்தோறும் காலைச் சிற்றுண்டி வழங்குவதன் மூலமாக பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் நம்மை வாழ்த்திக் கொண்டு இருக்கின்றன. மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் கோடிக்கு மேல் பயன் அடைந்திருக்கிறார்கள். இலவச மின் இணைப்பு பெற்ற விவசாயிகள் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

மாதந்தோறும் ரூ.1,000 பெறக்கூடிய மாணவிகள் பாராட்டி வருகிறார்கள். இவை அனைத்தும் இப்போது நம் கண்ணுக்கு முன்னால் தெரியக்கூடிய மகிழ்ச்சிகள். இதேபோல் அனைத்துத் திட்டங்களாலும் பயன்பெறுபவர்கள் மகிழ்ச்சி அடைந்தால், எட்டுக் கோடி மக்களும் பாராட்டும் அரசாக இந்த அரசு உயர்ந்துவிடும், இது உங்கள் கையில்தான் இருக்கிறது.

அறிவிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களும் எப்படிச் செயல்படுத்தப்படுகின்றன? அதில் சுணக்கமோ, முடக்கமோ இருக்கிறது என்றால் எதனால்? அந்தத் திட்டத்தை முழுமையாக முடிக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைத் துறையினுடைய செயலாளர்கள் விசாரித்து முடிவெடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு திட்டத்துக்கு எங்காவது ஒரு இடத்தில் சிறு தடங்கல் இருக்கலாம். அந்தத் தடங்கல் உங்களுக்குத்தான் தெரியும். நிதித் துறையிலோ அல்லது பிற துறைகளில் இருந்தோ ஏதாவது ஒரு உத்தரவு வர வேண்டியதாக இருக்கலாம். அதிகாரிகள் மட்டத்திலே கூட்டத்தைக் கூட்டி, கூட்டுக் கூட்டமாக அதை நடத்தி உடனடியாக அதனைச் செயல்படுத்த வைக்க வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது. உங்கள் துறைக்கான அறிவிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களையும் பரிசீலனை செய்து, அவை எந்தளவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை நீங்கள் ஆய்வு செய்திட வேண்டும்.

மதுரையில் தலைவர் கலைஞர் பெயரால் நூலகம் அமையும் என்று அறிவித்தோம். மளமளவென எழுந்து வருகிறது; திறக்கப்படக் கூடிய நிலைக்கு வந்து விட்டது. சென்னையில் மிகப்பெரிய மருத்துவமனை கிண்டியில் அமையும் என்று சொன்னோம், அதுவும் வேக வேகமாகக் கட்டப்பட்டு வருகிறது.

இப்படி ஒவ்வொரு திட்டத்தையும், அறிவிப்பையும் உங்கள் கண்ணுக்கு முன்னால் கொண்டு வந்து எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை ஆய்வு செய்யுங்கள். இருபது மாதம் கடந்துவிட்டது.

திட்டங்களைச் செயல்படுத்துதல், நிதி ஒதுக்கீடு ஆகியவற்றில் தடைகள் ஏற்படலாம். எனவே, முன்கூட்டியே 2023ஆம் ஆண்டுக்குள் அனைத்துத் திட்டங்களும் செயல்பாட்டுக்கு வந்துவிட்டன என்ற நிலையை எட்டியாக வேண்டும். அதற்கானப் பணிகளை இன்றே நீங்கள் தொடங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எந்த அறிவிப்பாக இருந்தாலும் அதனை ஆய்வு செய்து கொண்டே இருந்தால் அது வெற்றி பெற்றுவிடும் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். எனவே, சேர்ந்து செயல்படுவோம் என்று தெரிவித்து, இந்த அளவில் எனது முன்னுரையை நான் நிறைவு செய்கிறேன்.

அதன் தொடர்ச்சியாக, 13.02.2023 அன்று தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10ஆவது தளத்திலுள்ள கூட்ட அரங்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் முத்தானத் திட்டங்கள் தொடர்பான இரண்டாவது ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இன்றைய ஆய்வுக் கூட்டத்தில், எரிசக்தி, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள், போக்குவரத்து, சிறப்பு முயற்சிகள், பொதுப்பணி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள், நீர்வளம் மற்றும் மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு ஆகிய 14 துறைகளைச் சார்ந்த நடைமுறையில் உள்ள 68 திட்டங்களின் தற்போதைய நிலை குறித்தும், 6 எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், துறைச் செயலாளர்கள் தங்களது துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் குறித்து விளக்கினர்.

ஆய்வுக் கூட்டத்தின் இறுதியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றியவதாவது:

அன்பார்ந்த தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களே,

முத்திரைத் திட்டங்கள் தொடர்பான இரண்டாவது ஆய்வுக் கூட்டத்தினைத் தற்போது முடித்துள்ளோம்.

ஒவ்வொரு செயலரும், தங்களது துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களின் பணி முன்னேற்ற நிலை குறித்து விளக்கமாகத் தெரிவித்திருக்கிறீர்கள்.

பணிகள் முடிவுறும் காலம் குறித்தும் குறிப்பான உறுதிமொழிகளை அளித்திருக்கிறீர்கள். அவற்றையெல்லாம் நிச்சயம் நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது.

இந்தத் திட்டங்கள் குறித்து, முதலமைச்சர் நிலையில் ஏன் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது என்றால், அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

முதலாவது, இவை அரசின் முன்னுரிமைத் திட்டங்கள் மட்டுமல்ல; தமிழ்நாட்டின்

பெருமையை மேலும் உயர்த்திடும் திட்டங்களாகும். இவற்றில் தாமதம் ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும், தீவிரமாகக் கண்காணிக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஆய்வுக் கூட்டத்தை நாம் நடத்திக் கொண்டு இருக்கிறோம்.

இரண்டாவதாக, முக்கியத் துறைகளைச் சார்ந்த செயலாளர்களாகிய நீங்கள் அனைவரும், அரசின் பெருந்திட்டங்கள் குறித்து அறிந்திருக்க வேண்டும். ஒரு திட்டத்தின் செயலாக்கத்திற்கு, மற்றொரு துறை தேவையான அனைத்து அனுமதிகளையும் வழங்கி, தேவையற்ற கேள்விகளைத் தவிர்த்து, முன்னேறிச் செல்ல பாதை வகுக்க வேண்டும். அதற்கு உங்களின் முழு ஒருங்கிணைந்த பங்களிப்பு தேவை. அதற்காகவும்தான் இந்த ஆய்வுக் கூட்டம்.

அரசு நிருவாகம் என்பது, நாம் அனைவரும் சேர்ந்திழுக்கும் தேராகும்; அதை விரைவாகச் செய்தால், நிருவாகம் நேராகும். தேர் நிலையிலேயே இருப்பதற்காக செய்யப்பட்டதல்ல – திட்டங்கள், காகிதத்தில் இருப்பதற்காக வரையப்பட்டதல்ல.

ஆகவே, 'செயல் – செயல் – செயல்' – என செயல்வீரர்களாக நீங்கள் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சார்-நிலை அலுவலர்களது பணிகளை நீங்கள் தொடர்ந்து ஆய்வு செய்யுங்கள்.

தொடர்ச்சியான ஆய்வுகளே, தொய்வில்லாத நிருவாகத்தை உருவாக்கும்.

சாதாரண நன்மை அளிக்கும் திட்டங்களைக்கூட முழுமையாக, குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்படுத்தும்போது அது முழு நன்மையை ஏற்படுத்திவிடும்.

பெரிய நன்மை அளிக்கும் திட்டங்களை அரைகுறையாகச் செயல்படுத்தும்போது சிறு நன்மைகூட விளையாமல் போய்விடுவதும் உண்டு.

இதற்கு ஒரேயொரு உதாரணம் - கடந்த காலத்தில் புறக்கணிக்கப்பட்ட உழவர் சந்தைகள். இவை அனைத்துமே நிருவாகத்தின் கையில் – அதாவது, உங்கள் கையில்தான் இருக்கிறது.

அதனால்தான் பொதுவாக, திட்டங்களை அதிகாரிகளின் குழந்தைகள் என்று சொல்வார்கள். அதிகாரிகள் கவனித்துப் பேணிக் காத்தால், அவை வளரும் – அதிகாரிகள் கவனிக்கத் தவறினால், அவை மெலியும். ஆனால், நமது மாநிலத்தில், பல துறைகளில், பல திட்டங்களில் நல்ல முன்னேற்றம் காணப்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது.

இவ்வாறான செயல்பாடுகளே, மக்களுக்கானப் பொற்காலமாக அமையும். அத்தகைய பொற்காலத்துக்கான அடித்தளத்தை உருவாக்கத் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறோம்.

இன்றைய ஆய்வின்போது, பல்வேறு சிறப்புத் திட்டங்கள் விரைந்து நிறைவேற்றப்படுவதை நான் கவனித்தேன். அந்தத் திட்டங்கள் தொடர்பான துறைச் செயலாளர்களுக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேசமயம், சில திட்டங்களில் காணப்படும் தொய்வினையும், சுணக்கத்தையும் கவனித்தேன். அவற்றைச் சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பும், கடமையும் எனக்கு இருக்கிறது.

அவை என்னென்னத் திட்டங்கள் எனத் தனிப்பட்ட முறையில் நான் குறிப்பிட விரும்பவில்லை. அதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

அவற்றை நிறைவேற்றுவதற்கு எந்தளவு கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதோ, அந்த காலவரையறைக்குள் அவற்றை முழுமையாக நிறைவேற்றிட சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

திட்டங்களை வகுக்கவும், நிறைவேற்ற வழிமுறைகளைச் சொல்லவும் துறைசாரா வல்லுநர் குழுவை நாங்கள் அமைத்திருக்கிறோம். அவர்களது ஆலோசனைகளை முழுமையாகப் பெறுங்கள் – அவற்றைச் செயல்படுத்துங்கள் என்றும் கேட்டுக்கொள்கிறேன். திட்டத்திற்கென அளிக்கப்பட்ட நிதியினை பணி முன்னேற்றத்திற்கு ஏற்ப முழுமையாகச் செலவிட்டு, பணியினைத் துரிதப்படுத்துங்கள்.

இன்றைய ஆய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டத் திட்டங்கள் தொடர்பான பணிகளில், குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை, அடுத்த ஆய்வுக் கூட்டத்தின்போது நிச்சயம் காண்பேன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

இன்னும் 2 மாதங்கள் கழித்து, இதேபோன்ற ஆய்வுக் கூட்டத்தில் உங்களையெல்லாம் சந்திக்கும் வாய்ப்பைப் பெறுவேன் என்று தெரிவித்து, கலந்து கொண்டு உறுதி தந்திருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

அதிஉயர் தூய்மையான திரவ மருத்துவ ஆக்ஸிஜன் உற்பத்தி ஆலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 18.02.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 18.02.2023 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் வேலூர் மாவட்டத்தில் 4.98 ஏக்கர் நிலப்பரப்பளவில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு ரூ.30 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, சிப்காட் ஓசூர் தொழிற்பூங்காவில் ரூ.150 கோடி முதலீட்டில் நிறுவப்பட்டுள்ள ஐநாக்ஸ் ஏர் ப்ராடக்ட்ஸ் நிறுவனத்தின் அதிஉயர் தூய்மையான திரவ மருத்துவ ஆக்ஸிஜன் உற்பத்தி ஆலை மற்றும் சென்னையில் ரூ.110 கோடி முதலீட்டில் நிறுவப்பட்டுள்ள GX குழுமத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார். மேலும், தமிழ்நாடு அரசிற்கும் ஓலா எலக்ட்ரிக் மொபிலிட்டி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்குமிடையே ரூ.7,614 கோடி முதலீட்டில் 3,111 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடும் வகையில் நான்கு சக்கர மின்சார வாகனங்கள் உற்பத்தி மற்றும் 20 கிகாவாட் மின்கலன்கள் உற்பத்தித் திறன் கொண்ட ஆலைகளை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. முதலீடுகளைப் பெருமளவில் ஈர்த்து,

லட்சக்கணக்கான தமிழ்நாடு இளைஞர்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கிடும் வகையில் தமிழ்நாடு அரசு மாநில பொருளாதாரத்தை வலுவடையச் செய்து வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கான 2030-2031ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாடு ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சியடைய முதலீடுகளை ஈர்க்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

வேலூர் மாவட்டத்தில் மினி டைடல் பூங்கா

2021-2022ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாட்டிலுள்ள இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களிலும் டைடல் பூங்காக்கள் உருவாக்கப்படும் என்ற அரசின் அறிவிப்பிற்கிணங்க, முதற்கட்டமாக விழுப்புரம் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு 24.06.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அதன் தொடர்ச்சியாக, வேலூர் மாவட்டம், மேல்மொனவூர்-அப்துல்லாபுரத்தில் அமைந்துள்ள அரசு தொழிற் பயிற்சி நிலைய வளாகத்தில், 4.98 ஏக்கர் நிலப்பரப்பளவில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு ரூ.30 கோடி மதிப்பீட்டில் தரை மற்றும் நான்கு தளங்களுடன் 60,000 சதுர அடி பரப்பளவில் கட்டப்படவுள்ள மினி டைடல் பூங்காவிற்கானக் கட்டடத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இதன்மூலம், வேலூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் படித்த இளைஞர்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு அவர்களின் சொந்த மாவட்டத்திலேயே தங்கி தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் வேலைவாய்ப்பு பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுவதுடன், சமூகப் பொருளாதார வளர்ச்சியும் ஏற்படும்.

ஓலா நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஓலா எலக்ட்ரிக் மொபிலிடி பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தனது துணை நிறுவனங்களான ஓலா செல் டெக்னாலஜீஸ் (OCT) பிரைவேட் லிமிடெட் மற்றும் ஓலா எலக்ட்ரிக் டெக்னாலஜீஸ் (OET) பிரைவேட் லிமிடெட் மூலமாக முதற்கட்டமாக, மின்கல உற்பத்தி ஆலை மற்றும் மின் வாகன உற்பத்தி ஆலை நிறுவ முன்வந்துள்ளது. இத்திட்டத்தில், உறுதி செய்யப்பட்ட முதலீடு ரூ.7,614 கோடி ஆகும். இதில் ஓலா செல் டெக்னாலஜீஸ் (OCT) நிறுவனம் ரூ.5,114 கோடியும், ஓலா எலக்ட்ரிக் டெக்னாலஜீஸ் (OET) நிறுவனம் ரூ.2,500 கோடியும் முதலீடு செய்யவுள்ளது. இதன்மூலம் 3,111 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடும். இத்திட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளியில் உள்ள சிப்காட் பர்கூர் தொழிற் பூங்காவில் நிறுவப்பட உள்ளது. இதன்மூலம் 1.40 இலட்சம் நான்கு சக்கர மின்சார வாகனங்கள் உற்பத்தி மற்றும் 20 கிகாவாட் மின்கலன்கள் உற்பத்தித் திறன் கொண்ட ஆலைகளை அமைப்பதற்கு இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுக்கும் ஓலா எலக்ட்ரிக் மொபிலிட்டி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்குமிடையே இதற்கானப் புரிந்துணர்வு ஒப்பந்தம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

ஐநாக்ஸ் ஏர் ப்ராடக்ட்ஸ் (Inox Air Products)

ஐநாக்ஸ் ஏர் ப்ராடக்ட்ஸ் நிறுவனம், நாடு முழுவதும் 43 இடங்களில் மருத்துவம் மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் வாயு உற்பத்தி மேற்கொண்டு வருகின்றது. இந்நிறுவனம் முதன்முதலாக, 1986ஆம் ஆண்டு சென்னையில் உள்ள மணலியில் வாயுக்கள் பிரிப்பு ஆலை ஒன்றைத் தொடங்கியது. அதற்குப் பிறகு, சேலம், திருநெல்வேலி மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் விரிவாக்கத் திட்டங்களை மேற்கொண்டது.

இந்நிறுவனம், 4.5 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட நூற்றுக்கும் மேற்பட்ட திரவ மருத்துவ ஆக்ஸிஜன் தொட்டிகளை, அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அமைத்துள்ளது.

கொரோனா பெருந்தொற்று காலத்தில், இந்நிறுவனம் தொடர்ந்து இயங்கி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கும் திரவ ஆக்ஸிஜன் தங்குதடையின்றி வழங்கப்படுவதை உறுதி செய்தது.

தற்போது, ரூ.150 கோடி முதலீடு மற்றும் 105 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், கிருஷ்ணகிரி மாவட்டம், சிப்காட் ஓசூர் தொழிற்பூங்காவில், இந்நிறுவனம் நிறுவியுள்ள புதிய 200 TPD திறன்கொண்ட அதிஉயர் தூய்மையான திரவ மருத்துவ ஆக்ஸிஜன் உற்பத்தி ஆலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிறுவனம், சிப்காட் ஓசூர் தொழிற்பூங்காவில் 5 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு உட்பட அனைத்து அனுமதிகளும் பெற்றிட தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனம் ஒற்றைச்சாளர இணையம் மூலம் ஆதரவுச் சேவைகள் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

GX குழுமத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம்

GX குழுமம், ஃபைபர்-டு-தி-ஹோம் (Fibre-to-the-Home - FTTH) துறையில் ஐரோப்பிய சந்தைகளில் முன்னணி வகிக்கும் நிறுவனமாகும். சுமார் 20 ஆண்டுகளாக FTTH தயாரிப்புகளின் உற்பத்தி மற்றும் மேம்பாட்டில் இந்நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.

இந்நிறுவனம், கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், ரூ.110 கோடி முதலீடு மற்றும் 100 உயர்தர தொழில்நுட்பப் பொறியியல் பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில், சென்னையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் அமைத்திட, தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.

அதன்படி, குறுகிய காலத்திலேயே சென்னை, துரைப்பாக்கத்தில் ரூ.110 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ள GX குழுமத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

“கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல் - தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்” மற்றும் “குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் - தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்” புத்தகங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வெளியிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 23.02.2023 அன்று தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள, “கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல் – தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்” மற்றும் “குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் – தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்” ஆகிய தமிழ் மற்றும் ஆங்கில புத்தகங்களை வெளியிட்டார்.

கொத்தடிமைத் தொழிலாளர் முறை மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறை என்பது சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், நாட்டின் எதிர்காலத்திற்கும் மிகப்பெரிய தடைக்கல்லாகும். இதனை களைந்திட, கொத்தடிமைத் தொழிலாளர் முறையை 2030ஆம் ஆண்டிற்குள்ளும், குழந்தைத் தொழிலாளர் முறையை 2025ஆம் ஆண்டிற்குள்ளும் முற்றிலுமாக அகற்றிட தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது.

இந்த இலக்கினை அடைந்திடும் வகையில், கொத்தடிமை மற்றும் குழந்தைத் தொழிலாளர்களை அடையாளம் காணுதல், விடுவித்தல், மீட்டெடுத்தல் மற்றும் மறுவாழ்வு அளித்தல், கொத்தடிமை மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறை தொடர்பான புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுத்தல் போன்ற பல்வேறு சீரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. இதன் காரணமாக தற்போது தமிழ்நாட்டில் கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் குழந்தைத் தொழிலாளர்கள் எண்ணிக்கை பெருமளவு குறைந்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட “கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல் – தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்” புத்தகத்தில், கொத்தடிமைத் தொழிலாளர் முறையின் காரணிகள் மற்றும் சட்ட விதிகள், கொத்தடிமைத் தொழிலாளர் முறைக்கு எதிரான சட்டப்பூர்வ பாதுகாப்புகள், சட்ட அமலாக்க நடவடிக்கைகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள், பயிற்சி மற்றும் பயிலரங்கம் போன்ற விவரங்கள் இடம்பெற்றுள்ளன,

அதேபோன்று, “குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் – தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள்” புத்தகத்தில், குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள், விழிப்புணர்வு பயிற்சி மற்றும் பயிலரங்கம், தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வரும் பயன்கள், குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் தொடர்பான உயர்மட்ட கண்காணிப்பு குழுக்களின் செயல்பாடுகள் போன்றவை குறித்த விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

இப்புத்தகங்கள், கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல் மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலில், பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், தொடர்புடைய பல்வேறு துறைகளுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிறப்பான முறையில் கடமையாற்றி அரசுக்கு நற்பெயரை தேடித் தாருங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 04.02.2023 அன்று தலைமைச் செயலகத்தில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

புதிதாக மாவட்டங்களில் பொறுப்பேற்கவுள்ள ஆட்சித் தலைவர்கள் எப்படி பணியாற்ற வேண்டும் என்பதை தலைமைச் செயலாளர் அவர்கள் சுருக்கமாக எடுத்துக் கூறினார்.

ஆட்சிப் பொறுப்பேற்று இந்த குறுகிய காலத்திற்குள்ளாக நம்முடைய அரசு சிறப்பான பெயரைப் பெற்றிருக்கிறது, இதற்கு எந்தவித மறுப்பும் யாரும் சொல்ல முடியாது. அந்த பெயரைப் பெறுவதற்குக் காரணமாக இருந்தவர்கள், ஏதோ தனிப்பட்ட முதலமைச்சரோ, தனிப்பட்ட தலைமைச் செயலாளரோ, தனிப்பட்ட அரசு அதிகாரிகளோ மட்டும் அல்ல, உங்களைப் போன்ற அதிகாரிகளும், அரசு அலுவலர்களும் தான் அதற்கு முழுமையான காரணமாக இருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு தேர்தல் அறிக்கையில், ஆட்சிக்கு வந்தால் என்னென்ன செய்யப் போகிறோம் என்பது பற்றி தேர்தல் அறிக்கை வெளியிட்டிருக்கிறோம். அதேபோல, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறோம். அவைகள் எல்லாம் எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்ற வகையில் கண்காணித்து, அதை நிறைவேற்றித் தருவதற்கான முழுப் பணியிலும் நீங்கள் ஈடுபட வேண்டும் என்று நான் உங்களை எல்லாம் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது புதிதாக, இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் கள ஆய்வுப் பணியை மேற்கொண்டு, அந்தப் பணி மிகச் சிறப்பான வகையில், நான் திருப்தி அடையக்கூடிய வகையில், நாங்கள் மட்டுமல்ல அந்த செய்தியை கேள்விப்பட்ட அனைவருமே பாராட்டக்கூடிய அளவிற்கு அந்தப் பணிகள் நடந்திருக்கிறது. இது தொடரப் போகிறது. அப்படிப்பட்ட பயணத்தை மேற்கொள்கிறபோது, புதிதாக பொறுப்பேற்றிருக்கக்கூடிய நீங்கள் மாவட்டத்தில் பொறுப்பேற்றவுடன், என்னென்னப் பணி நடைபெறாமல் இருக்கிறது? என்னென்னப் பணி எந்த நிலையில் இருக்கிறது? எந்த எந்தப் பணிகள் இன்னும் தொடங்க இயலாத நிலையில் இருக்கிறது? அதற்கு என்னென்ன இடையூறுகள் இருக்கின்றன? நீதிமன்றங்களில் என்னென்ன வழக்கு இருக்கிறது? என்பதைப் பற்றியெல்லாம் நீங்கள் கலந்தாய்வு நடத்தி அதையெல்லாம் விரைவாக, அந்தப் பணிகளை நிறைவேற்றக்கூடிய காரியத்தில் ஈடுபட வேண்டும். மிக விரைவில் நீங்கள் பொறுப்பேற்கக் கூடிய மாவட்டத்திற்கு நாங்கள் ஆய்விற்கு வருகிறபோது அது உங்களால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, அது உங்களால் சரிசெய்யப்பட்டிருக்கிறது என்ற செய்தியை நீங்கள் சொல்லக்கூடிய அளவிற்கு, உங்களுடைய கடமையை நிறைவேற்றித் தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது.

இன்றைக்கு ஆட்சித் தலைவர்களாக பொறுப்பேற்கவுள்ள நீங்கள், நம்முடைய

தலைமைச் செயலாளர் சொன்னதுபோல மகாத்மா காந்தி அவர்கள் "களத்திற்கு செல்" என்று சொன்னதுபோல, அண்ணா அவர்கள் "மக்களிடத்தில் செல்" என்று அடிக்கடி சொல்வார்கள், அதைப்போல நீங்கள் மக்கள் நலப் பணிகளை செயல்படுத்தி மக்களைக் கவரக்கூடிய வகையில், ஆங்காங்கு பணியாற்றக்கூடிய அதிகாரிகளை அவர்களுக்கு உரிய பணிகளை விரைந்து முடித்திட உத்தரவிட்டு, அதற்கானப் பணிகளில் ஈடுபட வேண்டும்.

சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டக்கூடிய வகையில் உங்கள் மாவட்டங்களில் அதை பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எந்தவித அரசியல் மாச்சரியங்களுக்கு நீங்கள் இடம் கொடுக்காமல், அரசியல் பார்க்காமல், மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற அந்த உணர்வோடு மட்டுமே உங்களது பணி அமைய வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏதோ உங்களிடத்திலே பணிகளை விட்டுவிட்டு நாங்கள் அமைதியாக இருந்துவிடுவோம் என்று நீங்கள் எண்ண வேண்டாம். உங்களிடத்தில் உள்ள பணிகளில், என்னென்னப் பணிகளை முடித்திருக்கிறீர்கள் என்பதைத் தொடர்ந்து தலைமைச் செயலாளரும் ஆய்வு செய்யப்போகிறார், அதேபோல முதலமைச்சராக இருக்கக்கூடிய நானும் ஆய்வு செய்யப்போகிறேன். விரைவில், மார்ச் மாதம் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்போகிறோம். அப்படி தாக்கல் செய்யப்படுகிற நேரத்தில், என்னென்னப் புதிய திட்டங்களை நாம் அறிவிக்க இருக்கிறோம். ஏற்கெனவே அறிவித்திருக்கக்கூடிய திட்டங்கள் எந்த நிலையில் இருக்கிறது என்பதையும் அந்த நிதிநிலை அறிக்கையில் பேசப்படக்கூடிய ஒரு சூழ்நிலை வரும். அதையும் மனதில் வைத்துக்கொண்டு அதற்கும் நீங்கள் தகுந்த பதிலை நம்முடைய அரசுக்குத் தொடர்ந்து வழங்கிட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, புதிதாக பொறுப்பேற்கவுள்ள நீங்கள், சிறப்பான முறையில் கடமையாற்றி இந்த அரசுக்கு ஒரு நற்பெயரை தேடித்தாருங்கள் என்று அன்போடு கேட்டு, உங்கள் அத்தனை பேரையும் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

ஏப்ரல் : 29 – பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் பிறந்தநாள்

தூய்மை சேரடா தம்பி

தூய்மை சேரடா தம்பி – என்
சொல்லை நீ பெரிதும் நம்பித்
தூய்மை சேரடா தம்பி!

வாய்மையாலும் ஒழுக்கத்தினாலும் அகத்
தூய்மை உண்டாகும் மேலும் மேலும்
தூய்மை சேரடா தம்பி!

உடையினில் தூய்மை – உண்ணும்
உணவினில் தூய்மை – வாழ்வின்
நடையினில் தூய்மை – உன்றன்
நல்லுடற் தூய்மை – சேர்ப்பின்
தடையில்லை வாழ்நாள் ஒவ்வொன்றும் இன்பம்
தரும்நாள் ஆகும் – நீ– என்றும்
தூய்மை சேரடா தம்பி!

துகளிலா நெஞ்சில்–சாதி
துளிர்ப்பதும் இல்லை:–சமயப்
புகைச்சலும் இல்லை:–மற்றும்
புன்செயல் இல்லை!–தம்பி!
அகத்திலே அன்பின் வெள்ளம் மூளும்: தீய
அச்சம் போகும்!– நீ– எந்நாளும்
தூய்மை சேரடா தம்பி!

– பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்

அகில இந்திய காவல் திறனாய்வுப் போட்டியில் சாதனை படைத்த தமிழ்நாடு காவல்துறை வீரர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர் - 23.02.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை, 23.02.2023 அன்று தலைமைச் செயலகத்தில், மத்தியப் பிரதேச மாநிலம், போபாலில் நடைபெற்ற 66ஆவது அகில இந்திய காவல் திறனாய்வுப் போட்டியில் வெற்றி பெற்று சாதனைப் படைத்த தமிழ்நாடு காவல்துறை வீரர்கள் சந்தித்து, பதக்கங்கள் மற்றும் கேடயங்களைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

66ஆவது அகில இந்திய காவல் திறனாய்வு போட்டி, மத்தியப் பிரதேச மாநிலம், போபாலில், கடந்த 13.02.2023 முதல் 17.02.2023 வரை நடைபெற்றது. இதில் அறிவியல் சார்ந்த புலன் விசாரணை திறன் போட்டி, கணினித் திறன் போட்டி, வெடிகுண்டு தடுப்புத் திறன் போட்டி (நாசவேலை), மோப்ப நாய் திறன் போட்டி, வீடியோ படம் எடுத்தல் திறன் போட்டி மற்றும் தொழில் ரீதியாகப் புகைப்படம் எடுக்கும் திறன் போட்டி ஆகிய போட்டிகளில் தமிழ்நாடு காவல்துறையிலிருந்து 70 பேர் கலந்து கொண்டனர்.

66ஆவது அகில இந்திய காவல் திறனாய்வுப் போட்டியில் தமிழ்நாடு காவல்துறையினர் 8 தங்கப் பதக்கங்களும், 1 வெள்ளிப் பதக்கமும் மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களும், என மொத்தம் 11 பதக்கங்களை வென்று சொந்த மாநிலத்திலேயே மத்தியப் பிரதேச அணியை தோற்கடித்து முதல் இடத்தைப் பிடித்து சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது. மேலும், தடய அறிவியல் புலனாய்வுப் பிரிவு, குற்றச் சம்பவ இடங்களில் புகைப்படம் எடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்தல், வெடிகுண்டு சோதனை ஆகிய பிரிவுகளில் மூன்று கேடயங்களையும் வென்றுள்ளனர்.

பயிற்றுநர் மற்றும் குழு மேலாளருமான மதுரை மாநகரக் காவல் துணை ஆணையர் திரு.எஸ்.ஆறுமுகசாமி மற்றும் உதவி பயிற்றுநரான தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தின் காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.எம்.பாபு ஆகியோர் தலைமையில் அனைத்துப் போட்டிகளிலும் அதிக மதிப்பெண் பெற்று இந்தியாவின் சிறந்த அணியாக தேர்ந்தெடுக்கப்பட்டு ஒட்டுமொத்த “சார்மினார் சாம்பியன்ஷிப்” கோப்பையையும் தமிழ்நாடு காவல்துறையினர் வென்றுள்ளனர். ◆

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் கேலோ இந்தியா போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்த வாய்ப்பளிக்க வேண்டுமென மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் கோரிக்கை

மாண்புமிகு பஞ்சாப் ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்களின் இல்லத் திருமண விழாவில் 28.02.2023 அன்று கலந்து கொள்ள வந்திருந்தேன்.

காலை மாண்புமிகு ஒன்றிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கிரிராஜ் சிங் அவர்களை 28.02.2023 அன்று சந்தித்து, தமிழ்நாட்டில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குத் தேவையான கோரிக்கைகளை அதிகாரிகளுடன் முன் வைத்துள்ளோம். கோரிக்கைகளை செய்து தருவார் என நம்புகிறேன்.

மாண்புமிகு பிரதமர் அவர்களை சந்திக்க நேரம் கேட்டிருந்தேன். கடந்த முறை மாண்புமிகு பிரதமர் அவர்கள் சென்னை வந்த போது, புதுதில்லி வரும் போது என்னை வந்து சந்திக்க வேண்டும் என தெரிவித்திருந்தார். அதன் தொடர்ச்சியாக 28.02.2023 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை சந்தித்து அவரது தாயார் மறைவிற்கு இரங்கல் தெரிவித்தேன். எந்த விதமான அரசியலும் பேசவில்லை.

மாண்புமிகு பிரதமர் அவர்கள், தமிழ்நாட்டில் விளையாட்டு மேம்பாட்டுத்துறை தொடர்பான விவரங்களைக் கேட்டார். ரூ.25 கோடியில் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை போட்டிகள் நடைபெற்று வருவதைத் தெரிவித்தேன். அடுத்த முறை கேலோ இந்தியா போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்த வாய்ப்பளிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டேன்.

நீட் விவகாரம் தொடர்பாக சொன்னேன். மாண்புமிகு பிரதமர் அவர்களும் அதற்கு சில விளக்கங்கள் தெரிவித்தார். தமிழ்நாடு மக்களின் மனநிலையை மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் தெரிவித்துள்ளேன். இது எனது கடமை, நீட் தொடர்பான தமிழ் மொழி, தமிழ்நாட்டின் சட்டப் போராட்டம் தொடரும், எனக் கூறினேன்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களை, 28.02.2023 அன்று புதுதில்லியில் உள்ள, லோக் கல்யாண் மார்க் இல்லத்தில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். அதன்பின்பு, புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் செய்தியாளர்கள் மத்தியில் ஆற்றிய உரை.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்களின் பயன்கள் மற்றும் பயன்பெறும் முறைகளை திறந்தவெளி விளம்பரப் பலகைகளில் இடம்பெறச் செய்ய வேண்டும்

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய 6 மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் இம்மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் 28.02.2023 அன்று சென்னை, மாநில செய்தி நிலையக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் மூலம் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை, புதிதாக கட்டப்பட்டு வரும் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், நினைவகங்களின் புனரமைப்புப் பணிகள், மாவட்டங்களில் தமிழரசு சந்தா குறித்து நிர்ணயிக்கப்பட்ட இலக்கினைப் பூர்த்தி செய்தல், "ஓயா உழைப்பின் ஓராண்டு" சாதனைகள், திட்டங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்திய விவரம், திறந்தவெளி விளம்பரம் மேற்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் கள விளம்பரப் பணிகளுக்கான தரவரிசைப் பட்டியல், சமூக ஊடகங்களைக் கையாளுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து மண்டல வாரியாக மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. **மு.பெ.சாமிநாதன்** அவர்கள் ஆற்றிய உரை - 28.02.2023

இக்கூட்டத்தில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தமது தலைமையுரையில்,

“மாவட்டங்களில் நிலுவையில் உள்ள பணிகளை தொய்வின்றி விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், சிலைகள் மற்றும் அரங்கங்கள் அமைப்பது தொடர்பாக ஏதேனும் இடர்பாடுகள் இருப்பின் மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து விரைவாகப் பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மாவட்டங்களில் உள்ள நினைவகங்களில் நடைபெறும் புதிய பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவரை அழைத்துச் சென்று ஆய்வு மேற்கொள்ள வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

மேலும், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களால் அரசின் திட்டங்கள் குறித்து மாதந்தோறும் மேற்கொள்ளப்படும் செய்தியாளர் பயணம் மிக முக்கியமானப் பணியாகும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மக்கள் தொடர்பு முகாம் போன்ற நிகழ்ச்சிகளுக்குச் சென்று திரும்பும்போது திட்டப்பணிகள் நடைபெறும் இடங்களில் செய்தியாளர் பயண நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து செய்தியாளர்களை அழைத்துச் சென்று முழு ஈடுபாட்டுடன் செய்து முடிக்க வேண்டும். தமிழரசு சந்தா சேர்ப்பதற்கான இலக்கினை விரைந்து முடிக்க வேண்டும் என்றும், தமிழரசு சந்தா சேர்ப்பது தொடர்பான விளக்கங்களை தங்களது அலுவலக விளம்பரப் பலகைகளில் விளம்பரமாகவும், பள்ளி, கல்லூரிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், நூலகங்கள், அரிமா சங்கங்கள் போன்றவற்றை அணுகியும் இலக்கினை முழுமையாக எட்ட வேண்டும் எனவும், இதனால் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் எளிதில் மக்களிடம் சென்றடைந்து பொதுமக்கள் பயனடைய வாய்ப்பாக இருக்கும் எனவும் அறிவுறுத்தினார்.

மாவட்டங்களில் உள்ள சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர் தியாகிகள், தமிழறிஞர்கள் ஆகியோர்களின் புகைப்படங்களுடன் கூடிய சிறு குறிப்புகள் அனைத்து மாவட்ட ஆட்சியரகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதைப்போன்று மாவட்டங்களில் உள்ள சுதந்திரப் போராட்ட தியாகிகளின் பிறப்பு, இறப்பு, ஈடுபட்ட போராட்டங்கள், சிறையில் இருந்த காலம், தியாகங்கள், வாரிசுதாரர்கள் குறித்த சிறுகுறிப்புடன் அவர்களது புகைப்படத்தையும் இணைத்து காலப்பேழை (Album) தயாரித்து பொதுமக்கள் அதிகம் வந்து செல்லும் இடங்களான மாவட்ட ஆட்சியரகம், நூலகங்கள், நினைவகங்கள் போன்ற இடங்களில் வைத்தால் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வையிட்டு அறிந்து கொள்வார்கள். இதன்மூலம் அத்தியாகிகளின் உயரிய தியாகங்களை வெளிக்கொணரவும், எதிர்கால சந்ததியினர் அவர்களைப் பற்றி அறிந்து கொள்ள ஒரு நல்ல வாய்ப்பாக இருப்பதுடன், அவர்களின் குடும்பத்தாரும் மகிழ்ச்சி அடைவார்கள் எனவும் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசின் முக்கியத் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் திறந்தவெளி விளம்பரங்கள் மேற்கொள்ளப்படும்பொழுது போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாமலும், பொதுமக்கள் பார்வையில்படும் வகையிலும், அனுமதி பெற்ற இடங்களிலும் விளம்பரப் பலகைகள் அமைத்திட வேண்டும், “தலைநிமிர்ந்த தமிழ்நாடு! தனித்துவமான பொன்னாடு!” என்ற தலைப்பையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புகைப்படத்தையும், திட்டத்தினால் ஏற்படும் பயன்களையும், பயன்பெறும் முறைகளையும் திறந்தவெளி விளம்பரப் பலகைகளில் இடம் பெறச் செய்ய வேண்டும், இரண்டாண்டுகள் முடிந்து மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இச்சூழ்நிலையில் உங்கள் மாவட்டங்களில் நம் துறை சார்பாக நடைபெறும் அனைத்துப் பணிகளையும் விரைந்து முடிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மரு.இரா.செல்வராஜ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார். முன்னதாக, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. த.மோகன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார். மேலும், திரு. சிவ.சு. சரவணன், கூடுதல் இயக்குநர் (செய்தி), திரு. மு.பா.அன்புச்சோழன், கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு), இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பசுமை தமிழ்நாடு இயக்கத்தால் நம் எதிர்கால சந்ததியினருக்கான ஆக்ஸிஜன் தேவையில் தன்னிறைவு பெறும் முதல் மாநிலம் தமிழ்நாடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தமிழ்நாட்டின் வனப்பரப்பை 33 சதவீதமாக உயர்த்திட, பசுமை தமிழ்நாடு இயக்கம் திட்டத்தை 24.09.2022 அன்று தொடங்கி வைத்து சிறப்பித்தார்.

இந்த இயக்கத்தின் திட்டப்படி 10 ஆண்டுகளுக்குள் 260 கோடி மரக்கன்றுகளை நடவு செய்து தமிழ்நாட்டின் வனப்பரப்பை 23.7 சதவீதத்திலிருந்து 33 சதவீதமாக உயர்த்திடவும், இனி வரும் ஒவ்வொரு ஆண்டும் நடவு செய்யப்பட வேண்டிய மரக்கன்றுகளை வளர்க்கவும், நடவு செய்திடவும், முழுமையாக வளர்ந்திட குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும், சரியாக திட்டமிடப்பட வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆலோசனைகள் வழங்கியுள்ளார்.

அதன் தொடர்ச்சியாக வேளாண் பெருமக்கள், தொழில் நிறுவனங்கள், மக்கள் நலச் சங்கங்கள், இயற்கை ஆர்வலர்கள் மற்றும் தனி நபர்கள் மரக்கன்றுகளை எளிதாகப் பெறும் பொருட்டு, பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின் இணையதள முகவரியில் (www.greentnmission.com) பயன்பாட்டாளர்கள் தங்களது சுய விபரங்களை பதிவு செய்து, தங்களுக்குத் தேவையான மரக்கன்றுகளை பெற்றுக் கொள்ளலாம் என வனத்துறையின் பசுமைத் தமிழ்நாடு இயக்கம் சார்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

மாநிலத்தின் மொத்த புவியியல் பரப்பளவான 1,30,060 ச.கி.மீ.இல் தற்போது 30,843 ச.கி.மீ. பரப்பளவு வனம் மற்றும் பசுமைப் போர்வையின்கீழ் உள்ளது, பசுமைத் தமிழ்நாடு இயக்கம் திட்டத்தின் குறிக்கோளான 33 சதவீதத்தினை எய்திட 12,076 ச.கி.மீ. பரப்பளவினை வனம் மற்றும் பசுமைப் போர்வைக்குள் கொண்டு வர வேண்டியுள்ளது .

பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின்கீழ் பத்தாண்டுகளில் 260 கோடி மரக்கன்றுகள் நடுவதற்கான இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அவற்றில் 90 கோடி மரக்கன்றுகள் சுமார் 11,729 ச.கி.மீ. பரப்பளவில் வனத்திற்குள்ளும், 175 கோடி மரக்கன்றுகள், வனத்திற்கு வெளியே விவசாய நிலங்கள் உள்ளிட்ட பகுதிகளில் நடப்படும்.

நாற்றங்கால் பண்ணை

மேலும், இயற்கை மறுதளிர்வு (ANR model) மூலம் வனம் மற்றும் பசுமைப் போர்வையினை அதிகரிக்கும் முயற்சியில், பணியாளர்களுடன், எந்திரங்களைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்தும் ஆராய்ந்து திட்டம் செயல்படுத்தப்படும்.

தனிநபர் பங்களிப்பு, சமுதாய பங்கேற்பு, மாவட்ட பசுமைக் குழு மூலம் என பலவிதங்களில் தங்களது பங்களிப்பினை அளிக்கவோ அல்லது மரக்கன்றுகள் பெற்று அவர்களது நிலங்களில் நடுவதன் மூலம் பயன்பெறவோ இயலும், மாவட்ட ஆட்சியரிடம் இத்தகைய செயல்பாடுகள் மற்றும் சேவைகளைப் பொதுமக்களோ, அமைப்புகளோ, இயற்கை ஆர்வலர்களோ நேரடியாகப் பெற காலதாமதமாகும் என்கிற காரணத்தினால், ஒவ்வொரு மாவட்ட பசுமைக் குழுவிற்கும் இரண்டு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திட்டம் தொடங்கப்பட்ட முதலாம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதுமுள்ள 360 நாற்றங்கால்களில் வளர்க்கப்பட்ட 2.80 கோடி மரக்கன்றுகளை மாநிலம் முழுவதும் அரசுத்துறைகள், தன்னார்வலர்கள், வேளாண் பெருமக்கள் பெற்றுச் சென்று டிசம்பர் 2022 மாத இறுதியிலேயே 98.80 சதவீதத்திற்கு அதிகமான மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் மார்ச் 2023ஆம் மாதத்திற்குள் 3.60 கோடி மரக்கன்றுகள் நடவு செய்யப்படவுள்ளது.

2021-2023 ஆகிய ஆண்டுகளில், பசுமைத் தமிழ்நாடு இயக்கத் திட்டத்தின்கீழ், பல்வேறு துறைகளால் 2.50 கோடி மரக்கன்றுகள் நடவு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது. அதன்படி, 2021-2022ஆம் ஆண்டு மற்றும் 2022-2023ஆம் ஆண்டில் 2.80 கோடி மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. இதில் திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் 14.18 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. மேலும், பசுமைத் தமிழகம் இணையதளம் வாயிலாக 1,540 நபர்கள் 14.86 இலட்சம் விதைகளைப் பெற முன் பதிவு செய்துள்ளனர்.

பசுமைத் தமிழ்நாடு இயக்கச் திட்ட செயலாக்கத்தில் வெளிப்படைத் தன்மையும், பணிகள் திறம்பட மேற்கொள்ளப்படுவதனை அறிவதற்கும் தற்போதுள்ள கண்காணிப்பு வசதிகளைத் தவிர, தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் அமைப்பான NABCONS மூலம் மூன்றாம் நபர் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

2021ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் உள்ள வனங்களின் வகைப்பாடுகள், முறையே, மிக அடர்ந்த வனங்கள், மிதமான அடர்ந்த வனங்கள் மற்றும் திறந்த வனங்கள் என அவற்றின் பரப்பளவு கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது, 8,580 ச.கி.மீ பரப்பளவில் திறந்த வனங்கள் உள்ளன, வனங்களுக்கு வெளியே உள்ள பகுதிகளைப்

பசுமைத் தமிழ்நாடு இயக்கம் தொடங்கப்பட்ட முதலாமாண்டில் 2.50 கோடி மரக்கன்றுகளும், இரண்டாமாண்டில் 7.50 கோடி மரக்கன்றுகளும், மூன்றாமாண்டில் 15 கோடி மரக்கன்றுகளும், நான்காமாண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் 25 கோடி மரக்கன்றுகளும் நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

தரங்குன்றிய பகுதிகளில் மக்கள் ஆதரவுடன் கூடிய மறுதளிர்வு முறையில் பணிகள் மேற்கொள்வதற்கு உண்டான தகவல் தரவு, பணிகள் மேற்கொள்ளப்படும்.

திறந்த வனங்கள்

பொறுத்தமட்டில், 6,161 ச.கி.மீ பரப்பளவில் திறந்தவகை பகுதிகள் உள்ளன.

தமிழக வனப்பகுதிகளில் உள்ள கார்பன் இருப்பு குறித்து நவீனமுறையில் அறிவியல்ரீதியிலாக மதிப்பீடு செய்வதற்கும், கார்பன் இருப்பினை பணமாக்குதலில் (monetisation) தமிழ்நாடு அரசு, இந்தியாவில் இயங்கும் தனியார் நிறுவனங்களுடன் முறையே 60:40 சதவீதத்தில் பகிர்ந்து கொள்ளப்படவுள்ளது. தற்போது அவற்றின் மதிப்பு டன் ஒன்றுக்கு 7 அமெரிக்க டாலர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது, கார்பன் இருப்பினை பணமாக்குதல் (monetisation) மூலம் பொருளாதார வளர்ச்சிக்கும் உத்தரவாதம் உள்ளது.

பசுமைத் தமிழ்நாடு இயக்கம் திட்டத்தின் மூலம் மரக்கன்றுகள் வளர்ப்பு மற்றும் நடவுப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காலாண்டிற்கு ஒரு முறையும், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களும், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களும் ஒவ்வொரு மாதமும் தொடர் ஆய்வு மேற்கொண்டு பசுமைப் போர்வை விரிவாக்கத் திட்டப் பணிகளை கண்காணித்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டின் வனப்பரப்பை அதிகரித்திட ஏதுவாக கடந்த காலங்களில் கோடியக்கரைக்கு மட்டுமே ராம்சார் தளமாக சர்வதேச அமைப்பு அங்கீகாரம் வழங்கி இருந்தது. தற்பொழுது, வனத்துறையின் சிறப்பான பணிகள் மூலம் ஈரநிலமேம்பாட்டுத்திட்டத்தில் பாதுகாக்கப்பட்ட 13 தளங்கள் சர்வதேச அமைப்பின் ராம்சார் அங்கீகாரம் பெறப்பட்டதன் மூலம் இந்தியாவில் உள்ள 75 ராம்சார் தளங்களில் 14 தமிழ்நாட்டில் அமைந்து முதலிடம் பிடித்துள்ளது பெருமைக்குறியதாகும். வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா சிறந்த பராமரிப்பிற்காக நடப்பாண்டில் இந்தியாவில் முதலிடத்தை பெற்றுள்ளது.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சராக மாண்புமிகு திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவியேற்ற இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக வனங்களைப் பாதுகாக்கவும், வன விலங்குகள் மற்றும் பறவைகள் பாதுகாப்பிற்காக அழிந்து வரும் பறவைகள் மற்றும் வன விலங்குகளைப் பாதுகாக்க தமிழ்நாடு அரசு உறுதிபூண்டுள்ளது.

வன உயிரினங்கள் பாதுகாப்பில், குறிப்பாக அழிந்து வரும் வன உயிரினங்களை பாதுகாப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு அரசு பல முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றுள் சிறப்புக்குரியவை;

- பாக். வளைகுடாவில் இந்தியாவின் முதல் கடல் பசு பாதுகாப்பகம்
- விழுப்புரம் மாவட்டத்தில் கழுவேலி பறவைகள் சரணாலயம்
- அகத்தியர் மலை யானைகள் பாதுகாப்பகம்
- திருப்பூர் நஞ்சராயன் குளம் பறவைகள் சரணாலயம்
- தென் காவிரி வனவிலங்கு சரணாலயம்
- ரூ.25.14 கோடி மதிப்பில் நீலகிரி வரையாடு இனம் பாதுகாப்புத்திட்டம்
- ரூ.300 கோடி மதிப்பில் செங்கல்பட்டு மாவட்டம், கடம்பூரில் நவீன தொழில்நுட்பத்தில் தாவரவியல் பூங்கா

மிகக் குறுகிய காலத்தில் எடுக்கப்பட்ட இந்த புதுமையான முயற்சிகள் வன உயிரினப் பாதுகாப்பு நடவடிக்கைகளில், தமிழ்நாட்டுக்கு ஒரு உன்னத இடத்தை அளித்துள்ளது.

கரூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில், 11,806 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள வனப்பகுதிகள், தேவாங்குகளின் முக்கிய வாழ்விடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த இனத்தை உடனடியாகப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த தமிழ்நாடு அரசு, கரூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 11,806.56 ஹெக்டேர் (ஏழு பிளாக்குகளில்) பரப்பளவில் இந்தியாவின் முதல் தேவாங்கு சரணாலயமாக "கடவூர் தேவாங்கு சரணாலயம்" அமைத்து தமிழ்நாடு அரசு அறிவிப்பு செய்துள்ளது.

இந்தியாவில் பாறு கழுகுகளின் எண்ணிக்கையானது பல காரணங்களால் குறைந்து வந்தாலும், முக்கியமாக கால்நடை சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் சில கால்நடை மருந்துகளின் பாதகமான தாக்கத்தினாலும் குறைந்து வருகிறது. தமிழ்நாடு மாநிலத்தில் பாறு கழுகுப் பாதுகாப்புக்கு ஊக்கமளிக்கும் வகையில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை 10 பேர் கொண்ட மாநில அளவிலான பாறு கழுகுப் பாதுகாப்புக் குழுவை அமைத்து அரசாணை வெளியிட்டுள்ளது.

பசுமைத் தமிழ்நாடு இயக்கத்துடன் இயற்கை ஆர்வலர்கள் வழிநடத்தும் 150 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இணைந்துள்ளன. இயற்கை ஆர்வலர்களின் தொண்டு நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் பசுமைச் சூழல் அறக்கட்டளை செங்கல்பட்டு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இதுவரை ஒரு இலட்சம் பனை விதைகளை விதைத்துள்ளார்கள். 150 ஏக்கர் பரப்பளவில் 1.50 இலட்சம் மரக்கன்றுகளை நட்டு வைத்து குறுங்காடுகள் வளர்ப்புத் திட்டத்தை விவசாயிகளிடையே ஊக்கப்படுத்தியுள்ளார்கள். பசுமைச் சூழல் அறக்கட்டளை நீர் மேலாண்மைத் திட்டத்தில் உறுப்பினராக செயல்படுவதன் மூலம் தங்கள் பகுதியில் உள்ள நான்கு நீர் நிலைகளை மீட்டு நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தும் பணியையும் முன்னெடுப்பு செய்து வருகின்றனர்.

இதுபோல் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுவரும் வனம் மற்றும் வன விலங்குகள் பாதுகாப்பு, மேம்பாட்டுத் திட்டங்களினால் எதிர்கால சந்ததியினர்களுக்குத் தேவையான ஆக்ஸிஜன் தேவையை தன்னிறைவு பெறுவதில் 2031-2032ஆம் ஆண்டுகளுக்குள் 33 சதவீத வனப்பரப்பை உயர்த்தி தமிழ்நாடு முதலிடம் பெறும். இதற்கு பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தில் தன்னார்வலராக இணைந்துள்ள இலட்சத்திற்கும் மேற்பட்ட தன்னார்வலர்களும், தொழில் முனைவோர்களும் தங்களது சுற்றுப்புறத்திற்குத் தேவையான ஆக்ஸிஜன் பெற்றிட மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பதில் முன்வந்து ஈடுபட்டுள்ளதுபோல் நம் மாநில மக்கள் ஒவ்வொருவரும் தங்களின் எதிர்கால சந்ததியினருக்கான ஆக்ஸிஜன் உற்பத்தியில் தங்களின் பங்கேற்பை உணர்ந்துள்ளனர்.

தொகுப்பு:
இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
முதன்மைத் தலைமை
வனப்பாதுகாவலர் அலுவலகம்,
சென்னை-15.

திருப்பூர் நஞ்சராயன் குளம் பறவைகள் சரணாலயம்

கட்டுரை





கலைஞரின் எழுத்துக்களில் இலக்கியம்

– இரா. குமார்

இலக்கியத்தின் எல்லா வடிவங்களையும் வார்த்தெடுத்துத் தமிழ்ச் சமுதாயத்துக்கு அளித்தவர் கலைஞர். இதழியல், சிறுகதை, புதினம், கவிதை, தன்வரலாறு, நாடகம், திரைப்படம், சொற்பொழிவு என எல்லா வடிவங்களிலும் எல்லா தளங்களிலும் விரிந்து கிடக்கிறது, யாவரினும் விஞ்சி நிற்கிறது கலைஞரின் தமிழ். அதனால்தான் அவர் முத்தமிழறிஞர்.

அழகு தமிழ், அடுக்குமொழிக்குச் சொந்தக்காரர் கலைஞர். "ராஜாவைப் பார்க்க மதுரைக்குச் சென்றேன். ராஜா இல்லை. ராஜாவின் தம்பிதான் இருந்தார்" என்றுதான் நாம் சொல்வோம். இதையே கலைஞர் சொன்னால், அழகு தமிழ் நம் நெஞ்சை அள்ளும்; ஆர்ப்பரித்து நம் சிந்தையை அவர் பால் இழுத்துச் செல்லும். ஆம்; கலைஞர் எப்படிச் சொல்வார் தெரியுமா?

"மன்னரைக் காண மதுரைக்குச்
சென்றேன்.
மன்னவர் இல்லை. சின்னவர் இருந்தார்"

என்று அழகு தமிழ் அடுக்குமொழியில் சொல்வார். கேட்டாரைப் பிணிக்கும் தகையவாய் இருக்கும் கலைஞரின் எழுத்தும் பேச்சும்.

மொழியின் அழகைக் காட்டி, கருத்தை நோக்கி மக்களை ஈர்த்தவர் அண்ணா. அவருடைய எழுத்து நடையும் பேச்சு நடையும் மக்களைக் கவர்ந்து இழுத்தது. அதுவே, திராவிடர் இயக்க இலக்கிய அடையாளமாகவும் ஆனது. அதற்கு, கலைஞரின் எழுத்துநடையும் பேச்சுநடையும் செழுமை சேர்த்தன.

கலைஞரின் சிந்தனையும் திராவிட இயக்கத்தின் கொள்கைகளும் பாமர மக்களையும் சென்றடைந்தது என்றால், அதற்கு முக்கியமான காரணம் அவருடைய எழுத்து நடையும் பேச்சு நடையும்தான். தன் அழகு தமிழ், அடுக்குமொழியால் மக்களை தன்பால் ஈர்த்தார் கலைஞர்.

பகுத்தறிவைப் பரப்புவது, மூடநம்பிக்கையை ஒழிப்பது, சாதி மறுத்தல்,

ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ சமூகத்தை உருவாக்குவது, மத மோசடியைத் தோலுரிப்பது, கைம்பெண் மறுமணத்தை ஊக்குவிப்பது, புரோகித மறுப்பை, சாதி மறுப்புத் திருமணங்களை ஊக்குவிப்பது போன்ற சமூக மாற்றச் சிந்தனைகளை தன் படைப்புகள் மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தார் கலைஞர்.

தமிழுணர்வை வளர்ப்பது, பழந்தமிழ் இலக்கியத்தின் மீது ஆர்வத்தை ஏற்படுத்துவது, தமிழ்ப் பண்பாட்டை மீட்பது, ஆரியப்பண்பாட்டை அகற்றுவது ஆகியவையே கலைஞருடைய எழுத்துகளின் மைய இழைகளாகத் திகழ்கின்றன. மக்களை முற்போக்கு உலகு நோக்கி அழைத்துச் செல்வதை நோக்கமாகக் கொண்டிருந்தன.

தமிழை ருசித்து ருசித்துப் பருகியவர் கலைஞர். அண்ணா பிறந்தநாளையொட்டி, 1975ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள், சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற கவியரங்கத்துக்குத் தலைமை வகித்தார் கலைஞர். அப்போது, தமிழைப் போற்றி அவர் எழுதிய கவிதை...

"தமிழே! தேனே! தங்கக்கனியே!
அமிழ்தே! அன்பே! அழகுக்கலையே!
எழிலே! அறிவே! எண்ணச்சுடரே!
மொழியே! புகழே! பொன்னின் மணியே!
திருவே! உருவே! திங்கட்குளிரே!
தருவே! நிழலே! நிழல்தரும்சுகமே!
தாயே"

என்று உருகி உருகி தமிழைப் போற்றுகிறார் கலைஞர்.

பழந்தமிழ் இலக்கியங்கள் மீது மக்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தவும் தமிழ்ப் பண்பாட்டை மீட்கவும் கலைஞர் உருவாக்கிய படைப்புகளுள் முக்கியமானவை, 'குறளோவியம், சங்கத் தமிழ், தொல்காப்பியப் பூங்கா' ஆகியவை.

பழைய இலக்கியங்கள் மீது தானும் சமுதாயமும் ஆர்வம் காட்டக் கலைஞரின் எழுத்துகளே காரணம் என்று எழுத்தாளர் ஜெயகாந்தன் ஒருமுறை கூறினார். "உங்களை போன்றவர்கள் இடையறாது வலியுறுத்தியதால்தான் நாங்கள் திருக்குறள் படிக்கிறோம். பழந்தமிழ்ப் பண்பாடுகளில் தீவிரமாக ஈடுபாடும் ஆராய்ச்சியும் கொண்டவர்களாக இருக்கிறோம். நீங்கள் எழுதிய திரைப்பட வசனங்கள் பலவும் எனக்கு மனப்பாடம்" என்று கலைஞரிடம் ஜெயகாந்தன் நேரில் கூறினார்.

திருக்குறளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்காகக் குறளோவியம் எழுதினார் கலைஞர். குறளோவியம் பற்றிக் குறிப்பிடுகையில், "நிகழ்ச்சிகளைக் காட்சியாக்கி நிழல் தரும் குளிர் தருக்கள் அடர்ந்த நீரோடைத் தமிழிலும், நெஞ்சில் கனலேற்றும் முழவோசைத் தமிழிலும், நீள் விழியில் நதி தோன்றத் தூண்டும் உருக்கமிகு உணர்ச்சித் தமிழிலும் குறட்பாக்களை உங்கள் முன்னால் உலவவிட்டிருக்கிறேன்" என்று கூறியுள்ளார் கலைஞர்.

'புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து'

என்ற குறளுக்குத்தான் முதலில் சொல்லோவியம் தீட்டினார் கலைஞர். 'தன்னைக் காத்த தலைவன், தனக்காகக் கண்ணீர் சிந்தும் அளவுக்கு ஏற்படுகிற களச்சாவினை வீரர்கள், யாசித்தாவது பெறவேண்டும்' - என்பதே இந்தக் குறளின் பொருள். இதற்குக் கலைஞர் சொன்ன விளக்கம் நம் நெஞ்சைத் தொடுகிறது. "களம்பட்டுத் தியாகியாக நான் மாண்டுக் கிடக்க... என் உடல்மீது என் தலைவர் அண்ணா, கண்ணீர் சிந்தும் பேறு பெறவேண்டும் என்ற அவா மிகுதியால் எழுதப்பட்ட முதல் குறளோவியம் இது. ஆனால் நான் நினைத்தற்கு மாறாக நடந்துவிட்டதே! என் அன்புத் தலைவர் எனக்கு முன் மறைந்துவிட்டாரே!" என்று தன் வருத்தத்தைப் பதிவு செய்கிறார் கலைஞர்.

சில திருக்குறள்களுக்குக் கவிதை வடிவில் விளக்கம் அளித்துள்ளார் கலைஞர்.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்

என்ற குறளுக்கு, அழகு தமிழ்க் கவிதையில் கலைஞர் கொடுத்துள்ள விளக்கம் இதோ...

"இன்னா செய்யாமை

இஃதுமோர் ஆமை - ஆனால் நல்லாமை! இதனைக்

கல்லாமை பெரிய தீமை
கன்னமொன்றில் அடித்திட்டால்

இன்னுமொன்றைக் காட்டென்றார் ஏசு"

இப்படி வள்ளுவன் கருத்தை ஏசு பிரான் சொல்லியிருப்பதையும் தன் விளக்கத்தில் பதிவு செய்கிறார் கலைஞர்.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப் புடைத்து"

என்ற குறளை

'நடக்கத்தான் கால் என்போம் - உதைக்க அல்ல

மடக்கத்தான் கத்தியென்றால் தேவையில்லை - பழம் அறுக்கத்தான் கத்தி வேண்டும் - உயிர் பறிக்க அல்ல

வழக்கத்து வாய் வீரம் போலி வீரம் ஆமைபோல ஐம்பொறியும் அடக்க வேண்டும் ;

அதற்காக

ஊமை போல் குருடு போல் செவிடு போல்

ஊர் நடுவில் திரிதல் நன்றா?

என்று தனக்கே உரிய பாணியில் கவிதையாக வடித்துப் படிப்போர்க்கு ஆர்வத்தை ஏற்படுத்துகிறார் கலைஞர்.

சங்க இலக்கியங்கள் மீது இளைய தலைமுறைக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில், சில சங்க இலக்கியப் பாடல்களை, எளிமைப்படுத்தி அவருடைய அழகு தமிழில் கவிதைகளாக வடித்துள்ளார் கலைஞர். அவற்றுள் முக்கியமான ஒன்று, புறநானூற்றில் வீரத்தாய் பற்றி, காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் என்னும் பெண்பால் புலவரின் பாடலை எளிமைப்படுத்தி, கலைஞர் எழுதிய கவிதை.

குடிசைதான் ஓர் புறத்தில்
வரிசையாய் அமைந்திருக்கும்
கூரிய வேல், வாள்
வெம்பகை முடிப்பதற்கும்
வையத்தைப் பிடிப்பதற்கும்
வடித்து வைத்த படைக்கலம்போல்
மின்னும் மிளிரும்....

இப்படித் தொடங்கிச் செல்லும் இக்கவிதையில்,

ஓடி வந்த சிறுவன் ஒருவன், உன் மகன் போர்க்களத்தில் இறந்தான் என்று சொல்கிறான். அதைக் கேட்டு,

ஒருகனம் ஒடிந்து நிமிர்ந்தாள் அக்கிழவி

என்று சொல்கிறார் கலைஞர். மகன் இறந்தான் என்ற தகவல் கேட்டதும் சோகத்தில் ஒடிகிறாள் கிழவி, நாட்டுக்காக மகன் உயிர்த் தியாகம் செய்தான் என நினைத்ததும் அடுத்த கனம் அவள் கம்பீரமாக நிமிர்கிறாள். இதை, சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் என்ற உத்தியில், "ஒருகனம் ஒடிந்து நிமிர்ந்தாள்" என்று மூன்றே சொற்களில் சொல்கிறார் கலைஞர்.

'உன் மகன், முதுகில் ஈட்டி பாய்ந்து இறந்துகிடக்கிறான்' என்று அவன் சொன்னவுடன் உடனே... போர்க்களத்துக்குப் புறப்படுகிறாள் அந்த வீரத் தாய். அங்கு, ஈட்டிக்கு மார்பு காட்டி மகன் இறந்துகிடப்பதைக் கண்டு இதயம் குளிர்கிறாள். இதை,

'எதைக் கண்டாலும் இனிக் கவலை இல்லை
என் மகன் வீரனாய் இறந்தான் என்றாள்!
அறுத்தெறிய இருந்தேன்...
அவன் குடித்த மார்பை - அடடா!
கருத்தெரியப் பொய் சொன்ன கயவன் எங்கே?
வாள் இங்கே... அவன் நாக்கெங்கே?'

என்று எழுதி, தமிழர்தம் வீரத்தை, புறநானூற்றுப் பாடலின் சிறப்பை இளைய தலைமுறைக்கு அறிமுகப்படுத்துகிறார் கலைஞர்.

கலைஞர் தன் கவிதைகளில் வார்த்தைகளை வைத்து விளையாடுவார். கலைஞர் தலைமையில் கவியரங்கம். தலைப்பு "கணக்கு". கலைஞர் வாசித்த தலைமைக் கவிதையின் ஒரு பகுதி இதோ...

**கணக்குகள் பலவிதம்
கணக்குக் கேட்பவர்கள் பலவிதம்
பாட்டாளி வியர்வையிலே
முதலாளி பார்ப்பதுதான் பணக் கணக்கு
கூட்டாளி தன் அன்புக்குக்
கூலியொன்று கேட்பதுதான் பதவிக்
கணக்கு
மந்தையிலே ஆட்டுக் கணக்கு
மாட்டுக் கணக்கு
மொந்தையிலே மட்டும் போடாதே கணக்கு
இருபதும் பதினெட்டும் கூட்டிச் சொல்லல்
மனக்கணக்கு
இருபது பதினெட்டைக் கூட்டிச்
செல்லல் காதல் கணக்கு
இரண்டுக்கு மேல் எப்போதும் வேண்டாம்
குடும்பக் கட்டுப்பாடுக் கணக்கு –இதில்
குசேலனுடன் போட்டியிடல்
கொடுமையின் கணக்கு
மான் போட்டக் கணக்குத் தப்பென்று
வீழ்த்திட்டது வேங்கை
ஏன் போட்டாய் தப்புக் கணக்கென்று
வேங்கையினை வீழ்த்திட்டான் வேடன்
இதுதான் உலகு.**

கலைஞரின் இன்னொரு கவிதையில் காதலனும் காதலியும் பேசிக்கொள்கின்றனர். அதில் டெல்டா பகுதியில் உள்ள ஆறுகளின் பெயர்களை மிக லாவகமாக இடம் பெறச் செய்துள்ளார் கலைஞர். அந்தக் கவிதையின் ஒரு பகுதி இதோ…

"குடமுருட்டி காவிரிப் பெண் விளையாடும் காட்சி கண்டு – காதல்

கொள்ளிடம் இதுதான் என்று வீரசோழனும் வந்தான் ஓடம் போக்கி….

அவள்,

'மண்ணியார் வருகின்றார் மறைந்திடுக அத்தான்' என்றாள்.

வரட்டுமே, அவர் என்ன நம் காதலுக்குக் கல்லணையா

"அவர் நம் காதலை தடுக்க வெண்ணார், உறவை வெட்டார்' என்றான்

இந்த சில வரிகளிலேயே ஏழு ஆறுகளின் பெயர்களைக் குறிப்பிடுகிறார் கலைஞர்.

கலைஞரின் கவிதைகள், உணர்ச்சிச் செறிவும் கருத்தாழமும் நிறைந்தவை. பின் வரும் கவிதையைப் படியுங்கள்…

'பிறையொன்று பொறுத்திருந்து நிலவாகும்

பொறைகொண்டார் பொறுத்திருந்து நிலமாள்வார்

இரையொன்று வருமட்டும் காத்திருக்கும் கொக்கு

அதனைப் பொறையென்று சொல்லாதீர்
தரைமீது அப்பறவை கற்ற சூழ்ச்சி
கண் அடக்கம் இமைக்கதவில்
'நாவடக்கம் வாய்ச்சிறையில்
மூச்சடக்கம் காற்றினிலே
மெய் அடக்கம் கல்லறையில் – நல்ல
மன அடக்கம் அறிவொளியில்.
காற்றின் பெருக்கல் புயலாகும்
நாற்றின் பெருக்கல் பயிராகும் – இனிய
சாற்றின் பெருக்கல் சுவையாகும்
ஆற்றின் பெருக்கல் புனலாகும்'.

இப்படித் தன் கவிதைகளால் நம் நெஞ்சைக் கொள்ளை கொள்வதோடு, நம் சிந்தைக்கு விருந்தும் தெளிவும் அளிக்கிறார் கலைஞர்.

அண்ணா மறைந்தபோது கவிதாஞ்சலி செலுத்தினார் கலைஞர். அதை அவர் பேனாவில் மையிட்டு எழுதவில்லை; தன் கண்ணீரை விட்டு எழுதியுள்ளார்.

உன் கண்ணொளியின் கதகதப்பில் வளர்ந்தோமே?

எம் கண்ணெல்லாம் குளமாக ஏன் மாற்றிவிட்டாய்

நிழல் நீதான் என்றிருந்தோமே - நீ, கடல்

நிலத்துக்குள் நிழல் தேடப் போய்விட்டாயே நியாயந்தானா

கண் மூடிக்கொண்டு நீ சிந்திக்கும் பேரழகைப் பார்த்திருக்கிறேன் - இன்று

மண் மூடிக்கொண்டுன்னை பார்க்கவொட்டாமல் தடுப்பதென்ன கொடுமை

கவிதாஞ்சலியின் ஒவ்வொரு வரியும் இன்று வாசித்தாலும் நம் கண்களைக் குளமாக்கும். அந்த அளவுக்கு உணர்ச்சியின் வெளிப்பாடாக அமைந்துள்ளன.

கலைஞர் எதை எழுதினாலும் எதைப் பேசினாலும் அதில் இலக்கியம் இருக்கும். அரசியல் பேசினால் அதிலும் இலக்கியம் இருக்கும். இலக்கியம் பேசினாலும் அதில் அரசியல் இருக்கும்.

ஒருமுறை, தேர்தல் நேரம். அதிமுகவும் (இரட்டை இலை) காங்கிரசும் (கை) கூட்டணி. சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ் மன்றம் விழாவில் பேசுகிறார் கலைஞர். அரசியல் பேசக் கூடாது என கட்டுப்பாடு. ஒரு மணி நேரம் இலக்கியம் பேசினார் கலைஞர். பேச்சை முடிக்கும்போது, "உங்களுக்கெல்லாம் சாப்பாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நீங்கள் எல்லோரும் சாப்பிட்டுவிட்டு, இலையைத் தூர விசிவிட்டு, கையைக் கழுவுங்கள்" என்று சொன்னார். இதுதான் கலைஞரின் சாதுரியம். இதுதான் கலைஞரின் தமிழாற்றல். இதுதான் கலைஞரின் நாவண்மை.

நன்றி : *தமிழரசு இதழின்*
சிறப்பு வெளியீடான
"இலக்கிய மலர் 2023" என்னும்
நூலிலிருந்து…

ஏப்ரல் 14: டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்கள் பிறந்த நாள்

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பெயரில் இந்தியாவின் முதல் சட்டப் பல்கலைக்கழகம்

- சென்னை, வியாசர்பாடியில், 1972ஆம் ஆண்டில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பெயரில் கலைக்கல்லூரி அமைத்தது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு. இந்தியாவிலேயே அம்பேத்கர் அவர்களின் பெயரால் அமைந்த முதல் கலைக்கல்லூரி இதுதான்.
- முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் 1972ஆம் ஆண்டு மைலாப்பூர் ஹாமில்டன் பாலத்திற்கு டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பெயர் சூட்டினார்.
- 1990ஆம் ஆண்டு அம்பேத்கர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி ஓராண்டு காலம் விழா தமிழ்நாட்டில் கொண்டாட முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டார்.
- சென்னை சட்டக்கல்லூரிக்கு டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி என்ற பெயரைச் சூட்டியதும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான்.
- சேலத்தில், பெரியார் பல்கலைக்கழகத்தில் அம்பேத்கர் அவர்களுடைய பெயரில் ரூ.25 இலட்சத்தில் அறக்கட்டளை ஒன்று தொடங்கப்பட்டு மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.
- இந்தியாவிலேயே முதலாவதாக சட்டப் பல்கலைக்கழகமொன்று தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால்தான் தொடங்கப்பட்டு அதற்கு அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் என பெயரும் சூட்டப்பட்டது.
- 1994ஆம் ஆண்டு, ஆண்டுதோறும் ஒருவருக்கு அம்பேத்கர் அவர்களின் பெயரில் விருது அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 1998ஆம் ஆண்டு அது அமுல்படுத்தப்பட்டதும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சியில்தான்.
- சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.4 கோடி செலவில் டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு மணிமண்டபம் 10.06.2000 அன்று முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

திராவிட இயக்கத்திற்கு புத்துயிர் அளித்த பூமான்

சர். தியாகராயர் தோன்றி, திராவிடப் பெருங்குடி மக்கட்குத் தலைமைப் பூண்டு, அவர்களின் தன்னுணர்விற்கு வழிகோலி, அவர்களின் வாழ்வில் இருந்துவந்த அடிமைத் தனத்தை அகற்றப் பாடுபட்டு, சமுதாயத்துறை, பொருளாதாரத்துறை, அரசியல் துறை ஆகியவற்றில் இடம் பெற்று உழைத்தார்.

நம்முடைய அடிப்படைக் கட்டடம் பலமாக இருக்க வேண்டுமென்று அவர் அல்லும் பகலும் பாடுபட்டார். திராவிட இயக்கத்திற்குப் புத்துயிர் அளித்த பூமான் அவர்.

அவர் களத்திலே தூவிய விதை நன்றாக வளர்ந்திருக்கிறது. அவர் அன்று பறக்கவிட்ட சமுதாயப் புரட்சிக் கொடியின்கீழ் நின்றுதான் நாம் இன்று பணியாற்றி வருகிறோம்.

எங்கு நோக்கினும் திராவிடர் துன்ப வாழ்வில் சிக்கிச் சிதைந்து வந்த அந்தக் காலத்தில்தான் தியாகராயர் தோன்றினார். வேதனை மிகுந்த காட்சியைக் கண்டுள்ளம் வெதும்பினார். சீறிப் போரிட்டுச் சீர்கேட்டை ஒலிக்கச் செயலிலே இறங்கினார். அவரைப் பொறுத்தமட்டும் அவருக்கு ஒரு குறையுமில்லை. மற்ற பிரச்சாரங்களைவிட அறிவுப் பிரச்சாரம்தான் முக்கியமானதென்று தியாகராயர் எண்ணினார். அன்றே அவர் அறப்போரைத் துவக்கினார். அந்த அறப்போர் இன்று வெற்றி பெற்றிருப்பதைக் கண்டு நாமனைவரும் பூரிப்படைகிறோம். இன்றைய தினம் திராவிட இனம் வளர்ந்திருப்பதைக் கண்டு பெருமை அடைகிறோம்.

தியாகராயர் நாம் வெற்றிமேல் வெற்றி பெற வழி காட்டினார். தியாகராயரின் சொற்கள் தென்னாட்டில் மெள்ள, மெள்ள ஏழை, எளியோர் குடிசையில் குடிபுகுந்த பின்னர், மாளிகைகளிலெல்லாம் சென்று மக்கள் மன்றத்திலே புதியதோர் எழுச்சியை உண்டாக்கிவிட்டன. சர். தியாகராயர் புதுமை பல செய்து காட்டினார்.

தியாகராயர் நம்மை விட்டுப்பிரிந்தார். ஆனால் அவரது ஞாபகம் நம்மை விட்டுப் பிரியாது. சர்.பிட்டி.தியாகராயர் அரும்பாடுபட்டு வளர்த்த கொள்கைகளைக் கடைப்பிடித்து அதனின்றும் வளர்ச்சி பெற்று உயர்ந்தோங்கி வந்திருக்கும் திராவிடர் இயக்கம் வெற்றி மேல் வெற்றிபெறும்.

– பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்னை, திருவல்லிக்கேணியில் 30.06.1950 அன்று நடைபெற்ற நினைவுக் கூட்டத்தில் ஆற்றிய உரை.

வெற்றிக் கதைகள்

ஈரோடு மாவட்டம்

மாணவ, மாணவியர்களின் எதிர்கால வாழ்விற்கு அடித்தளமிடும் “இல்லம் தேடிக் கல்வி திட்டம்”

"கேடில் விழுச்செல்வம் கல்வியொருவருக்கு மாடல்ல மற்றை யவை"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப, அழிவில்லாத சிறந்த செல்வம் என்பது கல்விச் செல்வமே, மற்றைய பொன், பொருள், மண் என்னும் செல்வங்கள் ஒருவனுக்கு சிறந்த செல்வம் ஆகாது என்பதை கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் “இல்லம் தேடிக் கல்வி” திட்டத்தை 27.10.2021 அன்று விழுப்புரம் மாவட்டம், முதலியார்குப்பத்தில் தொடங்கி வைத்தார்.

கொரோனா என்ற பெருந்தொற்றுக் காலத்தில் அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டார்கள் என்று சொன்னாலும், அதிகமாகப் பாதிக்கப்பட்டது மாணவர்கள்தான். பள்ளிக்கு வந்து கல்வி கற்று வந்த அவர்களை வீட்டுக்குள் முடக்கி விட்டது கொரோனா என்ற பெருந்தொற்றுக் காலம். பள்ளிக்கூடம் என்ற பரந்த வெளியைப் பயன்படுத்த முடியாமல் வீட்டுக்குள் இருந்ததே குழந்தைகளின் மனதைப் பாதித்துவிட்டது.

இந்தப் பாதிப்பை சரிசெய்யக்கூடிய வகையில், பள்ளிக்கு வந்து படிக்கக்கூடிய மாணவர்களுக்கு மேலும் கூடுதல் நேரத்தை பள்ளி நேரம் போலவே படிப்பில் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதுதான் இந்த ‘இல்லம் தேடிக் கல்வி” திட்டம். மாணவர்களின் இல்லத்திற்கு அருகிலேயே - இதற்காக தனியாக இடங்கள் தேர்வு செய்யப்படுகிறது. நாள்தோறும், ஒவ்வொரு நாளும் மாலையில் ஒரு மணி நேரமோ - இரண்டு மணி நேரமோ வசதிக்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப ஆசிரியர்கள் வந்து மாணவர்களைப் படிக்க வைப்பார்கள். மாணவர்கள் வீட்டிற்கு அருகிலேயே இதற்காக தனியாக இடங்கள் தேர்வு செய்யப்படுகிறது. நாள்தோறும் மாலையில் ஒரு மணி நேரமோ, இரண்டு மணி நேரமோ தலைமை ஆசிரியர்களின் மேற்பார்வையில் - தன்னார்வலர்களின் ஒத்துழைப்போடு இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

பள்ளியோடு ஆசிரியர்களின் கடமை முடிந்துவிட்டது என்று கருதாமல் வீட்டுக்கும் வந்து மாணவர்களுக்கு கற்றுத் தரக்கூடிய கடமையின் தொடர்ச்சிதான் “இல்லம் தேடிக் கல்வி” என்கிற திட்டமாகும். எப்போதுமே ஏதாவது ஒரு நெருக்கடி ஏற்பட்டால்தான் புதிய பாதை அதன் மூலமாகத் திறக்கும். அப்படி கொரோனா என்ற நெருக்கடியில் உதயமானதுதான் இந்த ‘இல்லம் தேடிக் கல்வி’ என்ற திட்டமாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கொரோனா என்ற பெருந்தொற்று குறைந்ததன் காரணமாக பல்வேறு தளர்வுகளை தொடர்ந்து அறிவித்து வருகிறார்கள். அதில் முதலாவது, கல்வி நிலையங்கள்; மற்றும் கல்லூரிகளைத் திறக்க உத்தரவிட்டார். அதைத் தொடர்ந்து 9, 10, 11, 12 ஆகிய வகுப்புகள் திறக்கப்பட்டன. அடுத்ததாக கடந்த நவம்பர் 1 முதல், ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை திறக்கப்பட்டு, மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

இந்த ஊரடங்குக் காலத்தில் பள்ளிக்கு வந்து பயிலக்கூடிய சூழல் இல்லாவிட்டாலும் ஆன்லைன் வகுப்புகள் நடத்தப்பட்டது. ஆனால், நேரடிக் கல்வி தரும் பயனை ஆன்லைன் வகுப்புகளால் தரமுடியாது என்பதை கருத்தில் கொண்டு "இல்லம் தேடிக் கல்வி" திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

கொரோனாவால் இழந்த காலத்தை ஈடுகட்ட அதிகப்படியான முயற்சிகளை மாணவர்கள் செய்தாக வேண்டும். பள்ளி நேரத்தில் மட்டுமே மாணவர்களைப் பழைய நிலைக்கு மடைமாற்றம் செய்துவிட முடியாது. அதனால்தான் பள்ளி நேரம் முடிந்த பிறகும் சில மணிநேரங்கள் மாணவர்களுக்குப் பயிற்சிகள் தரும் வகையில், இதனை ஆசிரியர்களோடு சேர்ந்து தன்னார்வத்தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் செயல்பட முன்வந்துள்ளனர். தனித்துவம் கொண்ட இந்தத் திட்டம், வகுப்பறையைப் பள்ளிகளுக்கு வெளியேயும் நீட்டிக்கச் செய்யும் மகத்தான முயற்சியாகும். இத்திட்டம் மற்ற மாநிலங்களுக்கும் முன்னோடியாக உள்ளது. படித்த இளைஞர்கள் தங்களது ஓய்வு நேரத்தை இதில் பங்கெடுப்பதன் மூலமாகப் பயனுள்ளதாக மாற்றலாம்.

உயர்கல்வித் துறையாக இருந்தாலும், பள்ளிக்கல்வித் துறையாக இருந்தாலும், அனைவருக்கும் கல்வியை, உன்னதமானக் கல்வியை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பார்போற்றும் பள்ளிக்கல்வித் துறையின் இந்தத் திட்டத்தின் வழியாக தமிழ்நாட்டைக் கல்வியில் சிறந்த தமிழ்நாடாக விரைவில் மாற்ற முடியும். பள்ளிக்கும் இல்லத்துக்குமான இடைவெளி குறையும். இல்லங்களும் பள்ளிகள் ஆகும்.

பள்ளிகளையும் இல்லங்களாக நினைத்து மாணவச் செல்வங்கள் பயனுற வேண்டும் என்ற அடிப்படையில் இத்திட்டத்தினை, ஈரோடு மாவட்டத்தில் 01.12.2021 அன்று மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள் ஈரோடு ஊராட்சி ஒன்றியம், கூரபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தொடங்கிவைத்தார்.

தன்னார்வலர்களாக செயல்பட உள்ளவர்கள் இணையபக்கத்தில் தங்களை பதிவு செய்து இத்திட்டத்தில் இணைந்து வருகின்றனர். அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் 10,615 நபர்கள் இல்லம் தேடிக் கல்வித் திட்ட தன்னார்வலர்களாக செயல்பட பதிவு செய்துள்ளனர். முதற்கட்டமாக 1,250 நபர்கள் அழைக்கப்பட்டு அவர்களில் திறனறித் தேர்வு மற்றும் குழு விவாதம் மூலம் 738 நபர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இத்தன்னார்வலர்களுக்கு குழந்தைகளுக்குக் கற்பித்தல் - கற்றல் பொருட்களைப் பயன்படுத்துதல் சார்ந்து தீவிரமான மற்றும் விரிவானப் பயிற்சி அளிக்கப்பட்டு ஆரம்பப் பள்ளி அளவில் 341 மையங்களும், உயர் தொடக்க நிலை அளவில் 194 மையங்களும் என 535 மையங்கள் செயல்பட்டு வருகிறது. மேலும், ஆரம்பப் பள்ளி அளவில் 5135 மாணவர்களும், உயர் தொடக்க நிலை அளவில் 2685 மாணவர்களும் என 7820 மாணவர்களும் பயின்று வருகிறன்றனர். மாவட்டத்திலுள்ள அனைத்து குடியிருப்பு பகுதிகளுக்கும் இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வரும், ஈரோடு ஊராட்சி ஒன்றியம், கூரப்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த, மாணவன் மனோஜ் குமார், மாணவி ஜெயபிரியா ஆகியோரின் பெற்றோர் மகிழ்ச்சியுடன் கூறியதாவது,

எனது பெயர் அங்கம்மாள் (வயது 34). கணவர் பெயர் வடிவேல். நாங்கள் இருவரும் கூலி

வேலை செய்து வருகிறோம். கூரப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் எனது மகன் 7ஆம் வகுப்பும், மகள் 5ஆம் வகுப்பும் பயின்று வருகின்றனர். கொரோனா பெருந்தொற்று காலத்தில் பள்ளிகள் திறக்கப்படவில்லை. பள்ளியில் எங்கள் குழந்தைகளுக்கு புத்தகம் வழங்கப்பட்டது. இக்காலத்தில் எங்கள் குழந்தைகள் கல்வி தொலைக்காட்சியின் மூலம்தான் பாடம் பயின்று வந்தனர். நாங்களும் அதிகம் படிக்காதவர்கள்.

தற்பொழுது பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளது. இருப்பினும் எங்கள் வீட்டுப் பாடங்களில் ஏதேனும் சந்தேகம் கேட்டால் எங்களுக்கு விளக்கம் அளிக்கத் தெரியாது. தற்பொழுது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்கள் குழந்தைகள் பள்ளி நேரத்தைத் தவிர, வீட்டில் உள்ள நேரம் பயனுள்ளதாக அமையும் வகையில் "இல்லம் தேடி கல்வி" என்ற சிறப்பான திட்டத்தினைத் தொடங்கி வைத்துள்ளார். இத்திட்டத்தின் மூலம் திரு.பூமணி என்ற தன்னார்வலர்; எங்களது வீட்டிற்கு அருகிலேயே மாலை நேரங்களில் ஒன்று முதல் ஒன்னரை மணிநேரம் பாடம் எடுத்து வருகிறார்.

இந்த வகுப்பு கற்பித்தல் தவிர செயல்முறை விளக்கம் மூலம் பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது. எங்கள் வீட்டின் அருகில் குழந்தைகள் என சுமார் 20 குழந்தைகள் பயின்று வருகின்றனர். இதனால் எங்கள் குழந்தைகளும் ஆர்வத்துடன் பயின்று வருகின்றனர். எங்களைப் போன்ற ஏழை, எளிய பெற்றோரின் குழந்தைகளும் தடையில்லாக் கல்வி பயின்று வர 'இல்லம் தேடிக் கல்வி" திட்டத்தினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வரும், ஈரோடு ஊராட்சி ஒன்றியம், கூரப்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த, மாணவன் சிவகௌசிகன் (வயது 14) என்பவர் மகிழ்ச்சியுடன் கூறியதாவது,

நான் கூரப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 8ஆம் வகுப்பு பயின்று வருகிறேன். எனது பெற்றோர் விவசாயக் கூலி தொழில் செய்து வருகின்றனர். கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் பள்ளிகள் திறக்கப்படாததால், வீட்டில் இருந்தபடியே கல்வி கற்று வந்தேன். என்னதான் வீட்டில் இருந்தபடியே கல்வி கற்றாலும், பாடங்களில் உள்ள சந்தேகங்களை முழுமையாகத் தெரிந்து கொள்ள இயலவில்லை. தற்பொழுது பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "இல்லம் தேடிக் கல்வி" திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

சிறப்பு ஆசிரியர்கள் மூலம் எங்கள் பகுதியில் மாலை நேரங்களில் வகுப்புகள் எடுக்கப்பட்டு வருகிறது. எனக்குப் பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களை சிறப்பு ஆசிரியர் மூலம் தெளிவுபடுத்தி வருகிறேன். பள்ளியைத் தவிர வீட்டிலும் மாணவர்களின் நேரங்கள் சிறப்பானதாக அமைய "இல்லம் தேடிக் கல்வி" திட்டத்தினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வரும், ஈரோடு ஊராட்சி ஒன்றியம், கூரப்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த, மாணவன் தினேஷ்குமார், மாணவன் கௌதமன் ஆகியோரின் பெற்றோர் மகிழ்ச்சியுடன் கூறியதாவது,

எனது பெயர் வளர்மதி (வயது 40). எனது கணவர் பெயர் சாமியப்பன். எனது கணவர் டீ கடை வைத்து வருமானம் ஈட்டி வருகிறார்.

செல்வன். கோகுலன், செல்வன். [illegible],
த/பெ சாமியப்பன், தாய் பெயர் : [illegible]
ஈரோடு ஊராட்சி ஒன்றியம், கூரப்பாளையம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி

எனக்கு 2 மகன்கள் உள்ளனர். எனது பெரிய பையன் 8ஆம் வகுப்பும், சிறிய பையன் 5ஆம் வகுப்பும் பயின்று வருகின்றார்கள். எனது பெரிய பையன் மாற்றுத்திறனாளி ஆவார். கொரோனா தொற்று காலத்தில் பள்ளிகள் கடந்த ஒன்னரை ஆண்டுகள் திறக்கப்படாமல் இருந்து, தற்பொழுது திறக்கப்பட்டுள்ளது. கொரோனா தொற்று பரவல் காரணமாக சுழற்சி முறைகள் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகிறது. எனவே, எனது குழந்தைகள் வாரத்தில் 3 நாட்கள் வீட்டில் இருந்தபடியே பயின்று வருகின்றனர்.

மாணவ, மாணவியர்கள் தடையின்றிக் கல்வி பயிலவும், அவர்கள் பள்ளி நேரத்தைத் தவிர வீட்டில் உள்ள நேரம் பயனுள்ளதாக அமையும் வகையிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "இல்லம் தேடி கல்வி" திட்டத்தினைத் தொடங்கி வைத்துள்ளார். இதன்மூலம் மாணவர்கள் பள்ளிக்குச் செல்லாமலேயே பாதுகாப்புடன் தங்களது வீட்டின் அருகிலேயே பாடங்களைக் கற்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இத்தகைய சிறப்பானத் திட்டங்கள் மூலம் மாணவ, மாணவியர்களின் எதிர்கால வாழ்விற்கு அடித்தளமிட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம் என தெரிவித்தார்கள்.

தொகுப்பு :
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு மாவட்டம்.

படமும்/
செய்தியும்

தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களின் 169ஆவது பிறந்தநாள்

தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களின் 169ஆவது பிறந்தநாளையொட்டி 19.02.2023 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரது திருவுருவப்படத்திற்கு செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. த.மோகன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

"மக்களைத் தேடி மருத்துவம்" ஏழை மக்களுக்கான மகத்தான திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் தமிழக மக்களின் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். "ஸ்டாலினின் ஏழு உறுதிமொழிகள்" என்ற 10 ஆண்டு தொலைநோக்குத் திட்டத்தில் "அனைவருக்கும் நல்வாழ்வு" என்பது ஒரு முக்கிய உறுதி மொழியாகும். அதனை நிறைவேற்றும் வகையில் "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 05.08.2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி ஒன்றியம், சாமணப்பள்ளி என்ற மலை கிராமத்திற்கு நேரில் சென்று தொடக்கி வைத்தார்.

இந்தியாவிற்கே ஒரு முன்னோடித் திட்டமாக விளங்கும் வகையில் "மக்களைத் தேடி மருத்துவம்" என்னும் மகத்தானத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இரத்த அழுத்தம், நீரிழிவு, சிறுநீரக பிரச்சினை, பிசியோதெரபி சிகிச்சை, புற்றுநோய் பாதிப்பு உள்ளிட்ட தொடர் மருத்துவச் சிகிச்சை தேவைப்படுபவர்கள் மருத்துவமனைகளுக்கு தேடி வரக்கூடிய நிலையினை மாற்றி மருத்துவப் பணியாளர்கள் மக்களைத் தேடிச் சென்று அவர்களுக்கு பரிசோதனைகளைச் செய்து மருந்து மாத்திரைகள் உள்ளிட்ட மருத்துவச் சேவை வழங்குவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டத்தில் பொது சுகாதார பணியாளர்கள் மற்றும் மருத்துவ தன்னார்வலர்கள் பங்கேற்று மருத்துவச் சேவை ஆற்ற உள்ளார்கள். முதல் கட்டமாக சில அவசிய மருத்துவ சேவைகள் வழங்கப்படுகிறது. பரீட்சார்த்த அடிப்படையில் தொடங்கப்பட்டுள்ள இத்திட்டத்தில் முதல்கட்டமாக 1,264 பெண் சுகாதாரத் தன்னார்வலர்களும், 50 பிசியோதரபி மருத்துவர்களும், 50 செவிலியர்களும் இல்லம் தேடி வரும் இந்த சேவையில் ஈடுபட்டு வருகிறார்கள். பரீட்சார்த்தமாக தமிழகத்தில் சில பகுதியில் தொடங்கப்பட்டுள்ள இத்திட்டமானது, இந்த ஆண்டு இறுதிக்குள் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும், இத்திட்டத்திற்காக ரூ.242 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார். இந்த ஆண்டு இறுதிக்குள் சுமார் 35 இலட்சம் குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற உள்ளனர்.

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டாரத்தில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் 05.08.2021 அன்று தொடங்கப்பட்டுள்ளது. "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தில் வீடுகளுக்குச் சென்று மருந்து, மாத்திரைகள் வழங்கும் களப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் பிரபுசங்கர், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.வி.செந்தில்பாலாஜி அவர்கள் துவக்கி வைத்தார்.

கரூர் அரவக்குறிச்சி வட்டாரத்தில் இதுவரை இரத்தக் கொதிப்பு உள்ளவர்கள் 58,903 நபர்களுக்கும், நீரிழிவு (சர்க்கரை) நோய் உள்ளவர்கள் 41,652 நபர்களுக்கும், இரத்தக்கொதிப்பு மற்றும் சர்க்கரை நோய் இரண்டும் உள்ளவர்கள் 28,035 நபர்களுக்கும், அவர்களின் வீடுகளுக்குச் சென்று பரிசோதனைகள் செய்து 2 மாத காலத்திற்கான மருந்து மாத்திரைகளும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 4,370 நபர்களுக்கு பிசியோதெரபி சிகிச்சைகளும், கேன்சர் மற்றும் தோல் வியாதி, மிகவும் முதியவர்கள் என 3,835 நபர்களுக்கு ஆதரவு சிகிச்சையும் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டாரத்தில் பயன்பெற்ற பொதுமக்கள் தெரிவித்ததாவது :

எனது பெயர் திரு. நல்லான், எனக்கு 75 வயசாச்சு, நான் சீத்தப்பட்டி பக்கத்துல இருக்க பழைய காலனியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர், திருமணமாகி தனியாக உள்ளனர், எனக்கு 7 ஆண்டுகளாக பிரஷர் உள்ளது 100 நாள் வேலைக்கு சில நேரங்களில் செல்வேன், மலைக்கோவில்

திரு. நல்லான்

ஊரிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் போய் பிரஷர் மாத்திரை வாங்குவேன், மாத்திரை வாங்குவதற்கு செல்லும் அன்றைக்கு என்னால் வேலைக்குப் போக முடியாது. நாலு நாளைக்கு முன்னாடி நர்ஸ் அம்மா எங்க வீட்டுக்கு வந்தாங்க வந்து பிரஷர் செக் பண்ணிட்டு இரண்டு மாதத்துக்கு வேண்டிய மாத்திரை கொடுத்தாங்க. இனிமே நீங்க ஆஸ்பத்திரிக்கு வரத் தேவையில்லை மாண்புமிகு முதலமைச்சர் “மக்களைத் தேடி மருத்துவம்” திட்டம் கொண்டு வந்திருக்காங்க அதனால நாங்களே வந்து உங்களுக்கு செக் பண்ணி மாத்திரை கொடுத்துடுவோம், நேர நேரத்துக்கு தவறாமல் மாத்திரை சாப்பிடுங்கன்னு சொன்னாங்க. ஏழை, எளிய மக்கள் சிரமப்படக் கூடாது என்று அவர்களுக்கு உதவுவதற்காக நிறைய திட்டங்களைக் கொண்டு வந்த முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு கோடான கோடி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தின்கீழ், பயன்பெற்ற பொதுமக்கள் தெரிவித்ததாவது :

எனது பெயர் திருமதி குஞ்சரம், எனக்கு 45 வயதாகிறது, நான் சித்தர்பட்டி காலனியில் வசித்து வருகிறேன், சுமார் ஒரு பத்து வருஷமாக சர்க்கரை நோயால் அவதிப்பட்டு வருகிறேன், சர்க்கரை நோயால் என்னால் வேகமாக நடக்க முடியாது. எனது வீட்டுக்காரர் சுப்பிரமணி கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு ஒரு சிறிய ஆக்சிடெண்டில் நடக்க முடியாமல் இருக்கிறார். நான் மலைக்கோவிலூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சென்று சர்க்கரை மாத்திரை பெற்று வருவேன். இரண்டு மாதமாக என்னால் போக முடியல, இரண்டு நாளைக்கு முன்னாடி நர்ஸ் அம்மா எங்க வீட்டுக்கு வந்தாங்க, வந்து எனக்கு இரத்த பரிசோதனை எல்லாம் எடுத்து பார்த்துட்டு இரண்டு மாதத்துக்குத் தேவைப்படுகின்ற மாத்திரை கொடுத்துவிட்டுப் போனாங்க, வீட்டுக்கு வந்து மாத்திரை கொடுக்கறீங்களா என்ன விஷயம் என்று கேட்டேன்.

திருமதி குஞ்சரம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்கள் உங்களை மாதிரி சர்க்கரை வியாதி, இரத்தக் கொதிப்பு இருக்கின்றவர்களுக்கு வீட்டுக்கே வந்து டெஸ்ட் பண்ணி மாத்திரை கொடுக்கணும் என்று சொல்லி திட்டம் கொண்டு வந்திருக்கிறார் என்று சொன்னாங்க, 100 நாள் வேலைக்குக் கூட போக முடியாம சிரமப்பட்ட எனக்கு வீடு தேடி வந்து என்னை பரிசோதனை பண்ணிட்டு மாத்திரை கொடுத்துட்டு போற இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த கொண்டுவந்த முதலமைச்சர் ஐயா அவர்கள் மகராசனா இருக்கணும் அவருக்கு கோடான கோடி நன்றியைத் தெரிவிக்கிறேன்.

“ஒரு வயிற்றில் பிறப்பதற்கு அவ்வயிற்றில் இடம் இல்லை அதனால் ஒரு கோடி தாய் வயிற்றில் பிறந்திட்ட உடன்பிறப்புகள் நாம்” என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாக்கினை நிறைவேற்றும் வகையில் தமிழக மக்களை உடன்பிறப்புகள் ஆக ஏற்று இந்தியாவிற்கே முன்னோடியாக உயிர்காக்கும் “மக்களைத் தேடி மருத்துவம்” திட்டத்தினைக் கொண்டுவந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கரூர் மாவட்ட மக்கள் கோடான கோடி நன்றியைத் தெரிவித்தார்கள்.

தொகுப்பு :
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
கரூர் மாவட்டம்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களை, 28.02.2023 அன்று, புதுதில்லியில் உள்ள, லோக் கல்யாண் மார்க் இல்லத்தில், மாண்புமிகு இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் மரியாதை நிமித்தமாகச் சந்தித்து திருவள்ளுவர் சிலையினை நினைவுப் பரிசாக வழங்கினார்.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

Tamilarasu

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 08.02.2023 அன்று திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராம், இந்து கல்லூரியில் நடைபெற்ற விழாவில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தின்கீழ், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 உதவித்தொகை வழங்கும் “புதுமைப்பெண்” திட்டத்தில் மேலும், 1,04,347 மாணவிகள் பயன்பெறும் வகையில் புதுமைப்பெண் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினைத் தொடங்கி வைத்து, 10 மாணவிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார்.

Published by D.MOHAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : D.MOHAN, I.A.S.,